சீறிச் சினந்த

# செவ்விழி

வரலாற்றுப் புதினம்



இராச. வேதாந்தம்

# சிறிச் சினந்த செவ்விழி

இராச. வேதாந்தம்

மின்வாரியத்
தமிழார்வலர் தமிழ்ப்பணி அறக்கட்டளை,
கடலூர்.

# நூலைப்பற்றி

(Bibliographical Data)


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | சீறிச் சினந்த செல்விழி. |
| ஆசிரியர் | : | இராச. வேதாந்தம்,<br>B-4, சுமங்கலா அப்பார்ட்மெண்ட்,<br>36, வேணுகோபாலபுரம், நங்கநல்லூர்,<br>சென்னை - 600 061.<br>பேசி : 044 - 22328629. |
| பொருள் | : | வரலாற்றுப் புதினம். |
| பதிப்பு | : | முதற் பதிப்பு, நவம்பர் - 2004. |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| தாள் | : | சேசசாயி 14.4 கி.கி. |
| எழுத்து | : | 12 புள்ளி |
| நூல் அளவு | : | டெமி (Demmy) 1x8 |
| பக்கம் | : | X + 164 = 174 |
| விலை | : | உருபா **55-00** |
| வெளியீடு | : | மின்வாரியத் தமிழார்வலர் தமிழ்ப்பணி அறக்கட்டளை,<br>49, துரைசாமி நகர், கடலூர் - 607 001.<br>பேசி : 04142 - 222444. |
| ஒளியச்சு | : | திரையன் கணினியகம்,<br>6, ஏ.எல்.சி. வணிக வளாகம், பாரதி சாலை,<br>கடலூர் - 607 001.<br>பேசி : 94435 - 77036. |
| முகப்பு | : | பா. இராவணன். |
| அச்சிட்டோர் | : | யுனைட்டெட் பைண்ட் கிராபிக்ஸ்,<br>மைலாப்பூர், சென்னை. 600 004.<br>பேசி : 044 - 24661807. |

# ஆய்வுரை

இயற்கையும் இலக்கியமும் இன்பம் பயப்பன. இயற்கை அழகைக் கண்டு களிக்கப் புறக்கண் வேண்டும். இலக்கிய இன்பம் பெறச் செவிவழியான சிந்தனை இருந்தால் போதும். இயற்கை தரும் புற அழகைவிட இலக்கிய இன்பம் அசைபோட அசைபோட அற்புத சுகமளிக்கும்.

இலக்கியம் பண்பாட்டு மையம், வரலாற்றுச் சுருக்கம், வாழ்க்கை நெறியின் குறியீடு. சுவை கருதிக் கற்பனை நயம் ஊடு பாவுமாக உலா வரும். அதுதான் நேர்த்தி.

இலக்கியம் சமைப்போரைப் படிப்பாருக்குப் பிடிக்கும். நான் ஒரு தும்பி. இலக்கியத்தில் தோய்ந்த என் நெஞ்சம் இனிமையாகவே இருக்கும். அதனால் எழுத்தாளர்களைப் பிடிக்கும். நண்பர்களும், அறிமுகமானவர்களும் படைப்பாளிகள் என்றால் இரட்டிப்பு மகிழ்ச்சி. அந்த வகையில் ஒத்த சிந்தனையுடைய நண்பர், பொறிஞர் உயர்திரு வேதாந்தம் அவர்கள் படைத்துள்ள புதினம் என்னை ஈர்த்தது.

சங்ககால வாழ்க்கை முறையின் வரலாற்றை, பண்பாட்டை ஆளுமையை, கடல் போன்ற வரலாற்று உண்மைகளைச் சிறு குவளைக்குள் அடக்கும் பணியில் தனது அயரா முயற்சியைச் செலுத்திச் சிற்பி செதுக்கிய கற்சிலையாய் ஒரு புதினம் படைத்துள்ளார். அவரது முயற்சிக்குப் பாராட்டுக்கள். அவரது சிந்தனைப் போக்கு மிகவும் செழுமை கொண்டதாக உள்ளதால் வாழ்த்துக்கள் பலப்பல. வெற்றியின் படிக்கட்டுகளைத் தொட முயன்றுள்ளார். வெற்றிக்கு மொழிவளம் கை கொடுத்துள்ளது.

தமிழை ஆண்டுள்ள பாங்கைப் பார்க்கும் போது தமிழாய்ந்த நற்றமிழராய் விளங்குகிறார். நயமிகு சொல்லாட்சி, நல்ல தமிழ்ப் பெயர்கள். இம்மா ஞாலத்தை ஆளுமை செய்த ஒருத்தியை முதன்மைப்படுத்தி மாண்புறு செயல்களை அவள் மூலம் நடத்திக்காட்டித் தென்கோடி

கபாடபுரத்திலிருந்து புறப்பட்ட வேங்கைப் புலியாய், நெஞ்சுரம் மிக்க செஞ்சூடராய், வெற்றியை மட்டுமே கண்ட வீரமாதேவியாய், அருள்மழை பொழியும் அன்னபூரணியாய், அவனிக்கே அன்னை மாகாளியாய் உச்சியின் நுனிக்கே கொண்டு சேர்த்துள்ளார். பெண் இனத்தின் பெருமைக்கு ஒரு மைல்கல் இவரது படைப்பு.

நூலாசிரியரின் நோக்கமே தமிழும், தமிழன்பர்கள் யாவரும் உயர்வாகப் போற்றப்பட வேண்டும் என்பதுதான்! ஆனால் அவரையும் (அவரது சிந்தனையையும்) தாண்டிப் பெண்ணின் வீரமும் அவளது ஈரநெஞ்சமும், அருளாட்சியும் நூல் முழுவதும் விரவிக் கிடப்பதனைக் காணமுடிகிறது.

உலகத்திலுள்ள சமயம் சார்ந்த கடவுள்களை மனிதன்தான் படைத்து, காத்து, ஆராதனை செய்து அடிமையாகி வாழ்கிறான். இந்த உண்மையை நூலாசிரியர் மெய்ப்பிப்பதற்காகவோ அல்லது வலியுறுத்துவதற்காகவோ இப்புதினத்தைப் படைத்துள்ளாரோ என நான் எண்ணுகிறேன்.

அரசிளங்குமரியாய்க் களத்தில் தோன்றிக் குடிபுறங்காத்து ஓம்பிக் குலமகளாய் வளர்ந்து, தன்மானச் சிங்கமாய் வீறிட்டெழுந்து, வீரக்கழலை விந்தியம் தாண்டி ஆழப்பதித்து, கங்கையையும் கடந்து இமயமலை உச்சியை எட்டிப் பார்த்து வீர மாகாளியாய் விசுவரூபம் கொண்டு, மனையரசியாய், விசாலாட்சியாய், காளியாய், காமாட்சியாய், மீனாட்சியாய் எல்லாமாகிய அன்னபூரணியாய் ஆதிக்கம் செலுத்தும் ஆற்றலைப் பெண் ஒருத்திக்குப் படைத்த பெருமை நூலாசிரியரைச் சேரும். பெண்ணிலிருந்து தான் எல்லாம் எனும் இயற்கை நியதியை நூல் முழுக்கப் பேசுகிறார்.

போர் அறம் தான் பெரும்பகுதி பேசப்படுகிறது என்றாலும் இல்லறமாம் நல்லறமும் ஆங்காங்கே பெருமை பெறுகிறது. களவியலும் உண்டு. தலைவிக்காகத் தோழி காதலனிடம் தூது செல்வதும், கசப்புகள் இல்லாது காதலர் சேர்வதும், பெற்றோர், உறவினர், நாட்டார்முன் திருமணம் நிறைவேறுவதும் தடம் மாறாது கொண்டு செல்லும் பாங்கு ஓங்கி நிற்கிறது.

வீரத்தின் விளைநிலமாய்க் காப்பிய நாயகியைக் காதலில் சிக்கவைத்தவர் காமக்குட்டையில் தள்ளாமல் காத்துள்ளார். தமிழர் பண்பாட்டின் தளம் வலுப்படுத்தப் பட்டுள்ளது.

காதல் நாயகன் கண்ணில் படுகிறான்; இமை மூடித் திறக்குமுன் காணாமற் போய்விடுகிறான். வீரமாதேவிக்கு ஏற்றவனா அல்லது அல்லிராணியின் ஆணைக்குட்பட்ட கணவனாயிருப்பானா என்றறிய ஆவல் உண்டாகும் தானே! வீரநாச்சியின் நாயகன் ஆட்டுக்குத் தாடியாய் இருக்கக் கூடாது. குறைந்த அளவு கொம்பாகவாது இருத்தல் அவசியம். நகைச்சுவை நாடகங்களில் வரும் 'தேநீர்க் குடுவை' கணவனாய்ப் படைக்கப்படவில்லை என்பது ஆறுதல். பாண்டிய நாட்டெல்லையைத் தாண்டி வடக்கே பயணித்த கயல்விழியின் வீரப்பாய்ச்சலும், வெற்றிக் கனிகளும் இமயம் முதல் குமரி வரை ஒரு குடைக்குள் கொண்டுவந்த ஆற்றலும் சுதந்திர இந்தியாவைவிடப் பெரிய நாட்டை ஆட்சி செய்த ஆளுமையும் நூலாசிரியர் பேராசையின் பிழிவு! வாழ்க!

*சீனி. சிவானந்தம்,*
வழக்குரைஞர்.

சென்னை.

# என்னுரை

எட்டுத் தொகை, பத்துப் பாட்டு நூல்களே சங்க இலக்கியங்களாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளன. இவ்விலக்கியங்கள் இயற்றப்பட்ட கால வரையறையோ, இயற்றியோர் பற்றிய வரலாறோ இதுதான் என்று உறுதிபட உரைத்தற்கு எந்த வாயிலும் இல்லை. பாடியோர் பல்லோர்; பாடப்பட்ட பொருள்களும் பலப் பல.

அக்காலத்தே நிகழ்ந்த அருஞ்செயல்கள் பலவும் இச்சங்க இலக்கியங்களில், பன்மலர்ப் பூங்காவில் ஆங்காங்கே படர்ந்தொளிரும் வண்ண மலர்களைப் போல் பளபளக்கின்றன. தமிழ் ஆர்வலர் பலர், சில பூக்களை இணைத்துச் சிறு நூல்களாக எழுதிச் சிறு சிறு பூச்சரங்கள் தொடுத்து இருக்கின்றனர்; இன்றும் தொடுத்து வருகின்றனர். அதே ஆர்வத்தில் எழுந்ததே இச்சிறு நூல். மாலை தொடுத்துவிட்டேன் என்று மகிழ்தல் இல்லை. இஃது என்றன் சிறு முயற்சி; அவ்வளவே.

இந்நூலில் நான் எடுத்துக் கொண்ட பொருள் பற்றி, என்னிலும் மேலாகக் கதை கூறு கற்பனை வளத்தால் திறம்படப் பிறர் எடுத்துக் கூறல் இயலும். என் ஆசை எல்லாம் தமிழின் தகு நிலையையும் தமிழினப் பெருமையையும் ஏற்றுப் போற்றுவதாக எந்நூலும் இருக்க வேண்டும் என்பதே.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கும் முன் தோன்றிய மூத்த குடி நம் தமிழ்க் குடி என்று நாம்

நமக்குள் முழங்கிக் கொண்டிருந்தோம். அந்த முழக்கம் இன்று தமிழரிடை இல்லை. காரணம், வரலாற்றுப் பதிவு தமிழரிடை வழிவழியாய் இல்லாததால் வாயிழந்து நிற்கிறோம்; தமிழன் என்ற உணர்வு மெல்லத் தளர்ந்து வருவதைக் காண்கிறோம்.

சில பத்தாண்டுகளுக்கு முன்னர்த் தமிழர் வரலாற்றைத் தெரிந்து கொள்ள ஏதுவாய்த் திருவாளர்கள் கல்கி. கிருட்டிணமூர்த்தி, அகிலன், இராமநாதன் போன்றோர் வரலாற்றுப் புதினங்களை வழங்கி மக்கள் ஆர்வத்தை வளர்த்தனர். அவர்கள் எழுதிய தொடர் கதைகள், நூல்கள் எல்லாம் அடித்தளங்களாக அமைந்து மக்கள் தமிழ் வரலாற்று நூல்களைப் படிக்க அன்று ஆர்வம் ஊட்டியது மகிழ்ச்சியான செய்தியே! ஆனால், இன்று?

வரலாற்றுப் புதினங்கள் புனைந்தவர் எல்லோரும் சங்க காலத்திற்கும் பிற்பட்ட கால வரலாற்றையே தங்கள் கதைக் களமாகக் கொண்டனர். எந்த ஒரு நூலும் சங்க காலத்தைச் சார்ந்தது இல்லை. அந்தக் குறை நெடுங்காலமாக என்னுள் ஒரு நெருடலாகவே இருந்து வருகிறது. அந்த நெருடலின் வெளிப்பாடே இச்சிறு முயற்சி.

சங்க கால இலக்கியங்களில், பன்னூறு வேந்தரும், வேளிரும், சிற்றரசரும், கொடை வள்ளல்களும் ஏறத்தாழக் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரை ஆண்டு வந்திருப்பதற்கான சான்றுகள் நிறைய கிடக்கின்றன. அவர் பற்றிய குறிப்புகளைத் தமிழ்ச் சான்றோர் பலர் ஆய்ந்து தனித் தனியாக எழுதி இருக்கின்றனர். அனைத்தையும் தொகுத்தளிக்க, வலிவும் தெளிவும் வரலாற்றுத் திறனும் மிக்க கற்றுத் துறை போகிய பெற்றியராலேயே சாலும். எளியேனும் சிறிது ஈடுபட்டுள்ளேன்.

அன்றைய தமிழகத்தை ஆற்றலோடு ஆளுமை செய்த பாண்டிய மாதேவி அங்கயற்கண்ணி, சோழன் கரிகாலன், சேரர் நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன் போன்றோர் இமயத்தில் தங்கள் மீன், புலி, வில் கொடிகளை நாட்டிப் பெரும் புகழ் பெற்றவர் ஆவர். அவர்களில் பாண்டியர் குலச் செல்வி பேரரசி அங்கயற்கண்ணியின் கதையை இங்கு அமைத்துள்ளேன்.

பாண்டியப் பேரரசி அங்கயற்கண்ணி பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் இல்லாவிட்டாலும், புராணக் கதைகளிலே தெய்வமாக்கிக் காட்டி இருக்கின்றனர். நான் புனைந்துரைத்தது ஒன்று தான். இலக்கியத்தில் இடம் பெற்ற தென்னவனையும், முடத்திருமாறனையும் தந்தை மகனாக்கி, அங்கயற்கண்ணியை முறையே அவர்க்கு மகளும் தங்கையும் ஆக்கியது தாம்.

இவர்கள் காலத்திற்கு முன்னரும் பின்னரும் ஆண்ட, வாழ்ந்த வரலாற்று நாயகர்களை இணைத்து, இந்நூலினும் பன்மடங்கு சிறப்பாகப் பெரிதாக எழுத முடியும்; ஆய்வறிஞர்கள் எழுத முன்வரவேண்டும்.

யாவற்றினும் மேலாகச் சங்க வரலாற்று நிகழ்வுகளைக் கோர்வையான கதைகளாக்கிச் சொற்பொழிவுகள் ஆற்றிட வேண்டும். பட்டி மன்றங்கள், கவியரங்கங்கள் நடத்தி மக்களை ஈர்த்திட வேண்டும். இராமாயணம், மகாபாரதம் இவற்றுக்கு ஈடாக மக்கள் தமிழின வரலாற்றைத் தடையின்றிப் பேச வேண்டும். அவர்களைப் பேச வைக்கப் பேச்சாளர்கள் மேடை தோறும் புதிது புதிதாய்ச் செய்திகளை மெல்லப் புகுத்த வேண்டும். தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்தல் வேண்டும் என்றார் பாரதி. அதுவே தொலைக் காட்சி மூலம் எனில் வீடுகள் தோறும் முழங்குமே!

பள்ளிப் பருவத்தில் உள்ளத்தில் பதிந்த இவ்வேட்கை, ஐம்பது ஆண்டுகட்குப் பின்னர், வாழ்க்கைப் பயணத்தின் இறுதிப் பகுதியில் இச்சிறு நூலாக முகிழ்ந்துள்ளது. விளைவு சிறிதேனும் பயனை விளைப்பின் மகிழ்ந்தவன் ஆவேன்.

பல்லோர் இந்நூற்குப் பயன்பட்டுள்ளனர். பயன் தூக்காது அன்னோர் பயந்த உதவிக்கு என்றும் நன்றியுடையவன் ஆவேன்.

சென்னை.
30-11-2004.

இராச. வேதாந்தம்.

# பதிப்புரை

காதலும் வீரமுமே பண்டைத் தமிழரின் இரு கண்களாக இருந்திருக்கின்றன. இல்லை என வந்தோர்க்கு இல்லை எனாது வாரி வழங்கும் வள்ளண்மைக்குக் குறைவே இருந்ததில்லை.

வாழ்வாங்கு வாழத் தெரிந்த அந்நாள் தமிழர்க்குத் தங்கள் வாழ்க்கையை வரலாறாகப் பதிந்து வைக்கத் தெரிந்திருக்க இல்லை. தமக்கென வாழாத் தகைமையர் அன்றோ அவர்!

சங்க இலக்கியங்களே அன்னோர் சான்றாண்மைக்குக் காட்டாய் நிற்கின்றன; அவர்தம் பண்பட்ட வாழ்க்கை நெறிகளையும் வரலாற்றுக் குறிப்புகளையும் ஆங்காங்கே தொட்டுச் செல்கின்றன. இட்டும் கட்டியும் ஏற்றங் காட்டும் இன்றைய ஆட்சியாளர்க்கும் இமயம் வரை வென்றும் வெற்றிக் கொடி நட்டும் எழுதி வைக்காத அன்றைய தமிழர்க்கும் இடையேதான் எத்துணை முரண்பாடு!

பரந்துபட்ட சங்க இலக்கியங்களில் படிந்துள்ள குறிப்புக்கள் பழந்தமிழரின் வாழ்க்கை வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டக் கூடுமா? முயன்றிருக்கிறார் இந்நூலில் ஆசிரியர்.

ஆசை பற்றி அறையலுற்ற ஆசிரியர் இராச. வேதாந்தம் ஒரு மின் பொறியாளர்; மின் வாரியத்திலே தலைமைப் பொறியாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்; அகவை 67 ஆனவர்; தமிழ்பால், தமிழினத்தின் பால் தளரா ஈடுபாடு உடையவர்.

கடலூரரைச் சொந்த ஊராகக் கொண்ட இவரின் இம்முதல் நூலைக் கடலூர் மின்வாரியத் தமிழார்வலர் தமிழ்ப்பணி அறக்கட்டளை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறது.

சி. செந்தமிழ்ச்சேய்,
தலைவர்,
மின்வாரியத் தமிழார்வலர் தமிழ்ப்பணி அறக்கட்டளை.

கடலூர்.
30-11-2004.

# கபாடபுரம்

உலகமே தமிழகத்தைக் கண்டு வியந்த காலம் அது. குமரிக் கண்டமும் விந்திய மலைக்குத் தெற்கே விரிந்து பரந்திருந்த தண்பொழில் நாடும் சேர்ந்த மாபெரும் நாடு அது. இரண்டாம் தமிழ்ச் சங்கம் சீரும் சிறப்பும் பெற்றுப் பாண்டிய மன்னர்களால் பேணி வளர்க்கப்பட்ட காலம்.

செந்தமிழ் நாட்டைச் சிறப்புடன் ஆண்டு வந்தனர் "தென்னவன்" என்றழைக்கபட்ட திறல்மிகு பாண்டிய மன்னர்கள். பரந்துபட்ட தமிழகத்தை ஐந்து திணைகளின் அடையாளங்களாக, ஐந்து மண்டலங்களாகப் பிரித்து ஐவர்களைத் தலைவர்களாக அமைத்து ஆண்டு வந்தனர். பெரும்பரப்பான குமரிக் கண்டத்தைப் பாண்டிய நாடென்று பெயரிட்டுத் தாங்களே ஆண்டு வந்தனர்.

வற்றாது வளைந்தோடும் பஃறுளி ஆறும் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோட்டினின்று குறைவின்றிக் குதித்துப் பாயும் குமரி ஆறும் பாண்டிய மண்டலமான தொல்பாண்டி நாட்டிற்கு வளங்களை வாரி அளித்துச் செல்வச் செழிப்பாக ஆக்கி இருந்தன.

கபாடபுரம்!

குமரியாறு கடலோடு கலக்கும் கயவாயின் அருகே கவினுற அமைந்திருந்தது. பாண்டியரின் கோநகர் அது! தரணி போற்றும் தமிழ்ச் சங்கத்திற்கும் அதுவே தலைநகராய் விளங்கியது.

கபாடபுரம் அன்று ஈடு இணையற்ற ஒரு பெரு நகரம். அதைச் சுற்றிப் பாதுகாப்பு அரணாகப் பெரும்

சுவர். நாற்புறமும் நெடுங் கதவுகளை உடைய நுழை வாயில்கள். உள்ளே நடுநாயகமாக, மன்னர் உறையும் அரண்மனை.

அரண்மனை பொன்னாலும் மணிகளாலும் அணி செய்யப் பெற்றுக் கலை அழகுடன் ஒளிர்ந்து மிளிர்ந்தது. அரண்மனையைச் சுற்றி அகன்ற வீதிகள், அவற்றில் அழகுற அமைந்த அடுக்கு மாடி இல்லங்கள் தூய்மையும் எழிலுமாக பொலிந்தன.

அவ்வீதிகளிலே, ஒரு பக்கம் அரசு அதிகாரிகளும் ஒரு பக்கம் தமிழ்ப் புலவர்களும் பல்துறை அறிவியல் வல்லுநர்களும் வாழ்ந்து வந்தனர்.

அந்நகரில் ஐம்பது அரசவைப் புலவர்களும் 4700க்கும் மேற்பபட்ட பன்மொழிப் புலவர்களும் தங்கள் பன்முக ஆய்வுகளைப் பயனுற நடத்தி வந்தனர். வானவியல், கோளியல், நீரியல், மண்ணியல், உயிரியல், கப்பற்றுறை, மருத்துவ இயல், போரியல் போன்ற பல்துறைகளில் வல்ல வல்லுநர்கள் நாளும் தங்கள் ஆய்வுகளை அரசின் உதவியுடன் நடத்தி வந்தனர்.

ஆனால், அன்று . . .
எங்கும் அமைதி!
காற்று வீசவில்லை. மரஞ்செடி கொடிகள் மலைத்து நின்றன. கடல் அலைகளும் அடங்கி அமைதி காத்தன.

வேலை செய்யாமலேயே மனிதர்கள் வேர்த்துச் சோர்ந்தனர். விலங்குகள் பரபரத்தன; பறவைகள் படபடத்தன. எலி, அணில் போன்றவை உள்ளும் வெளியுமாக ஓடி உலைந்தன. எறும்புகள், பூச்சிகள் இப்படியும் அப்படியும் ஓடி இளைத்தன.

எவர் முகத்திலும் மகிழ்ச்சி இல்லை. எல்லார் உள்ளத்திலும் ஏதோ ஓர் இனந்தெரியாத நெருடல்!

எங்கும் காரிருள் கவிந்திருந்தது! அந்தப் பொழுது நள்ளிரவன்று-நடுப்பகல். கருத்துத் திரண்ட கார்மேகங்கள் வானத்தை மூடிப் பகலை இரவாக மாற்றி இருந்தன. எங்கும் இருள். அவ்வப்போது தோன்றிய மின்னல் கீற்றுகளே மண்ணில் ஒளியைப் பாய்ச்சின.

அந்தக் காரிருளிலும் காட்டுப் பாதையிலே ஒரு தேர்! இரண்டு புரவிகள் பூட்டப் பெற்று விரைந்து ஓடிக் கொண்டிருந்தது. தேரை ஒருவன் வெகு திறமையாகச் செலுத்திக் கொண்டிருந்தான். எனினும், இருட்டிலே அந்த இரு புரவிகளும் தடுமாறின; மிரண்டன; சிலிர்த்தன. ஆயினும், ஓட்டுபவன் எண்ணப்படி அவன் குறிப்பிற்கேற்ப விரைந்து இயங்கின.

தேரைச் செலுத்துபவன் மிகத் திறமை மிக்கவன். மின்னல் ஒளியிலே தான் செல்லும் பாதையைச் சரிவரக் கணித்துப் புரவிகளைக் கவனத்துடன் செலுத்திக் கொண்டிருந்தான்.

இன்னும் இரண்டு கற்கள்; பின்னர் அந்தக் கலங்கரைத் தீப மண்டபம் வந்து விடும். தேரோட்டியின் கணிப்புச் சரியாக இருக்குமானால், இன்னும் இரு நாழிகைக்குள் கலங்கரை விளக்க மாடத்தை அடைந்து விடலாம். ஆனால் . . .!

முறிந்து விழுந்து சாலையை மறிக்கும் மரங்களையும் மையிருட்டையும் கணித்துப் புரவிகளைக் கவனத்துடன் செலுத்திக் கொண்டிருந்தான் அவன். வானிலை கணிக்கும் அறிஞர் பூங்குன்றத்து நல்லன் கணியனார் கூறிய நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. குதிரைகள் கொண்ட இடர்ப்பாடுகள் நேரத்தை வீணடித்தன.

தேரோட்டியின் எதிர்பார்ப்பு நிகழ்ந்தே விட்டது. "சுர்! சுர்!" என்ற காற்றின் வீச்சு, திடீர் பெருமழையுடன்

தொடங்கி "விர்! விர்!" என்று மிகுதி அடைந்தது. காற்றின் வேகம் கணத்திற்குக் கணம் அதிகரிக்க, வலிமையுள்ள மரக்கிளைகளும் ஒடிந்து விழுந்தன; பறந்தன. பெருமரங்கள் பேய் பிடித்தாற்போல் ஆடின. தேரும் குடை சாயுமோ என அச்சந்தரும் வகையில் ஆடி அலைக்குற்றது. குதிரைகள் நடுக்குற்றுத் தடுமாறின.

தேரோட்டி கீழே இறங்கி நிலைமையை ஆராய்ந்தான். உடனே தன் நீள்வாள் கொண்டு தேரின் கூரையை மிகுந்த முயற்சியுடன் வெட்டி நீக்கினான்.

தடை சற்றே நீங்கத் தேரை அவன் மிக மிக மெதுவாகக் கவனத்துடன் செலுத்தினான். காற்றின் சீற்றம், பறக்கும் கிளை, கொம்பு, இலைகளின் தாக்குதல் அனைத்தையும் பொருட்படுத்தாது பொறுமையுடன் தாங்கிக் கொண்டு முன்னேறினான்.

மையிருட்டு! வழியைச் சரிவர அறிய முடியவில்லை. மின்னல் ஒளிரும்போது சற்று முன்னேறி, அடுத்த மின்னல் வந்ததும் மீண்டும் நகர்ந்து நின்று, நகர்ந்து நின்று, நகர்ந்தது தேர். இன்னும் எவ்வளவு தொலைவோ என்று அவன் எண்ணி இளைத்த வேலையில், வானில் அந்தப் பேரொளி மின்னல் பளிச்சிட்டு மறைந்தது.

"ஆ! அதோ அந்தக் கலங்கரை மாடம்! இன்னும் அரைக்கல் தூரமே இருக்கக் கூடும்! மெல்லச் சென்றாலும் இன்னும் ஒரு நாழிகையில் அடைவது உறுதி. பிறகு எப்படியும் இந்த அரும்பெருஞ் செல்வங்களைக் காப்பாற்றிவிடலாம்."

அந்த எண்ணம் உருக்கொண்ட மறுகணம், ஓங்கி உயர்ந்திருந்த ஒரு பெரும் மாமரம் சடசட எனச் சாய்ந்து எதிரே சாலையின் குறுக்கே விழுந்தது. உயர்ந்து பரந்து பருத்த அடர்ந்த அந்த மரம் தேர் செல்லும் வழியை முழுமையாக அடைத்துக் கொண்டு விட்டது.

இருள்! எங்கும் இருள்! அந்த இருளில் சிறு சிறு கிளைகளை வெட்டி அகற்றிவிட்டுச் சாலையின் ஓரமாக விலகிச் சென்றுவிடக் கூடுமா? மின்னல் மின்னியது. அந்த ஒளியில் பார்த்தபோது அது முடியாத காரியம் என்பது அவனுக்குப் புரிந்தது.

பாதையின் குறுக்கே பெருமரம்; ஐயோ! அதுவரை பட்ட பாடெல்லாம் பயனற்றுப் போய்விடுமோ? மூளையிலே ஒரு சிறு பொறி! அவனுக்கு வழி கிடைத்து விட்டது.

பின் நோக்கிச் சென்றால், அரைக்கல் தொலைவில் ஒரு சிறு பாதை அந்தக் கலங்கரை மாடத்திற்குச் செல்லும். ஆனால், அது நான்கு கல் கொண்ட சுற்றுப் பாதை; பாதையும் குறுகலானது. வேறு வழி அப்போது அவனுக்கு இல்லை.

உடனே தேரைத் திருப்பினான். குதிரைகளுக்கு அது பழகிய பாதை என்பதால் முரண்டு பிடிக்காமல் திரும்பிச் சென்றன.

எத்தனை நாழிகைகள் கடந்தனவோ? அவன் அறியான். அவன் நாட்டம் முழுதும் தேரைத் திறம்பட நடத்துவதிலேயே அமைந்திருந்தது.

"யார் அங்கே? நில்! இந்தச் சூறாவளிக் காற்றில் கடல் பக்கம் போகாதே."

மக்கள் சிலரின் கூச்சல் ஒலி இயற்கையின் சீற்றத்திற்கு இடையே அவன் காதில் விழுந்தது. கண்களை உயர்த்திச் சுற்றிப் பார்த்தான்.

தேர் ஒரு சிற்றூர் வழியே சென்று கொண்டிருந்தது. ஊர் மக்களில் சிலர் அவனை எச்சரித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

அது கடலுக்குப் போகும் பாதை என்று கேட்டு மகிழ்ந்தானே அன்றி, அவர்களின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தவே இல்லை. கொண்ட இலக்கை அடைவதிலேயே அவனின் எண்ணமும் செயலும் ஒன்றிணைந்து இயங்கின.

குறுகிய பாதை அது. பக்கங்களில் உள்ள முட்செடிகள், கூரிய கொம்புகள் காற்றில் அலைந்து, அவன் மார்பிலும், முகத்திலும் தோளிலும் கீறிச் சிராய்த்தன. போர்க்களத்திலே அம்பு, ஈட்டி ஆகியவற்றால் அடைந்த புண்களோடு ஒப்பிட்டால், அவை ஒன்றுமே இல்லை. அதுவும் சில்லிட்ட அந்தக் குளிர் ஈரத்தில் உடலில் உறைக்கவே இல்லை. உள்ளார்ந்த உழைப்பில் ஒன்றிவிட்டால் உடலுக்கு உண்டாகும் ஊறும் உணரப்படாது என்பது உண்மை அன்றோ!

கலங்கரை விளக்கம் கண்ணுக்குத் தெரிந்தது. இடையே கணுக்கால் அளவிற்குப் பாதையில் தண்ணீர் ஓடியது. தேரை அவன் விரைந்து செலுத்தினான்.

இறுதியாகக் கலங்கரை மாடத்தை அவன் அடைந்து தேரை நிறுத்திய போது, மகிழ்ச்சியினால் பெருமூச்சு விட்டான். கொண்ட குறிக்கோளில் கண்ட நிறைவுக்கு அவன் உள்ளம் உவகை உற்றது.

எல்லாம் ஒரு கணம்தான்! அவன் கொண்ட மகிழ்ச்சியும் நிறைவும் பொடிப் பொடியாய் ஆயின. அந்தக் காரிருளில் என்ன நடக்கிறதென்று அவன் உணரும் முன்னர், அவனும் கூரையில்லாத் தேரும் குதிரைகளும் கடலினின்று எழுந்த நீர்ப் பேரலையால் தாக்கப்பட்டு, நிலைகுலைந்து மிதந்தனர்; அடுத்த கணத்தில் நீர் வடிந்துவிடத் தரையில் விழுந்தனர்.

மின்னல் மின்னியது. அங்கே அவன் கண்டது - தேர் குடை சாய்ந்து கிடக்கக் குதிரைகள் தட்டுத் தடுமாறி

நிற்க முயன்று கொண்டிருந்தன. ஆ! அதோ, அந்தப் பேழைகள் நான்கும் சிதையாமல் கிடக்கின்றன. அவன் அறிந்து கொண்டான். இது பெரும் சூறாவளியின் தொடக்கம்!

அடுத்தடுத்து அலைகள் பெருகித் தன்னை அணுகுமுன் கட்டடத்தினுள் சென்றிட அவன் எண்ணி, ஒரு பேழையை முயன்று தலையில் தாங்கி வழியை அறிந்து உள்ளே சென்றான்.

அக்கலங்கரை மாடம் அவனுக்குப் புதியதன்று. பலமுறை வந்த பழக்கம் அவனுக்கு உண்டு. அவன் ஓய்வையும் அமைதியையும் நாடிய பல சமயங்களில் புழக்கத்தில் இல்லாத அக்கலங்கரை மாடத்திற்கு வந்து தனிமையைக் கழித்திருக்கிறான். எனவே, எந்தத் தடுமாற்றமும் இன்றி, வழியை அறிந்து சுழற்படிகளில் மேலேறிச் சென்றான்.

ஐந்து நிலைகளைக் கொண்ட கூம்பு வடிவக் கட்டடம் அது. அதுவே பல கல் சுற்றுப்புறத் தொலைவிற்கு மிக உயரமான கட்டடம். மிக உயரமான கட்டடம் என்பதாலேயே அவன் அவ்வப்போது அங்கு வந்து செல்வது வாடிக்கை.

பேழையைச் சுமந்துகொண்டு உட்புறப் படிக்கட்டுகளின் வழி மிக்க உடல் முயற்சியுடன் ஏறி, ஐந்தாம் நிலைக்கு மேல் வந்து சேர்ந்தான். அனைத்தையும் முன்பே நன்கு அறிந்து வைத்திருந்த காரணத்தால், அங்கிருந்த கல் தூணிலிருந்த சங்கிலியால் பேழையை நன்றாகப் பிணைத்தான். பின்னர், இருளடர்ந்த அந்த மாடத்துள் கைகளால் தடவி வழியைக் கண்டறிந்து கீழே விரைந்து இறங்கினான்.

நான்காவது தளத்தை அடைந்த போது, அவன் கால்களில் தண்ணீர் தட்டுப்பட்டது. படிகளில் இறங்க இறங்கத் தண்ணீரின் அளவு மிகுத்துப் பெருகியது. அவன் திகைத்து நின்றான்.

நினைத்தது நிகழ்ந்து விட்டது. ஆறு ஆள் உயரத்திற்கு மேல் தண்ணீர் நிற்குமே ஆனால்? ஊழிக் கூத்தின் உச்சத்தை உணர்ந்து அவன் அச்சத்தின் எல்லைக்கே போய்விட்டான்.

தனக்காகவா? இல்லை; தான் சுமந்து வந்த அந்தச் செல்வங்களுக்காக அச்சங் கொண்டான். இனி? மேற்கொண்டு கீழே இறங்குவதென்பது இயலாத ஒன்று. இயற்கையை எதிர்த்து இயங்க முடியுமா?

அப்படியானால் மற்ற மூன்று பேழைகளும் அழிய வேண்டியவை தாமா? அவன் நெஞ்சே வேதனையால் வெடித்து விடுவது போல் துடித்தது. இப்படிப் பறி கொடுக்கவா இத்தனை இன்னல்களைத் தாங்கி இவ்வளவு தூரம் வந்தான்?

இன்னல்கள் இடையிலும் ஏதோ அவன் மீது இடிப்பதை உணர்ந்து அசைந்து தடவிப் பார்த்தான். அவன் முகம் அகத்தைப் போலவே மலர்ந்தது.

வாயிலின் அருகே இறக்கி வைத்திருந்ததால், நீரில் மிதந்து இரண்டு பேழைகள் கட்டடத்தினுள் வந்து விட்டிருந்தன. நீரில் ஊறியதால், பேழைகள் கனத்தன. ஒரு பேழையை மட்டும் முதலில் பெரு முயற்சியுடன் மேலே கொண்டு சேர்த்தான்.

மீண்டும் கீழே இறங்கிய போது, நீர் குறைந்து விட்டிருந்தது. மெல்ல இறங்கி மற்றொரு ஹேழையையும் தேடிக் கண்டுபிடித்துத் தூக்கிக் கொண்டு ஏறிய அதே வேளையில், நீரின் நிலை சரேலெனத் தாழ்ந்துவிட, அவன் நிலை தடுமாறிப் பேழையைத் தவற விட்டான். தரையில் விழுந்த வேகத்தில் பேழை உடைந்து, உள்ளே இருந்த விலையில்லாப் பொருட்கள் சிந்திச் சிதறின.

அவை அத்தனையும் ஓலைச் சுவடிகள்!!

தேரோட்டியான திருமாறன் செய்வதறியாது திகைத்து நின்றான்.

# ஈழத்தில் இளவரசன்

தம் ஆட்சிக்குட்பட்ட நாடுகளைச் சுற்றிப் பார்க்கவும், அந்நாட்டு மக்கள் நிலையினை அறியவும், சீர்மை நிலை நாட்டிடவும், குறைகள் இருப்பின் களைந்து அறிந்திடவும், பயணங்கள் மேற்கொள்வது தென்னவராகிய பாண்டியர் குலத்தினருக்கு வழக்கம். அந்த முறையில் இளவரசன் இளம்பெருவழுதி அப்போது ஈழநாட்டிற்குப் பயணம் மேற்கொண்டிருந்தான்.

பாண்டியரோடு பன்னெடுங் காலமாய் மண உறவு கொண்ட நாடு ஈழநாடு. ஒரே நிலப்பரப்பாக இருந்த ஈழம் முன்னர் நிகழ்ந்த பல ஊழிகளினால் சிறிது சிறிதாக நிலம் அரிக்கப்பட்டுத் தனித் தீவாகப் பிரிந்துவிட்டது. கொற்கைக்குக் கிழக்கே சில காத தூரமே கடலால் பிரிக்கப்பட்டிருந்தாலும் மற்றைய பகுதிகள் பெருங்கடலால் சூழப்பட்டிருந்தது.

கபாடபுரத்திலிருந்து பத்து நாள் கடற்பயணம் மேற்கொண்டால் ஈழத்தை அடைய முடியும். ஈழ அரச குடும்பத்தினர் கபாடபுரம் செல்வதும் கபாடபுரப் பாண்டியர் ஈழம் செல்வதும் அடிக்கடி நிகழும் நிகழ்வுகளே.

சிறு நிலப்பரப்பேயானாலும் ஈழம் செல்வம் கொழிக்கும் தீவு. உயர்ந்தோங்கிய மலைகளால் ஆன தீவாகையால் முந்தைய ஊழிகளிலிருந்து கடலில் மூழ்காமல் தப்பித் தன் தனித்தன்மையை இழக்காமல் இருந்து வந்தது.

அநுராதபுரம் ஈழத்தின் கோநகரம் ஆகும். சிறந்த முறையில் அமைக்கப்பட்ட தலைநகர் அது.

ஈழவேந்தன் பாண்டிய குல வழியினன். தன் மகளைத் தென்னவன் பெருங்கோ வழுதியின் மூத்த மகன் திருமாறனுக்கு மணம் பேசி முடித்திருந்த சூழ்நிலை அது. எனவே, திருமாறனின் இளவல் இளம்பெருவழுதிக்கு அங்கு நல்ல வரவேற்பு. அவன் மன்னர் குடியினன் மட்டுமன்றிச் சிறந்த புலவனுங் கூட. கபாடபுரத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினன்.

நாட்டைச் சுற்றிப் பார்த்து; அவர்கள் ஆட்சிமுறை, படையமைப்பு, வாணிகச் செழிப்பு, மக்கள் மனநிலை போன்றவற்றைக் கேட்டு அவை நிறைவாக இருப்பதாக உணர்ந்து, ஈழமன்னனைப் புகழ்ந்து, போற்றி விருந்தோம்பலுக்கு நன்றி சொல்லிக் கொண்டு, தான் வந்து பதினைந்து நாட்களுக்குமேல் ஆகிவிட்டதால் கபாடபுரம் திரும்ப முடிவு செய்தான்.

ஈழ நாட்டு வானவியல் வல்லுநர்கள் ஓரிரு நாட்களில் புயற்காற்று வீசக்கூடும் என்பதால் பயணத்தைத் தள்ளிப்போட ஆலோசனை கூறினார்கள். ஆனால், அதை ஏற்காமல் 'நாங்கள் என்ன புயற்காலங்களில் மரக்கலங்களில் பயணம் செய்யாதவர்களா? இயற்கையின் சிறு சீற்றத்தை எளிதாக எதிர்கொள்வோம். அதிலும் ஒரு வீரக்கிளர்ச்சி இருக்கும் அல்லவா? கவலை வேண்டாம்; பயணத்தைத் தொடருவோம்' என்று கூறித் தன் பெரிய நாவாயுடன் இரண்டு சிறு நாவாய்கள் துணைக்கு அனுப்பியதைப் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டு புறப்பட்டான்.

ஈழ வேந்தன், இளம்வழுதியிடம் "இளவரசே தாங்கள் பெரும்புலவர். எம் நாடு வந்துவிட்டு விடைபெற இருக்கிறீர்கள். உங்கள் பாடல்கள் பல யாம் கேட்டிருக்கிறோம். அகப்பாடலானாலும் சரி,

புறப்பாடலானாலும் சரி, அவை ஆழ்ந்த கருத்துடையனவாக இருந்திருக்கின்றன. எமக்காகப் புறப்பாடல் ஒன்று இயற்றித் தந்து எம்மை மகிழ்விக்க வேண்டும்" என்றான்.

இளம்வழுதி சிரித்துக் கொண்டே தன்னோடு வந்த எழுத்து உதவியாளரிடம் பாடலைக்கூற அவன் பனை ஓலையில் எழுத்தாணியால் முத்து முத்தான எழுத்துக்களில் எழுதி வழுதியிடம் கொடுத்தான். அப்பாடலைச் சரி பார்த்துவிட்டு,'வேந்தே இதோ நீங்கள் கேட்ட பாடல். ஏற்றுக் கொள்ளுங்கள். பின்னாளில் நீங்கள் கபாடபுரம் வரும்போது அங்குள்ள பாடல்களின் பட்டியலில் இதைச் சேர்த்துவிடுங்கள். அதுவரை இவ்வோலை தங்களிடமே இருக்கட்டும்' என்று கூறி விடை பெற்றான்.

அஃது என்ன பாடல்?

"உண்டா லம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றான்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே."

ஒப்பம் : இளம்பெருவழுதி

கப்பல்கள் நிறைய பரிசுப் பொருள்களாகப் பொன்னும், மணியும், வெள்ளியும் இன்னும் ஏராளமான விலை மதிப்பில்லாத பொருள்களையும் அனுப்பி வைத்தான் ஈழ வேந்தன்.

மூன்று கப்பல்களும் புறப்பட்டன. அமைதியான பயணம். கடல் நடுவே பார்த்து மகிழ என்ன இருக்கும்? கடல் - கடல் - கடல்தானே. தன் தந்தையையும்

தமையனையும் தங்கை கயல்விழியையும் காண நெஞ்சில் ஆவல் மிகுவதை உணர்ந்தான். புலவர்களோடு கூடி இலக்கிய ஆய்வு செய்யவும் வேட்கை மிகுந்தது.

அமைதியான தண்பொழில் நாட்டில் போருக்கும் வீண் பூசலுக்கும் வழியில்லாததனால் வீரர்கள் மற்றும் மக்களின் சக்தியை ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்தி இரு இளவரசர்களும் நாட்டின் வளத்தைப் பெருக்கிவந்தனர். மறப்போரை மறக்காதிருக்க அவ்வப்போது வரும் கடற்கொள்ளையரைப் புறங்காட்டி ஓடச்செய்தனர் அல்லது அவர்களை முழுவதும் அழித்தனர்.

பத்து நாள் பயணத்தில் ஆறு நாட்கள் அமைதியாகவே சென்றன.

ஆறாம் நாள் இரவு முடிந்து, ஏழாம்நாள் பொழுது விடிந்தது. கப்பல் தலைவன் கடலளந்தான் மனதில் ஏதோ குறுகுறுப்பு. உள்மனதில் தீய தோற்றங்கள், சூறாவளி வந்து சூழுமோ என்று அடிமனதில் அச்சம். இதை எப்படி இளவரசரிடமும் மற்றவரிடமும் சொல்வது? சூறாவளியின் தோற்றமோ அதன் தீவிரமோ தெரியாத நிலையில் தன் உணர்வுகளின் அடிப்படையில் அதைச் சொல்லி அவர்களை அச்சுறுத்துவதா?

ஆனால் புயல், புயல்வேகத்தில் வந்தேவிட்டது.

சுற்றிலும் திடீரென இருள் சூழ்ந்தது; சூரியன் மறைந்தே போனது. இருள்- இருள் - இருள்.

வானத்திலிருந்து பெருமழை, அரைக்கல் தொலைவுக்கு அப்பால் கறுத்து இருள் வடிவில் கீழே இறங்கிக் கொண்டிருந்தது. கடலளந்தானுக்கு இப்போது உறுதியாகிவிட்டது. அடுத்த சில நொடிகளில் சுற்றிலும் சூறாவளி! அஃது எந்த நேரத்திலும் கப்பலைத் தாக்கக் கூடும்.

எதையும் யாரிடமும் சொல்லுமுன் மழை நெருங்கி இருள் வடிவில் கப்பலைச் சூழ்ந்துவிட்டது. கப்பலுக்கு

உள்ளேயே ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள முடியவில்லை. இருண்ட கடலில் வழியறியாது திகைத்தனர். அந்தத் திகைப்பைப் பன் மடங்காக அதிகரிக்கப் பெருங்காற்று வீசியது.

கப்பல் மாலுமிகளும் பயணிகளும் கூடிக் கூடிப் பேசினர். இளம்பெருவழுதி, கப்பல் தலைவனின் முகக் குறிப்பினின்று புயலின் தீவிரத்தைப் புரிந்துகொண்டு ஆழ்ந்த அமைதியில் நிலைத்தான்.

புயற்காற்று அடித்தவுடன் இருள் விலகிச் சுற்றிலும் கடல் பரப்பு தெரிந்தது. ஆனால் பலன் ஏதும் இல்லை. நேரம் செல்லச் செல்லக் கப்பல் பேய்க்கூத்து ஆடியது. அத்தனை பாய்களையும் இறக்கிவிட்டதால் கப்பலின் ஆட்டம் சற்றுக் குறைந்தது. ஆயினும் அதுவும் நிலைக்கவில்லை. நடுக்கடலில் பேரலைகள் தோன்றி உயர்ந்து தாழ்ந்து கப்பலைப் பந்தாடின. கப்பல் கவிழாமற் போனதற்குக் காரணம் ஊழியின் கருணைதான்.

# பொதிகையில் மன்னனும் மகளும்

திருமாறனை அரசுப் பணியைக் கவனிக்கச் சொல்லிவிட்டு, இளம்பெருவழுதியை ஈழத்திற்கு அனுப்பிவைத்த தென்னவன் பெருங்கோ வழுதி, தன் வீர மகள் கயல்விழியோடு வடக்கிலுள்ள தன் நாட்டு நிலையறியவும், நலன்களைக் காணவும், பயணம் மேற்கொண்டான். குமரி ஆற்றின் தென்கரையில் இருந்த கபாடபுரத்திலிருந்து நான்கு குதிரைகள் பூட்டிய தேரில் புறப்பட்டனர். பாதுகாப்புப் படையைச் சேர்ந்த பதினைந்து குதிரை வீரர்கள் பின் தொடர்ந்தனர்.

வழி எங்கும் பல ஊர்களில் தங்கி, மக்களை நேருக்கு நேர் சந்தித்தும், ஆங்காங்கே உள்ள சிற்றரசர்கள், வேளிர்கள், பெருநிலக் கிழார்கள், அதிகாரிகள், ஒற்றர்கள், பொதுமக்கள் எனப் பலதரப்பட்டவர்களையும் சந்தித்து, நலன்களையும், குறைகளையும் கேட்டறிந்து, அதற்கேற்பத் தேவையான ஆணைகளப் பிறப்பித்தும், மக்களுடைய வரவேற்பினையும் வாழ்த்துக்களையும் ஏற்று அவர்களுக்குப் பதில் வாழ்த்துச் சொல்லியும் பயணத்தைத் தொடர்ந்தனர்.

இறுதியாக, இருட்டிவிட்ட நேரத்தில் குமரி ஆறு அருவியாகக் கொட்டும் மலைச்சாரலின் பக்கம் அமைந்திருந்த பயணர் விடுதியைச் சென்றடைந்தனர். மறுநாள், மன்னனும் மகளும் மாறுவேடத்தில் ஆளுக்கொரு புரவியில் பயணத்தைத் தொடர்ந்தனர்.

வழியெங்கும் மக்கள் யாரும் அவர்களை மன்னரென்றும் இளவரசியென்றும் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அதுவே அவர்களுக்கு இனிய மகிழ்வளிக்கும் பயணமாக அமைந்தது. மன்னனாக

மதித்துப் பேசும் மக்களைவிட, புதியவர்கள் போலவும், பயணியர் போலவும் எண்ணி, அவர்கள் பேசிய முறையும், வழிகாட்ட ஆர்வம் காட்டும் தன்மையும், மனதிற்குள் நினைத்து, ஒருவரையொருவர் பார்த்து நகைத்துக் கொள்ள வைத்தன.

பதினைந்து நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது. அடுத்துப் பொதிகைக்குச் செல்ல முடிவெடுத்தனர். அவர்கள் ஆண்டுதோறும் பொதிகைக்குச் சென்று தங்கி, ஓய்வெடுத்து, மக்களோடு மக்களாகப் பழகுவதும் அங்குள்ள அங்காடிகளுக்குச் சென்று பொருட்கள் வாங்குவதும் அருவியில் குளிப்பதுமாக மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

அன்று, அவர்கள் ஓய்வு மாளிகைக்கு வந்து சேர்ந்தபோது, மேகம் திரண்டு, கறுத்து, மழை பொழிய ஆரம்பித்து விட்டிருந்தது. விடுதித் தலைவன் அவர்களை வாயிலிலேயே இருந்து வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றான். இரவுக்கான முக்கனிகள் நிறைந்த உணவை உடனிருந்து பரிமாறி உவகை கொண்டான்.

உணவை முடித்துக் கொண்ட மன்னரும் இளவரசியும் சிறிது நேரம் அங்கிருந்த அனைவரிடமும் அளவளாவி மகிழ்ந்தனர். பின்னர் உறங்குவதற்காக எழுந்தனர்.

விடுதித் தலைவன் மன்னரை வணங்கிப் பணிந்து கூறினான்.

"வேந்தே, புயல் வீசக்கூடும் என்று கணியர்கள் மொழிந்துள்ளனர். நான் காலையில் விரைவில் வந்து உங்களுக்கான உணவினை ஏற்பாடு செய்து வைத்திருப்பேன்; இப்போது விடை பெறுகிறேன்."

மன்னர் இசைவைப் பெற்ற விடுதித் தலைவன் தன் வீட்டை நோக்கி விரைந்து ஏகினான். அதே நேரம் கடுமையான காற்று வீசத் தொடங்கியது.

அன்று இரவு பேய்மழையும் சூறைக் காற்றும் கொடிய தாண்டவம் ஆடின. குடிசைகளின் கூரைகள் பறந்தன. நெடிய மரங்கள் ஆவேசம் வந்தாற் போல ஆடின. கிளைகள் ஒடிந்து விழுந்தன. வீடுகள், குடிசைகளின் மேல் மரங்கள் சாய்ந்து விழுந்தன. வீடுகள் இடிந்தன; குடிசைகள் தரை மட்டம் ஆயின. அந்த இடிபாடுகளில் மக்கள் சிக்கி, சிலர் மாண்டனர்; பலர் காயமுற்றுக் கதறினர். குழந்தைகள் பெரியவர்கள் யாது செய்வதென அறியாது திகைத்துத் தவித்தனர். விலங்குகள் தப்ப வழியின்றி அங்குமிங்கும் ஓடி, அவைகளும் இடிபாடுகளிலும் மரத்தின் அடியிலும் சிக்கி மடிந்தன. கொட்டும் கொடிய மழையாயிருந்தாலும் வெட்ட வெளியே பாதுகாப்பு என்றெண்ணி, மக்கள் தத்தம் வீடுகளை விட்டு வெளியே வந்து, மழையில் நனைந்தவாறு கூட்டமாக நின்றனர்.

இத்தனைக்கும் அசைந்து கொடுக்காத அரசுக் கட்டடங்கள், சத்திரங்கள், மருத்துவ மனைகள், பெரும் கல்விக் கூடங்கள், பயணர் விடுதிகள் மக்களுக்குப் புகலிடமாயின. தென்னவன் தங்கிய மாளிகையும் விதிவிலக்கன்று. தடுமாறி ஓடிய மக்கள் அங்கும் அடைக்கலம் புகுந்தனர். அவர்களோடு போட்டியிட்டு வீட்டு விலங்குகள் மாடு, ஆடு, நாய், பூனை, கழுதை, குதிரை என்று அவர்களோடு ஒட்டிக் கொண்டன.

இயற்கையின் சீற்றத்தைக் குறைவாக மதிப்பிட்டு, வீட்டுக்குச் சென்ற பயணர் விடுதித் தலைவன், சூறாவளியின் கோரத்தைப் புரிந்து கொண்டவுடன், மன்னருக்கு என்ன ஆனதோ, மாளிகைக்கு என்ன ஆனதோ என்று பதறியபடி, வீட்டை விட்டு மீண்டும், விடுதி நோக்கி ஓடினான். சாலைகளில் நீர் முழங்கால் அளவு ஓடிக்கொண்டிருந்தது. அப்படியானால் விடுதியிலும் நீர் நுழைந்திருக்குமே - விரைந்தான்.

திடீரென வானில் மேகங்களுக்கிடையில் கொடிகளைப்போல் ஒரு மின்னல் பரவி, கண்களைப் பறித்தது. "ட்ற்றட்ட்டீரர்ர்" என்ற பேரிடி முழக்கம்

கேட்டதைத் தொடர்ந்து வானிலிருந்து பேரொளிப் பந்து ஒன்று நிலத்தை நோக்கி இறங்கிக் கொண்டிருந்தது.

செங்குத்தாக இறங்கிக் கொண்டிருந்த அந்த மின்னொளிப் பந்து, அதன் நேர்ப் பாதையை விட்டு, எட்டு முழத் தொலைவில், ஓங்கி உயர்ந்து மழை நீரில் ஊறியிருந்த பனை மரத்தின் உச்சியில் சாய்வாகப் பாய்ந்து இறங்கியது. பனை மரத்தின் மேல் பகுதி குபீரென்று தீப்பற்றி வெண்சுடர் விட்டு எரிந்தது. சீவப்பட்ட தலையைப்போல் நெருங்கிய மட்டைகளுடன் கூடிய அதன் உச்சி எரிந்து கொண்டே எகிறி எட்டிப் போய், ஓட்டமும் நடையுமாகச் சென்று கொண்டிருந்த விடுதிக் காவலன் மேல் முழுமையாக விழுந்தது. எரிந்த தீயில் முற்றிலுமாகச் சிக்குண்டு நசுங்கி, எரிந்து அக்கணமே அவன் இறந்து போனான்.

# தப்பிப் பிழைத்த தமிழ்ச் சுவடிகள்

சாளரத்தின் ஊடே ஓடும் நீரில், ஓலைச் சுவடிகள் மிதந்து, புகுந்து மறைந்தன. தடவித் தடவி நீரில் மிதந்த ஓலைகளை அள்ளிக் கக்கத்தில் வைத்துக்கொண்டு முடிந்தவரை சேகரித்தான். நீர் மட்டம் மீண்டும் ஏறத்துவங்கத் திருமாறன் விரைந்து மேலேறிக் கடைசி நிலைக்கு வந்துவிட்டான். தனித்தனி ஓலைகளைத் தன் மேல் அங்கியால் பிணைத்துத் தூணிலே கட்டிவிட்டு, மீண்டும் ஓலைகளைச் சேகரிக்க மெல்லக் கீழே இறங்கினான்.

இந்த முறை கையில் ஏதேதோ தட்டுப்பட்டன. அவை, தென்னங் குலைகள். அவற்றை ஒவ்வொன்றாக மேல் தளத்திற்குத் தூக்கிச் சென்று சேர்த்தான். மின்னும் போதெல்லாம் ஓலைச் சுவடிகள் நீரில் மிதந்து செல்வதைப் பார்த்துக் கண் கலங்கினான்.

ஊழியின் வேகம் மேலோங்கியது. மேல் தளத்திற்கு மேலும் நீர் அலையலையாய் அடித்து அவனை மூழ்கடித்தது. தூணோடு தூணாகத் தன்னையும் இறுகக் கட்டிக் கொண்டு ஊழிப் பெருக்கின் ஆவேசத்தோடு போராடத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டான். அவனுக்குத் தெரிந்து விட்டது - நல்லன் கணியனார் குறிப்பிட்ட நேரம் வந்தே விட்டது.

இயற்கையின் ஐந்து நிலைகளின் பெரும் மாற்றத்தால், அவற்றின் சீற்றத்தால், ஏற்படும் விளைவே இந்த ஊழிப்பெருக்கு. நில ஊழி, நில நடுக்கமாகவும்- நீர் ஊழி, வெள்ளப் பெருக்காகவும் - தீ ஊழி, நாடோ காடோ பற்றி எரிந்து சாம்பலாவதும், எரிமலையாக

வெடித்துச் சிதறி அழிப்பதும் - காற்று ஊழி, புயலாகவும், சூறாவளியாகவும் - விண் ஊழி, இவையனைத்தையும் உள்ளடக்கியதோடு இடியும், மின்னலும், தகிக்கும் வெய்யிலும், கடுங்குளிருமாக - இவ்வுலகில் பேரழிவுகளை நிகழ்த்தி, தன்னை வெல்லும் சக்தி மனிதனுக்கில்லை என, இயற்கை அவ்வப்போது எச்சரித்து வந்திருக்கிறது.

இயற்கையின் விதியை ஊழ்வினை என்றால் அதன் வெளிப்பாடு ஊழி என்றாகிறது. சில நேரங்களில், மூலக்கூறுகள் சில சேர்ந்தும், கொடிய ஊழிகளை உண்டாக்கும். இப்போதைய ஊழி மிக மிகக் கொடியது. ஐந்தும் சேர்ந்தது. ஆம், பிளந்த நிலத்தைக் கடல் மூழ்க அடிக்கும். புயல், மழை, இடி, மின்னல் என அனைத்தும் சேர்ந்த ஊழி இது.

அப்படியானால் ஊழியை வெல்லவே முடியாதா? முடியாது; ஆனால் மனித அறிவினாலும் ஆற்றலாலும் அதைச் சற்றுத் திசை மாற்றலாம் அல்லது வளைந்து கொடுத்து உடல் சக்தியினால் சற்றுக் கூடுதல் நேரம் தாக்குப் பிடிப்பவர் மீளலாம். அந்த நேரத்திலும் நல்லன் கணியனார் சொன்ன வார்த்தைகள் மனதில் ஓடின.

அலைகளின் உயரம் நேரம் செல்லச் செல்ல உயர்ந்து கொண்டே இருந்தது. ஒரு கட்டத்தில் மேல் தளத்தில் இருந்த அவன் தலைக்கு மேல் இரண்டு முழ உயரத்திற்குச் சென்று, மீண்டும் தாழ்ந்து, மேல் தளத்திற்கும் கீழே குறைந்தது. ஆக, அலையின் உயரம் இருபத்தைந்து முழத்திற்கும் குறையாமல் இருக்கக் கூடும் எனக் கணக்கிட்டான்.

பேரலைகளில் அவன் மூழ்கும்போது மூச்சடக்கி, கழுத்தளவு தாழும்போது மூச்சுவிட்டுத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, அடுத்த அலைக்கு ஆயத்தமாகி, இப்படியே தன் போராட்டத்தைத் தொடர்ந்தான். முப்பது நாழிகைக்கு மேல் இந்தப் போராட்டம் நீடித்தது. இறுதியில், இயற்கையும் தன் சீற்றத்தை அடக்கிக் கொண்டு அமைதியானது.

இனி, போராட்டம் இல்லை என்ற நிலை வந்தபோது, கட்டுகளை நீக்கிக் கொண்டு, அவன் தன் சக்தியெல்லாம் இழந்து, அயர்ந்து, தளத்தில் சாய்ந்தான்.

அமைதி, அமைதி, அமைதி, எங்கும் அமைதி.

முகத்தில் சற்றே சுடுவதுபோல் இருந்தது. கண் விழித்தான். ஞாயிறு முகத்திற்கு நேரே பளிரென ஒளிர்ந்தது. விரைத்திருந்த உடலில் சற்றே சூடேற, சிறிது நெளிந்தான். கொஞ்சம் கொஞ்சமாக நினைவுகள் திரும்ப, முதல் நாள் நடந்ததெல்லாம் புரிய ஆரம்பித்தன. கையையும் காலையும் நீட்டி, மடக்கி, உடலை வளைத்து, நெளித்து, இயல்பு நிலைக்கு வர முயன்றான்.

வயிறும் நாவும் பசி தாகத்தை நினைவூட்டின. பிடித்துக் கட்டி வைத்திருந்த தென்னங் குலைகள் நல்லவேளை அப்படியே இருந்தன. காயைப் பிளந்து, நீரைக் குடித்து உள்ளீட்டைத் தின்றான். சற்றுக் களைப்பு நீங்கியவுடன், அவன் நினைவுக்கு வந்தது அந்தப் பேழைகள் தாம். அவை பத்திரமாக இருப்பதைக் காண மகிழ்ச்சி ரேகைகள் அவன் முகத்தில் தோன்றின.

நாட்டையும், தன் மக்களையும் ஊழிக்கு இரையாக்கிவிட்டு இப்படி ஓடிவந்தது எதற்காக? நல்லன் கணியனார் ஊழியினால் இந்த நிலப்பரப்பே பிளவுபட்டு, கடல் நீர் நிலத்தை ஆக்ரமிக்கப் போவதைச் சொல்லி, அழியாச் செல்வங்களான இந்த இலக்கியப் பேழைகளைத் தனியாளாகக் கொண்டு செல்ல வற்புறுத்தியதனாலேயே திருமாறன் இந்த முயற்சியில் ஈடுபட்டான்.

கடல் நீர் நான்காவது நிலை வரை வந்து நிறைந்து, நிலைத்து நின்றுவிட்டது. அப்படியானால்?

“நிலப்பரப்பு முழுவதும் கடல் கொண்டு விட்டது. நாட்டையும் நாட்டு மக்களையும் மாண்டுபோக

விட்டுவிட்டுத் தான் மட்டும் உயிர் பிழைத்தது சுயநலமா? இதுவா மன்னனின் கடமை?"

"இலக்கியமே அழியாதது - அதை அழிய விடக் கூடாது."

நல்லன் கணியனாரின் ஆழ்ந்த, அழுத்தமான, உறுதியுடன் நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து வந்த அந்தச் சொற்களின் சக்தியால் உந்தப்பட்டுப் புறப்பட்டதை அப்போது நினைவு கூர்ந்தான் - சோர்ந்தான்.

மக்களைக் காப்பாற்றுவது மன்னனின் கடமைதான். ஆனால், அதனினும் இன்றியமையாதது இஃதன்றோ.

கலங்கரை விளக்கத்தில் கிடந்த மரங்கள், கழிகள், கயிறுகள், துணிகள் திருமாறனின் எண்ணத்தை இயக்கின; செயலாற்றலைத் தோற்றிவித்தன. உடனே கட்டுமரம் உருவாகியது.

அதில் தென்னங் காய்களைப் பத்திரமாக ஏற்றிக், கட்டி, கடல் பயணத்தைத் தொடங்கினான். பகலில் பாய்மர நிழலினாலும், இரவில் வடமீனின் துணையினாலும் திசையறிந்து படகைச் செலுத்தினான். கொடும்வெயில், கடும்குளிர், பெருமழை, எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு இருபத்தைந்து நாட்கள் கடற்பயணத்தை மேற்கொண்டான்.

இறுதியாக, அவன் கரை ஒதுங்கியது மணலூர். சேர்த்து வைத்திருந்த சக்தியெல்லாம் இழந்து, தரைமீது சாய்ந்தான் திருமாறன்.

# கடலுள் மாய்ந்த காவலன்

சற்றே பின் தங்கி விட்ட கப்பலின் தலைவன், எதையோ உணர்ந்து திடுக்கிட்டான். முகம் வெளிறியது.

முன்னால் சென்ற இரண்டு கப்பல்களும் ஏதோ ஒரு வட்டப் பாதையில் ஈர்க்கப்பட்டுத் தாமாகவே சுற்றத் தொடங்கின. அந்தக் கப்பல்களில் பயணம் செய்வோர் இந்த நிலை மாற்றத்தை சிறிதும் உணர்ந்திருக்க மாட்டார்கள். தான் சற்றுத் தொலைவில் இருந்ததால் - அதுவும் அதன் தன்மையைக் கூர்ந்து கவனித்ததால் - அறிந்து கொள்ள முடிந்தது. இன்னும் அரை நாழிகை போயிருந்தால், தன் கப்பலும் அந்த வட்டப் பாதைக்குள் நுழைந்து சிக்கிக் கொண்டிருக்கும்.

மீகாமன் விரைந்து செயல் பட்டான். பாய்கள் இல்லாத நிலையில் துடுப்புப் போடும் மாலுமிகளை விரைந்து துடுப்புப் போட ஆணையிட்டான். எந்தத் திசையில் எவ்வளவு வேகமாக வலிக்கவேண்டும் என்று கத்தி, விளக்கி, அதற்கான 'ஏலேலோ ஐலேசா' ஓசையையும் கப்பல் செல்லும் திசையையும் கையால் காட்டிச் சத்தமிட்டான்.

பயணிகளையும் முடிந்தவரை மாலுமிகளுக்கு உதவியாகத் திசையும் திடமும் மாறுபடாமல் துடுப்பு வலிக்கச் செய்தான். இன்னும் பத்து நொடிகள் தாமதித்திருந்தாலும் அந்த இரண்டு கப்பல்களுடன், இந்த மூன்றாவது கப்பலும் சுழலில் அகப்பட்டிருக்கும். முன்னால் போன இரு கப்பல்களும் இப்போது தம் சுழற்பாதை சுருங்கிவிட, அவற்றின் சுழற்சி வேகம் அதிகரித்ததைக் கண்டான்.

பெரு முயற்சியோடு எல்லோருடைய சக்தியையும் ஒருங்கே பயன்படுத்தியதன் விளைவாகக் கப்பல் சிறிது சிறிதாகக் கடலில் தோன்றிய சுழற்பாதயை விட்டு விலகி விலகிப் போய்க்கொண்டிருந்தது. ஒரு பாதுகாப்பான தொலைவை அடைந்து விட்டோம் என்று உறுதிப் படுத்திக்கொண்ட மீகாமன், பின் பக்கம் திரும்பி அந்த இரண்டு நாவாய்களின் அப்போதைய நிலை என்னவென்று பார்த்தான்.

சுழலின் வட்டப் பாதை குறுகக் குறுக, கப்பல்கள் செல்லும் வேகம் மிகுந்து கொண்டே போவதைத் தொலைவிலிருந்து பார்த்தபோதும் அவனால் நன்கு உணர முடிந்தது. வேதனை அவன் நெஞ்சைப் பிழிந்தது.

அங்கே கடலில் பெருஞ்சுழல் எப்படி ஏற்பட்டது? கடலின் உள் நீரோட்டத்தைக் கடலின் மேலிருந்து வரையறுக்க இயலாது. இயல்பாகவே அங்குச் சுழல் ஏற்படக் கூடும். ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்து மேடு பள்ளங்களின் ஊடே ஓடும்போது சுழிகள் தோன்றும். சிறு படகுகளையும் ஆற்றுச் சுழிகள் சுருட்டித் தம்மோடு இழுத்துச் சென்றுவிடும் அல்லது அடி மணலில் அழுத்திப் புதைத்துவிடும். சிறிய ஆற்றின் பெரிய வெள்ளமே இத்துணைக் கொடுமை புரியும் என்றால், அகிலத்தையே சூழ்ந்திருக்கும் ஆழியின் சக்தி எப்படிப்பட்டதாக இருக்கக் கூடும்?

ஊழிக்காலத்தில் நிலநடுக்கத்தால் பூமியில் பெரும் பிளவு ஏற்படும்போது அதனுள் நுழைய நாற்புறமிருந்தும் கடல் நீர் விரையும் காரணத்தால் இப்படிப்பட்ட கொடுமையான சுழல்கள் தோன்றக் கூடும்.

குரள்வளையை இறுக்கினால் மனிதனின் தொண்டையினின்றும் வெளிப்படக்கூடிய கோரமான சத்தம் - நீர் சுழித்து இறங்கும்போது கேட்கும். இவ்வளவு தொலைவிலிருந்தும் இந்தப் பேரொலி கேட்குமேயானால், அருகிலிருந்து கேட்க நேர்ந்தால் . . .?

இப்படிப்பட்ட ஆற்றல் மிக்க சுழிகள் அருகிலிருக்கும் மரங்கள், மாடமாளிகைகள், பெருங்கப்பல்கள் அனைத்தையும் உள்ளே இழுத்துக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவை.

அதோ; அந்தக் கப்பல்கள் பம்பரம்போல் சுழல்கின்றன. ஐயோ! அடுத்த நொடியில் அவை குப்புறச் சாய்ந்து அந்தச் சுழிக்குள் மூழ்கி மறைந்துவிட்டன.

நெஞ்சமே வெடித்துவிட்டது போல் ‘ஆ அ அ . . ஐயையோ!’ என்று மீகாமன் கதறினான். துடுப்புப் போடும் மாலுமிகளும் பயணிகளும் திடுக்கிட்டுத் துடுப்புப் போடுவதை நிறுத்திவிட்டு அவனைப் பார்த்தனர்.

“நிறுத்தாதீர்கள்! நிறுத்தாதீர்கள்! வேலையைத் தொடருங்கள்” மீகாமன் கத்தினான்.

கப்பல் மெல்லப் பாதுகாப்பான தூரத்திற்கு வந்துவிட்டது. ஆயினும் மழை, புயல் தொடர்ந்து நீடித்தன. கப்பலில் சேர்ந்துவிட்ட நீரை வாரி வெளியில் இரைத்தது ஒரு குழு. துடுப்பைத் தொடர்ந்து வலித்தது இன்னொரு குழு. வெளிறிய முகத்துடன் அவர்களுக்குக் கட்டளைகள் பிறப்பித்துக் கொண்டிருந்தான் மீகாமன்.

ஏறத்தாழ ஒரு நாள் நீடித்தது அந்தப் போராட்டம். அனைவரும் வலுவிழந்திருந்தாலும் உயிரைக் காத்துக்கொள்ளும் முயற்சியில் இருந்ததை உணர்ந்திருந்ததால் எதையும் பொருட்படுத்தாமல் மிகுந்த சக்தியுடன் இயங்கினார்கள்.

காற்றின் வேகம் குறைந்தது. கப்பலின் பயணத் திசையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்று உறுதியானபோது பாய்களை ஒவ்வொன்றாக விரிக்கச் செய்தான்.

புயல் ஓய்ந்தது. எங்கும் அமைதி.

மௌனம் கலைந்து விம்மினார்கள் சிலர். வாய்விட்டு அழுது தங்கள் மன இறுக்கத்தைப் போக்கிக் கொண்டனர் சிலர். ஆனால் மற்ற இருகலங்களிலும் சென்றவர்கள் இளவரசர் இளம்பெருவழுதியோடு யாராலும் தடுக்கமுடியாத ஊழிக்கு இரையாகிவிட்டனர் என்ற செய்தியை மீகாமன் மூலம் கேட்டுக் கூடவந்த மாலுமிகளும் மக்களும் அதிர்ச்சியில் உறைந்தனர். பொங்கி வரும் அழுகையை அடக்கமாட்டாமல் குலுங்கினர்.

"இந்தச் செய்தியைத் தென்னவரிடமும் ஈழ மன்னரிடமும் எப்படிச் சொல்வது?" கப்பல் தலைவன் புழுங்கினான்.

கப்பல் நின்ற இடத்தை ஒருவாறு கணித்து அமைதியாகிவிட்ட கடலில் கபாடபுரம் நோக்கித் திருப்பினான். அவனுடைய கணக்குப்படி பாதையை விட்டுப் பத்துக் கல் தொலைவு விலகிவிட்டிருந்தான். இன்னும் இரண்டு நாள் பயணத்தில் கபாடபுரம் அடைந்துவிடலாம் என்பது அவன் கணக்கு.

இரண்டல்ல, மூன்று நாள் பயணத்திற்குப் பிறகும் கரையேதும் தென்படவில்லை. எங்கும் கடல்தான். அவனது பட்டறிவின்படி அந்த இடத்தில் அவனைச் சுற்றிப் பெரிய நிலப்பரப்பு இருந்திருக்க வேண்டும். ஆனால் இல்லை. அதன் பொருள்?

அந்த நிலப்பரப்பு முழுவதும் கடலுள் மூழ்கி விட்டதா? நிலம் பிளந்து கடல் உட்புகுந்து விட்டதா? அந்தச் சுழலில்தான் அந்த இரு கப்பல்களும் மூழ்கிப் போய்விட்டனவா? அப்படியாயின் அந்தப் பக்கத்தில் நிலப்பரப்பு முழுவதையும் கடல்கொண்டு விட்டதா? உயர்ந்தோங்கிய மாடங்கள், அரண்மனைகள், நெடுவரைகள், பெருங்காடுகள் இவற்றையே காண முடியாதபோது சிறு குடில்கள், மக்கள் நிலை? நினைத்தாலே நெஞ்சம் பதைத்தது. ஒரு பேரரசைக் கடல் கொண்டுவிட்டதா? ஐயோ! என்ன கொடுமையிது!

கப்பலைத் திருப்பி ஈழம் செல்ல முடிவெடுத்தான். நெஞ்சில் ஓர் உறுத்தல். ஈழத்தையும் கடல் கொண்டிருக்குமோ? ஈழத்தையும் ஆழி உட்கொண்டிருந்தால் வேறு எங்குதான் செல்வது? என்ன தான் செய்வது? குழப்பத்தோடு ஈழம் நோக்கிக் கப்பலைத் திருப்பச் செய்தான்.

காற்றின் வீச்சு பெரிதும் உதவியதால் ஏழு நாள் பயணத்திற்குப் பின்னர் ஈழம் வந்தடைந்தார்கள். மலைத்தீவாம் ஈழத்தில் மாற்றம் ஏதுமில்லை. ஈழம் ஒரு பெரிய மலைத் தீவாகையால் அது மூழ்கவில்லை.

ஈழ வேந்தனைக் கண்டு, அவன் பாதங்களைப் பற்றிக்கொண்டு, வற்றாத கண்ணீரைத் துடைக்கவும் தோன்றாது, இளம்பெருவழுதி கடலுள் மாய்ந்ததைக் கூற, அனைவரும் ஆற்றாது அழுதனர்.

கபாடபுரமே மூழ்கிவிட்டதென்றால்? . . . . தென்னவன், திருமாறன், கயல்விழி ஆகியோரும் நாட்டோடு கடலுள் மூழ்கிப் போய்விட்டார்களோ?

எங்கும் சோகம்! சோகம்! சோகம்!

# ஊழின் வலியது யாவுள

அந்தக் கொடூரமான இரவு முடிந்து மறுநாள் விடிந்தது.

குற்றுயிராய்க் கிடந்தவர்களின் மரண ஓலம், கைகால் இழந்தவர்களின் கதறல், காயமுற்றோரின் பரிதாப அழுகை எங்கும் ஒலித்தன. பெரியவர்கள், இளைஞர்கள், குழந்தைகள் என அனைத்து மக்களும் வருந்தி நொந்து போயினர். நல்ல நிலையில் உள்ளவர்கள் உடனடியாக உதவிப் பணிகளைத் துவக்கினர்.

காயம் உற்றோருக்கு மூலிகை வைத்தியம், அசைய முடியாதோரைத் தூக்கிக் கொண்டுபோய்ச் சற்று வசதியான இடத்தில் படுக்க வைத்தல், பசியால் வாடும் குழந்தைகளுக்குப் பாலும், பெரியவர்களுக்கு உடனடியாகக் கஞ்சியும் கீரையும் சமைத்துத் தருதல், மீன், கோழி, ஆடு போன்றவற்றை ஆக்கி உண்ணக் கொடுத்தல் போன்ற அரும் பணிகளை ஆற்றினர்.

மக்களோடு மக்களாகச் சேர்ந்துவிட்ட - சேர்க்கப்பட்டுவிட்ட தென்னவன் பெருங்கோ வழுதியும், இளவரசி கயல்விழியும் தங்களால் இயன்ற அளவிற்கு மீட்சிப் பணிகளில் ஈடுபட்டனர். பெண்கள், குழந்தைகள் இவர்களுக்கு மருத்துவம் பார்த்த மருத்துவர்களுக்கு உதவியாக மூலிகை வைத்துக் கட்டுப்போடுதல், காய்சல் வராமல் தடுக்க உள்ளுக்கு மூலிகைச்சாறு தருதல் போன்றவற்றைக் கயல்விழி மேற்கொண்டாள்.

கயல்விழி தொண்டாற்றும் பாங்கு யாவரையும் கவருவதாய் இருந்தது. அவர்கள் அந்த ஊருக்குப் புதியவர்கள் என்பதைப் புரிந்து கொண்டார்களே அன்றி

அவர்கள்தாம் அந்நாட்டு அரசரும் இளவரசியும் என்பதைத் தெரிந்திருந்தோர் அங்கு யாரும் இருக்கவில்லை.

முகத்தில் கம்பீரமும் செயலில், பேச்சில் அருளுடைமையும் மிடுக்கும் எல்லோரையும் கட்டிப்போட்டன. மக்களோடு மக்களாக எல்லாரையும் போலக் கிடைத்த உணவுகளை உண்டு, எளிய ஆடைகளை அணிந்து இனிமையாய்ப் பேசும் அன்னையின் அன்பு நிறைந்த அந்தக் கன்னியின் எழில் தோற்றம் கண்டு வியந்தார்கள்.

நிலப்பகுதியில் இவ்வளவு அழிவை ஏற்படுத்திய சூறாவளி, கடல் பகுதியில் என்னென்ன பேரழிவை ஏற்படுத்தியிருக்குமோ, யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.

தென்னவன்,அங்கிருந்த ஊர்ப் பெரியவரிடம் கேட்டான், "பெரியவரே, எங்கள் இருவருக்கும் இரண்டு புரவிகள் ஏற்பாடு செய்து கொடுத்தால், நாங்கள் கடலோரப் பகுதிக்குச் சென்று மக்களின் நிலையைப் பார்த்து வருவோம். உதவிக்கு வர விரும்புவோர் உடன் வரலாம். ஆனால், எக்காரணம் கொண்டும் இங்கு நடக்கும் மீட்புப்பணி, உதவி, மருத்துவம், உணவளித்தல் போன்ற அனைத்தும் தொய்வில்லாமல் நடந்திட வேண்டும்".

தென்னவன் விருப்பிற்கு ஏற்ப ஐவர் குழு ஒன்று குதிரைகளில் தெற்கு நோக்கி விரைந்தது. வழியெங்கும் பெருமரங்கள், பனை மரங்கள் வேரோடு வீழ்ந்து கிடந்தன. மணல்மேடுகள் இரு பக்கங்களிலும் புதிதாகக் குவிந்து கிடந்தன. சாலைகளைச் சீர்படுத்திக் கொண்டிருந்தனர் மக்கள்.

சாலையின் இருமருங்கிலும் மாடுகள், ஆடுகள், குதிரைகள், நாய்கள் இன்னும் மற்ற விலங்குகளும் இறந்து கிடந்த காட்சி தென்னவனைத் துணுக்குறச் செய்தது.

இடிந்த வீடுகள், தரைமட்டமான குடிசைகள் கணக்கிட முடியாத பேரழிவைக் காட்டின.

உயர்ந்து வளர்ந்த மரங்களின் மேல் குப்பபைகள்! வீசிய காற்றில் அவை சிக்கினவா? அன்றி வெள்ளம் உயர்ந்து வடிந்தபோது அந்தக் குப்பைகள் தங்கினவா?

அங்கிருந்த மக்களிடம் கேட்டதில் இரண்டு வகையிலும் அது நேர்ந்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆங்காங்கு வேலை செய்தவர்களிடம் எப்படி எப்படி எதை எதைச் செய்ய வேண்டும் என்றும், யார் யாரிடம் என்னென்ன உதவிகளைப் பெற வேண்டும் என்பன பற்றிய வழிமுறைகளைக் கூறிக் கொண்டும் சென்று கொண்டிருந்தான் தென்னவன். ஆனால், யாரிடமும் தான் யாரென்று தெரியப்படுத்திக் கொள்ளவில்லை. அந்த நேரத்தில் அது தேவையும் இல்லை.

கொற்கைத் துறைமுகத்தை அடைந்தவர்கள் அங்கு ஏற்பட்டிருந்த பேரழிவைக் கண்டு சொல்லொணாத் துயரம் அடைந்தனர். துறைமுகத்தில் நங்கூரமிட்டு நின்றிருந்த நாவாய்கள் கூட சின்னாபின்னமாக அழிந்துவிட்டிருந்தன. பல கப்பல்கள் கடலில் மூழ்கியும் போய்விட்டிருந்தன.

புயல் சின்னம் தெரிந்தவுடன் மக்கள் பாதுகாப்பான இடத்திற்குச் சென்றுவிட்டதால், மனித உயிர்ச் சேதம் மிகவும் குறைவாகவே இருந்தது. சில காத தூரமே சென்றிருப்பார்கள். பரந்த கடல் தெரிந்தது.

கரையோரமாகவே பயணித்து ஆங்காங்கே விசாரித்தபோது பொருநை நதிக்குத் தெற்கே மிகச்சிறிய நிலப்பரப்பே எஞ்சியிருப்பதை அறிந்து அயர்ந்துவிட்டார்கள். குமரியாறு இருந்த இடமே தெரியவில்லை என்றால், பாண்டியரின் கோநகர் இப்போது கடலுக்கடியிலா?

அவர்கள் மணலூர் (மணவூர்) வந்தடைந்தபோது அப்பகுதி மக்களும் அங்கே தப்பி வந்த பல்லாயிரக்கணக்கான தென்பகுதி மக்களும் ஒதுங்க இடமின்றித் தவிப்பதைக் கண்டு நெகிழ்ந்தனர். உள்ளூர் மக்கள் அவர்களுக்குத் தங்களால் இயன்ற அளவு உணவளித்தனர். அதையும் இம்மாபெரும் கூட்டத்திற்கு எத்தனை நாட்களுக்குத்தான் தொடர்ந்து செய்திட முடியும்? இதயம் கனத்துப் போனான் தென்னவன்.

கூட்டத்தினரைக் கேட்டபோது, அவர்கள் ஏறத்தாழப் பத்துப் பதினைந்து காத தொலைவிலிருந்து தப்பி வந்தவர்களே என்றறிந்தான். பெரும்போலோர் குமரியாற்றின் வடமேற்குப் பகுதியிலிருந்து வந்தவர்களே.

கபாடபுரத்திலிருந்து யாரும் வந்தார்களா என்று கேட்டபோது, "ஊகூம், ஒருவரும் இல்லை. அஃது ஐம்பது காத தூரம் இருக்குமே; அந்தப் பக்கத்தில் புயலின் தாக்கம் இருந்ததோ, இல்லையோ. இருந்திருந்தால் எவ்வளவு கடுமையாக இருந்திருக்குமோ, தெரியவில்லை" என்று அவர்கள் கூற, இருவரின் நெஞ்சிலும் குருதி உறைந்தது.

தம் நாட்டு மக்கள் - தன் மகன் திருமாறன், இளம்பெருவழுதி இவர்களின் நிலை என்ன ஆகியிருக்குமோ? அவர்களும் புயலில் சிக்கி மாண்டுவிட்டார்களோ?

நடைப்பிணமாகத் தென்னவனும், கனத்த இதயத்துடன் கயல்விழியும் திரும்பிப் பொதிகை நோக்கிப் பயணித்தனர்.

மாபெரும் பாண்டிய மண்டலம் குறுகிச் சிமிழாகச் சிறுத்து விட்டதோ?

அவர்கள் அந்த இடத்தைவிட்டு நீங்கிச் சற்று நேரமே ஆகியிருக்கும்; மிதவைப் பலகையில் பாய்விரித்து ஒரு மனிதன் கரை ஒதுங்கினான்.

ஆம், திருமாறன்தான் அவன்.

மணலூர் மக்கள் ஓடிச்சென்று பார்த்த போது, கடற்கரையில் தவழ்ந்து வந்து மயங்கி விழுந்தான். அவன் கொண்டுவந்த மூங்கில் பேழைகளும் அவனோடேயே நெருங்கி ஒட்டிக் கொண்டன.

கடல் ஊழிக்குத் தப்பிய மக்கள், கூட்டம் கூட்டமாகத் தென் பகுதியில் குழுமினர். தொடர்ந்து அத்தனை பேரும் அங்கு இருக்க முடியாது என்று உணர்ந்து சிறு சிறு கூட்டமாகப் பிரிந்து வடக்கு, வடமேற்கு, வடகிழக்கு எனப் பல திசைகளில் பயணம் செய்தனர். ஆங்காங்குத் தங்கி, மீண்டும் தொடர்ந்து, பொருநை நதிவரையும், அதையும் தாண்டிச் சென்றும் தரிசு நிலங்களில் தங்கினர். அங்கேயே தம் வாழ்க்கையைத் தொடர்ந்தனர்.

அகதிகளாக வந்தவர்களுக்கு ஆதரவளித்தனர் பலர். வீடு கட்டிக் கொள்ளக் கழிகள், கீற்றுகள், குழைகள் தந்தனர் சிலர்; உணவு சமைத்திடக் கலங்கள் கொடுத்துதவினர் சிலர்.

வடமேற்கே சென்ற மக்களுக்குச் சேரன் குட்டுவன் - திருமாறனின் நண்பன்- மிகுந்த ஈடுபாட்டோடு உதவிகளை வழங்கினான். பாரதப் போரில் நடுநிலை நின்று பாண்டவர் மற்றும் கௌரவர் படை வீரர்களுக்குச் சோறும் காயமுற்றோருக்கு மருத்துவ உதவியும் செய்த பெருஞ்சோற்றுதியனின் வழி வந்தவனாயிற்றே, அந்தக் கொடைகுணம் அப்படியே இருந்தது குட்டுவனிடம்.

# ஆரைக்கல்லில் அரசியல் புயல்

கொங்கர் தலைநகர் ஆரைக்கல் (இன்றைய நாமக்கல்) அன்று கொடியுடை வேந்தர்களின் கூட்டத்தால் நிறைந்திருந்தது. உயர்ந்த மதிற்சுவர் சூழ்ந்த பெரிய அரண்மனை. அதிலே பிரம்மாண்ட அத்தாணி மண்டபம். அதில் ஆலோசனைக் கூட்டம்.

பெருவேந்தர்கள் சேரர், சோழர், கொங்கர், தொண்டையர் மற்றும் குறுநில மன்னர்கள், வேளிர், அனைத்து நாட்டு அமைச்சர்கள், தளபதிகள், புலவர்கள், ஒற்றர்கள், வேணாட்டுக் கொற்றவன் (பாண்டிய நாட்டு வேளிர்) - என மண்டபம் நிரம்பி வழிந்தது. ஆனால்?

அவர்கள் முகத்தில் குதூகலம் இல்லை; குழப்பம் இருந்தது. மகிழ்ச்சி இல்லை; ஆழ்ந்த வேதனையும் சோகமும்தாம் இருந்தன. அமைதியினூடே ஒரு பரபரப்பு எல்லோர் முகத்திலும் இழையோடியது.

தொண்டைமான் பெருந்திரையன் எழுந்து பேசினான்.

“இந்த அவசர ஆலோசனைக் கூட்டத்திற்கு நம் சோழ மண்டல மாமன்னர் பெருஞ்சென்னி தலைமை ஏற்று நடத்த உங்கள் ஒப்புதல் வேண்டுகிறேன்.”

அன்றைய சூழலில் அந்த முன்மொழிவுக்கு எதிர்ப்புச் சொல்லும் மன நிலையில் யாரும் இல்லாததால் அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டது. ஆயினும் வயதில் மூத்த சேரன் குட்டுவன் தலைமை ஏற்காதது பலருக்கு வருத்தமே.

பெருஞ்சென்னி எழுந்து கணீரென்ற, ஆனால் நெகிழ்ச்சியான குரலில் பேசினான்.

"வேந்தர் பெருமக்களே! மன்னர்களே! வேளிர் குலத்தோரே! அறிவார்ந்த அமைச்சர்களே! படைத்தளபதிகளே! புலவர் பெருமக்களே! தமிழகத்தின் பெருங்குடி மக்களே! கடந்த மூன்று திங்கள்களில் பாண்டிய மண்டலத்திற்கு நேர்ந்த பேரழிவைப் பற்றிக் கேள்வியுற்று நாம் இங்கே கூடியுள்ளோம். தெற்கே இருந்து வந்த யாத்திரிகர்கள் மூலமும், வணிகர்கள் மூலமும், பாண்டிய நாட்டு ஒற்றர்கள் மூலமும் பாண்டிய மண்டலத்தின் பெரும்பகுதி அழிந்துவிட்டதை அறிகிறோம். வேணாட்டு மன்னர்கூட மீட்புப் பணிகள் பெருமளவில் நடந்து வருவதாகக் கூறுகிறார். குமரியாறு கடலுக்குள் ஐக்கியமாகி விட்டதைத் தப்பிப் பிழைத்து வந்தவர்கள் வாயிலாக அறிகிறோம். பாண்டிய மண்டலத்தின் எல்லையானது பொருநை நதிக்குத் தெற்கே மிகச் சிறு நிலப்பரப்பாகச் சுருங்கிவிட்டது.

தமிழ் வளர்க்கும் பொறுப்பை ஏற்ற பாண்டி மண்டலம் இப்படி ஊழிக்கு இரையாகுமென யார் அறிவர்? பாண்டிய வேந்தரும், அவருடைய நாட்டு மக்களும், இளவரசர்களும், இளவரசியும் ஊழிக்கிரையாகி மாய்ந்து விட்டனர் எனச் செய்தி வந்து நமக்கு ஆறாத்துயரத்தை அளிக்கின்றது.

இதுகாறும் நாம் பாண்டிய மன்னர்களின் தலைமையின் கீழ் இயங்கி வந்தோம். இப்போது தலைமை இல்லை. இந்தத் தருணத்தில் இனி நாம் மேற்கொள்ள வேண்டிய நிலை என்ன? என்பது பற்றி என் கருத்தை முதலில் நான் கூறிவிடுகிறேன்.

இனி, நம் ஐந்து மண்டலங்களும் தனித்தனியாகத் தன்னாட்சி பெற்ற நாடாகத் திகழட்டும். நம் செம்மொழியாம் தமிழுக்கு மட்டும் ஏதும் ஊறு வந்தால் நாம் இணைந்து போராடுவோம். பாண்டியர்க்கு நாம்

செலுத்தியது போல் ஐந்து மண்டலங்களில் யாரும் யாருக்கும் கப்பம் செலுத்த வேண்டியதில்லை."

இடைமறித்தான் சேரன் குட்டுவன்.

"தமிழ் வளர்ச்சிப் பணிக்கு நாம் செலுத்தும் உதவித்தொகையைக் கப்பம் என்பது சரியன்று. மேலும் தமிழ் வளர்ச்சிக்கு நாம் உவந்து தந்த பொருள் அது."

சோழன் : "அந்தச் சொல்லைப் பயன் படுத்தியதற்காக மன்னிக்க வேண்டுகிறேன். இப்போதும் நாம் தனியாக ஆட்சி செய்து வந்தாலும் அயலார் பார்வையில் - வேற்று நாட்டவர் பார்வையில் பாண்டியர்க்குக் கட்டுப்பட்டவர்கள் என்ற தோற்றத்தையே தந்து வந்திருக்கிறது. மற்ற நாடுகளில் தமிழ் நாட்டைப் பாண்டிய நாடென்றும் தமிழர்களைப் பாண்டியர் என்றும் தானே அழைக்கக் கேட்கிறோம்? இஃது எல்லா வேந்தர்களுக்கும் தெரிந்ததுதானே? எனவேதான் . . . ."

சேரன் : "விடுதலை வேண்டுமென விழைகிறீர்கள்."

சோழன் : "அப்படிச் சேர வேந்தர் கூறினால் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். பாண்டிய நாட்டின் பெரும்பகுதி அழிந்து மிகக் குறுகிய நிலமாகிவிட்டது. பாண்டிய வேந்தரும் அவரது வாரிசுகளும் இப்போது இல்லை என்ற நிலை. மண்டலமும் குறுகிவிட்டது. இனிப் பாண்டியர் யாராயினும் குறுநில மன்னராகத் தானே இருக்க முடியும்? அவர்களின் நிழலில் இருக்க விரும்புவீர்களா? அல்லது தனியாட்சி பெற விரும்புவீர்களா? இது தான் என் கேள்வி."

தனியாட்சியே வேண்டுமெனக் கொங்கரும் தொண்டையரும் ஏற்க, குட்டுவன் மட்டும் தயங்கினான்.

"குட்டுவரே ஏன் தயக்கம்? உங்கள் கருத்துக்களைத் தயங்காமல் கூறுங்கள்."

"எனக்கும் தனியாட்சி நடத்த விருப்பமே . . . ."

பெரும் ஆரவாரம் . . .

"ஆனால் . . . எதிர் பாராது வந்த கடல்கோள்போல் எதிர்பாராது பாண்டிய வேந்தரோ அல்லது அவரது வாரிசுகளோ வந்து விட்டால்?"

"இது நியாயமான கருத்து. நடக்க முடியாத ஒன்றாக இருந்தாலும், சேரரின் எண்ணப்படி அப்படி நேர்ந்துவிட்டால்? என்று நினைப்பதுவும் சரியானதே. அப்படி ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் . . . நாம் அனைவரும் ஒன்று கூடிப் பாண்டிய மன்னரோடு கலந்து பேசுவோம். பேசி முடிவெடுப்போம்."

சோழன் பெருஞ்சென்னியின் மிடுக்கும் வீரமும் ஆடம்பரமும் ஆர்ப்பாட்டமும் குரலின் சக்தியும் அனைவரையும் பிணித்துக் கட்டுப்பட வைத்தன.

எஞ்சிய பாண்டிய நிலத்திற்கு வேணாட்டுக் கொற்றன் மாவேள் எவ்வியன் அந்த அவையிலேயே மன்னனாக்கப்பட்டான். அவனுக்கு எவ்வியன் பெருவழுதி எனப் பெயர் சூட்டிப் பாண்டிய மண்டலத்தின் மன்னவன் வாழ்க என வாழ்த்தப் பட்டான்.

# பாண்டியர் நிலை

களைத்து, இளைத்து, உருமாறிக் கரையில் ஒதுங்கிய திருமாறனை யாரும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. ஊர்மக்கள் அவனைச் சூழ்ந்து உதவ முன் வந்தனர். பக்கத்திலிருந்த வீட்டிற்கு அழைத்துச் சென்று நன்கு குளிப்பாட்டி, உணவளித்து, உபசரித்து, உறங்க வைத்தனர். களைப்பகன்று எழுந்ததும் அவனைப் பற்றியும் அவன் வரலாற்றையும் விசாரித்தனர்.

தான் யார் என்பதைத் தெரிவித்துக் கொள்ளாமல் கபாடபுரத்திலிருந்து புறப்பட்டது முதல் தன் கதையைக் கூறினான்.

தமிழ்க் காவியப் பேழைகளைக் காக்க அவன் அடைந்த இன்னல்களைக் கேட்டு வியந்து பாராட்டினர்.

திருமாறன், "என்னைப் போல் உயிர் தப்பியவர்கள் யாரேனும் வந்தார்களா?' எனக் கேட்க, 'பலர் வந்துள்ளனர்; ஆனால் கபாடபுரத்திலிருந்து நீங்கள் ஒருவர்தான் பிழைத்து வந்திருக்கிறீர்கள். நீங்கள் கரையேறிய மணலூர் தான் இப்போது கடல் எல்லையாகச் சுருங்கிவிட்டது" என்றனர்.

குமரியாற்றின் மேற்பகுதியில் வடக்குக் கரையோரத்தில் இருந்த பேரூர்தான் மணலூர்.

'அப்படியானால் குமரி கடலோடு கலக்குமிடத்தில் அமைந்திருந்த கோநகர் கபாடபுரத்தை உள்ளடக்கிய நிலப்பரப்பும் அதைச் சுற்றிலும் பரவிக் கிடந்த பெருந் தீவுகளும் கடலுக்குள் மூழ்கிவிட்டனவா? மாபெரும்

பாண்டிய மண்டலம் குறுகிச் சிறுத்து விட்டதா? பாண்டிய மண்டலத்தின் வடக்கு எல்லை பொருநை நதி என்றால் இப்போது அதன் எல்லை சில காத தூரம் தான் இருக்கும். சிற்றரசர்களின் நாட்டின் அளவைவிடச் சிறியதாகி விட்டதா பாண்டிய நாடு?'

திருமாறன் மெல்லக் கேட்டான்.

"பாண்டிய மாமன்னரும் இளவரசியும் சில நாட்களுக்கு முன் இங்கு வந்திருந்தார்களா? உங்களுக்குத் தெரியுமா?"

கூடியிருந்த மக்கள் வியந்து, "ஆ! மாமன்னர் இங்கு வந்திருந்தாரா?" என ஒருவரையொருவர் கேள்விக் குறியோடு பார்த்துக் கொண்டணர்.

திருமாறன், "ஐயா, மன்னர் சில வேளைகளில் பொதிகையில் தங்கும் வழக்கம் உண்டு. யாராவது எனக்கு வண்டி வாகனம் தந்து உதவினால் நான் சென்று விசாரிக்கிறேன்" என, நெடும்பயணம் மேற்கொள்ளக் கூடிய எருதுகள் பூட்டிய வண்டியை உடனே ஏற்பாடு செய்து கொடுத்தனர்.

திருமாறன் பயணமானான்.

கபாடபுரம் கடற்கோளால் முற்றும் அழிந்ததனால் கலக்கமுற்ற தென்னவனும் கயல்விழியும் ஈழம் சென்ற இளம்பெருவழுதியின் நிலை என்ன ஆயிற்றோ? என்று எண்ணி அறிய இயலாது வருந்தினர்.

இந்நிலையில் தொண்டித் துறைமுகத்தில் திருமாறன், தென்னவன், இளவரசி மூவரும் சந்திக்க நேர்ந்தது. பேருவுவகையில் ஒருவரையொருவர் கண்ணீர் மல்கத் தழுவிக் கொண்டு பின்னர் மனம் தெளிந்து தங்களுக்கு நேர்ந்தவைகளைக் கூறிக் கொண்டனர். பின்னர், மூவரும் பொதிகைக்குத் திரும்பினர்.

பயணர் மாளிகையில் அப்போதிருந்த வேறொரு அதிகாரி அவர்களை அடையாளம் கண்டு, திடுக்கிட்டுப் பின் தெளிந்து மகிழ்ந்தான்.

வேணாட்டு மன்னர்களுக்கும் சேர வேந்தர்க்கும் செய்திகள் பறந்தன. உயிர் நண்பன் உயிரோடு இருப்பதை அறிந்து சேரன் குட்டுவன் பேருவகையுடன் கரூரிலிருந்து காவலர் புடை சூழப் பொதிகை வந்து தென்னவனையும் திருமாறனையும் ஆரத்தழுவி மகிழ்ந்தான்.

ஆரைக்கல்லில் நடந்தவற்றையெல்லாம் சேரன் கூற, தென்னவன் பொறுமையுடன் கேட்டான். சினந்தெழுந்த கயல்விழியைச் சமாதனப்படுத்தி, நடந்த சூழ்நிலையில் மற்ற வேந்தர்கள் கூடிப் பேசி எடுத்த முடிவைத் தவறாகக் கொள்ளக் கூடாது என மகளை அமைதிப்படுத்தினான் தென்னவர் கோன். குட்டுவரே மீண்டும் ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டட்டும் என முடிவெடுத்தனர்.

# சீறிச் சினந்த சேல்விழி

கூடல் நகரில் மீண்டும் பேரவை கூடியது. சேரன் குட்டுவன், முன்பு நடந்த கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய சோழன் பெருஞ்சென்னியே தலைமை ஏற்று நடத்தட்டும் என்றான்.

பெருஞ்சென்னி எழுந்து பேசினான்.

"சென்ற ஆலோசனைக் கூட்டத்தில் எடுத்த முடிவில் மாற்றம் செய்ய எந்தக் கரணியமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே, நாம் ஐவரும் ஐந்து மண்டலங்களிலும் தனியாட்சி முறையில் ஆட்சி நடத்துவோம்."

சேரன் : "சோழ வேந்தர் யாருடைய கருத்தையும் கேட்காமல் முடிவுரையே நிகழ்த்தி விட்டார். முன்பு, பாண்டிய அரச குடும்பத்தினர் நிலை என்ன என்பதே தெரியாத போது எடுத்த முடிவு அது; இப்போது அவர்கள் வியத்தகு முறையில் உயிர்பிழைத்து நம்மிடையே இருக்கிறார்கள். இனி, அவர்கள் தலைமையில் மீண்டும் ஒன்று கூடி ஒற்றுமையாய்ப் பழையபடியே ஆட்சி செய்வதே சிறப்பாகும்."

சென்னி : "சேரர் பெருமானே, தாங்கள் பழைய நிலை என்கிறீர்கள். பாண்டியர் பழைய நிலையிலா இருக்கிறார்கள்? பரந்து விரிந்த நிலத்தை ஊழியில் இழந்து இளைத்துவிட்டார்களே."

சேரன் : "அதனால் என்ன? நாம் எஞ்சி இருக்கும் நிலப்பரப்பைப் பகிர்ந்து சமன் செய்துவிடலாமே.

நானும் சோழரும் நம் பொறுப்பில் உள்ள ஒரு பகுதி நிலப்பரப்பைப் பாண்டியருக்குத் தந்து கொங்கரிடமிருந்தும் தொண்டையரிடமிருந்தும் சில பகுதிகளைப் பெற்றுக் கொண்டால் சமமாகி விடலாமே.”

சேரனைத் தவிர வேறு யாரும் இந்தத் திட்டத்திற்கு இசையவில்லை. நான்கு திங்கள்களுக்குமேல் தனியாட்சி நடத்திவிட்டுத் திடீரென்று கூட்டாட்சியென்பதோடு, தம் நிலப்பரப்பிலும் இழப்பு என்றதும், அனைவரும் மறுப்புத் தெரிவித்தனர்.

திருமாறன் எழுந்து அமைதியாகப் பேசினான்.

“நண்பர்களே! பழந்தமிழின் தோற்றத்தையும், அதன் வரலாற்றையும், அதனைப் பேணப் பாண்டிய மன்னர்கள் எடுத்த முயற்சி பற்றியும், பழந்தமிழ் நாட்டைப்பற்றியும், அஃது ஐந்து மண்டலங்களாகப் பிரிந்து - ஆனால், இணைந்து செயல்பட்டதையும் பலர் மறந்து விட்டனர் போலும். அவற்றை மீண்டும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். அதனை என்னைக் காட்டிலும் என் தங்கை கயல்விழி எடுத்துரைத்தால் உங்களுக்கெல்லாம் பாண்டியர் நிலைமை நன்கு விளங்கும்.”

திருமாறன் தங்கை கயல்விழியை நோக்கினான். குறிப்பறிந்த அவள் எழுந்து அவையை ஒரு சுற்று சுற்றிப் பார்த்தாள். அவள் நின்ற தோற்றம், பார்த்த பார்வை பாய அணியமான ஒரு பெண் புலியை அனைவர்க்கும் நினைவூட்டியது. அச்சத்தால் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

கயல்விழி : “அன்புடைய அவையோர்களே, பழந்தமிழ் நாடு, குமரிக் கண்டமாக ஒரே நாடாக இருந்ததையும், ஐம்பால் திணையும் கவினுற அமைந்து நிர்வாக வசதிக்காக ஐந்திணைகளின் அடிப்படையில் குறிஞ்சி மண்டலம், மருத மண்டலம், முல்லை மண்டலம், நெய்தல் மண்டலம் மற்றும் பாலை மண்டலமாகவும்

பிரித்து ஆளப்பட்டுவந்து பின்னர், அவையே சேர, சோழ, பாண்டிய, தொண்டை மற்றும் கொங்கு நாடென்று அழைக்கப்பட்டன. அவற்றின் கொடிச் சின்னமும் நில அடிப்படையிலேயே அமைக்கப்பட்டன.

இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் எங்கள் மண்டலம் பாண்டிய மண்டலம் என்று அழைக்கப்பட்டாலும், அனைத்து - அஃதாவது ஐந்து மண்டலங்களுக்கும் பாண்டிய மன்னரே தலைவர் என்பதால் அவருக்கு மட்டுமே "**தென்னவன்**" என்ற அடைமொழி பயன்படுத்தப்பட்டது. இன்றும் பயன்படுத்தப்படுகிறது. எம் தந்தை **தென்னவன்** பெருங்கோ வழுதிதான் இந்த ஐந்து மண்டலத்திற்கும் அதாவது ஐந்து நாட்டிற்கும் தலைவர். மற்ற நான்கு மண்டலங்களையும் விட மிகப் பெரிய நிலப்பரப்பைக் கொண்டிருந்தது பாண்டிய மண்டலந்தான். இன்று ஊழிக்கிரையாகிச் சிறுத்துவிட்டாலும் மற்ற நான்கு நாடுகளும் தென்னவராகிய எங்களுக்கே உரியது.

கொடைத் தன்மையுடன் நிலத்தைப் பிரித்துக் கொடுத்து, ஆதிக்க மனப்பான்மை சிறிதுமின்றித் தமிழ் வளர்க்கும் பொறுப்பை மட்டும் மேலாகக் கருதி ஆட்சிப் பொறுப்பை உங்களிடம் விட்டு வைத்ததற்கு, நீங்கள் காட்டும் நன்றியா இது? நிலம் சுருங்கிவிட்டதால் குறுநில மன்னர் என்று ஏளனம் செய்வதா?"

சென்னி (இடைமறித்து) : "தமிழ் வளர்க்கும் தலைமை வேண்டும், அவ்வளவுதானே? அதைச் செய்ய நான் முன்வருகிறேன். ஐந்துநில மன்னர்களுக்கும் நானே தலைமை ஏற்கிறேன். ஒப்புக்கொள்கிறீர்களா?"

"இன்றைய கூட்டம் சேரர் கூறியவாறு நிலத்தினைப் பிரித்துப் பாண்டியர் தலைமை ஏற்பது பற்றித்தான்," கயல்விழி சொன்னாள்.

"எல்லைகளை மாற்றும் கருத்து எங்களுக்கு ஏற்புடையதல்ல - வேண்டுமானால் ஏற்கனவே ஒரு

திட்டம் முடிவெடுக்கப்படாமல் உள்ளது. அதாவது இளவரசியார் என்னை மணக்க முன் வருவாரேயானால் என்னோடு சேர்ந்து தமிழகத்துக்குத் தலைமை ஏற்கலாம்.

தெளிவாகச் சொன்னால் தென்னவர் பெரும் நிலப்பரப்பிற்கு மாமன்னராக இருந்த காலத்தில் இந்த மண முயற்சி நடந்தது. ஆனால் இப்போது பாண்டியர் சிற்றரசினரினும் சிறிய நிலத்திற்குத்தான் மன்னர். இருந்தாலும் நான் பெருந்தன்மையோடு கயல்விழியை ஏற்றத்தாழ்வு பார்க்காமல் மணக்க முன் வருகிறேன். இஃது உங்களுக்கும் பெருமை சேர்க்கும். என்ன சொல்கிறீர்கள்?"

கொங்கரும் தொண்டையரும் இதற்கு இசைந்தனர். ஆனால், கயல்விழி கொதித்தெழுந்தாள்.

"நல்லது அவையோர்களே! நான் பதில் சொல்கிறேன். என் வதுவை பற்றிப் பேசத் தொண்டையருக்கும் கொங்கருக்கும் எந்த உரிமையும் இல்லை. இந்தத் தமிழகம் பாண்டியராகிய எங்களுடையது. அதாவது தென்னவன் பெருங்கோ வழுதியினுடையது. இதனை நாங்கள் யாரிடமும் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. இப்போது ஆட்சிக் களிப்பில் ஆணவத்தோடு பேசிவிட்டீர்கள். சிறிது நாட்களிலேயே ஆதிக்க சுகமும் கண்டுவிட்டீர்கள். அந்தக் காரணத்தாலேயே இந்தத் தமிழ்ப் பெருநிலம் பாண்டியர்களுடையது மட்டுமே என்பதை மறந்துவிட்டீர்கள். மற்ற மன்னர்களுக்கு இதில் எள்ளளவும் உரிமை இல்லை. இல்லவே இல்லை. எனவே முடிவாகக் கூறுகிறேன். கூறுவதென்ன? சூளுரைக்கிறேன்.

இந்த ஐம்பெரும் நிலத்தையும் என் ஆளுகைக்குள் கொண்டு வருவேன்."

சோழன் சென்னி கலகலவென்று சிரித்தான். அந்தச் சிரிப்பில் ஏளனம் இழையோடியதை எல்லோரும் கண்டனர்; அமைதி காத்தனர்.

கயல்விழி தன் பேச்சை நிறுத்திச் சோழன் கண்களை எதிர்த்து நோக்கினாள். அவள் உள்ளம் சினத்தால் விரைந்து இயங்கியது.

"சோழ மன்னரே! ஏன் சிரிக்கிறீர்?"

மெல்லவே விடை அளித்தான் சோழன் சென்னி.

"பழமொழி ஒன்று நினைவிற்கு வந்தது; சிரித்தேன்."

"சொல்லுங்கள் நாங்களும் சேர்ந்து சிரிக்கிறோம்."

"ஆஹா! அதற்கென்ன? சொல்கிறேன். பெட்டைக் கோழி கூவியா பொழுது விடியப் போகிறது?"

கயல்விழி கனன்று கண் சிவந்தாள். அவையில் முற்றும் அமைதி.

"ஏ! சென்னியே!"

அவையில் சலசலப்பு; கொங்கு மன்னர் எழுந்து, "இளவரசியார் மரபினை மீறி மாமன்னர் சென்னியை ஒருமையில் விளிக்கிறார். இளவரசியார் சினம் கொள்ளும்படியாக இங்கே என்ன நடந்துவிட்டது?"

"கொங்கரே, விந்தியத்துக்கும் இப்போதைய குமரிக்குத் தெற்கேயும் பரந்து விரிந்த தமிழ் நிலத்திற்கு மாமன்னராக விளங்கிய வேந்தர்க்கு வேந்தராம் என் தந்தையைப் பார்த்துச் சிற்றரசரினும் சிறியவர் என்றீர்களே, இதைவிட வெட்கம் வேறென்ன வேண்டும்? இந்த ஒன்றுமில்லாச் சென்னியை நான் ஒருமையில் விளித்ததே அதிகம். பெருஞ்சென்னியை வெறுஞ்சென்னி யாக்குவேன். துணைக்குவரும் கொங்கரையும் தொண்டையரையும் வென்று பாண்டியர்க்குக் கப்பம்

கட்ட வைப்பேன். கப்பம் கட்ட வைப்பதென்ன? கால்கள் பிடரியில் படும்படி ஓடி ஒளியும்படி அவர்களை ஊரை விட்டே துரத்துவேன்.

தமிழகம் முழுவதையும் நானே வென்று பாண்டியர் ஆளுகைக்குள் கொண்டு வருவேன். அது மட்டுமன்று, ஏதோ பெருந்தன்மையுடன் என்னை மணப்பதாகச் சொன்னாரே சென்னி, அவருக்கும் மற்ற அனைவருக்கும் சொல்லுகிறேன். நான் தமிழ் மன்னர் எவரையும் மணக்க மாட்டேன். உலகமே போற்றும் வண்ணம் பேரரசியாக விளங்குவேன். ஆதரவு தந்த என் தமயனுக்கிணையான சேரப் பேரரசருக்கு என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். போர் அறிவிப்பு தூதன் மூலம் வந்து சேரும்."

தந்தை, தமையன் சூழக் கயல்விழி புயலென வெளியேறினாள்.

அவை அமைதியானது. அச்சமும் சினமும் ஆச்சரியமும் அனைவரின் முகத்திலும் பரவியன. சென்னியின் முகம் சினத்தால் சிவந்தது. கயல்விழியின் திடீர் ஆவேசச் சூளுரை அவன் மனதில் இடியென இறங்கியது.

# சோழச் சென்னியர்

பொதுவாக, சோழ மண்டலம் பல சிறுசிறு பகுதிகளாகப் பிரிந்து இருந்தது. தென்பெண்ணைக்குத் தெற்கேயும் பொருநை நதிக்கு வடக்கேயும் கிழக்கில் கீழைக்கடலும் மேற்கில் மேற்குத் தொடர் மலையும் எல்லைகளாக இருந்தன. வளமிகு மருத மண்டலமானதால், குறுநில மன்னர்கள், வேளிர்கள், பெருநிலக் கிழார்கள் எனச் சிறுசிறு பகுதிகளுக்குத் தலைவர்களாக இருந்தாலும், இவர்கள் அனைவரும் சேர்ந்து, தமக்குத் தகுந்த ஒரு திறமை மிக்கத் தலைவனைத் தேர்ந்தெடுத்துச் சோழப் பெரு வேந்தனாக ஆக்கி, உறையூரைக் கோநகராகக் கொண்டு ஆளச் செய்தனர்.

அடிக்கடி உட்பூசலும் கலகமும் ஏற்பட்டமையால், வேந்தன் சில ஆண்டுகளே ஆள முடிந்தது. போட்டியும், பொறாமையும் மேலோங்க, அதனால் கலகம் மூண்டு, அதில் அரசன் கொல்லப்படுவது சாதாரண நிகழ்ச்சியாகி விட்டிருந்தது. சில நேரங்களில் சோழ வேந்தனைத் தேர்வு செய்ய முடியாமல் மன்னன் இல்லாமலேயே இருந்ததும் உண்டு. வாரிசு உரிமை வழக்கப்படுவதை எந்தச் சோழ குறுநில மன்னரும் ஏற்றுக் கொண்டதில்லை.

அனைவரும் கூடி மன்னரைத் தேர்வு செய்யும் முறை தோல்வியடைந்தது. தேர்ந்தெடுத்த மன்னன், தன்னை ஆதரித்த சில குறுநில மன்னர்கள், வேளிர்கள் இவர்களுக்கே பெரிதும் கடமைப்பட்டு அவர்கள்தம் கைப்பாவையாய் ஆட்சி செய்ததால் மற்றவரின் கோபத்திற்கும் வெறுப்பிற்கும் ஆளாகிக் கலகம் விளைந்துவிடும். மன்னன் கொல்லப்பட்டு விடுவான்.

அடுத்து, ஒரு சில பெருநில மன்னர்களின் பெயர்களை எழுதிப் போட்டுக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்தனர். அவன் தான்தோன்றித்தனமாக நடப்பதாக மற்றவர்கள் எண்ணியதால் இந்த முறையும் வெற்றிகரமானதாக அமையவில்லை.

இறுதியாக அனைவரும் சேர்ந்து, ஆறறிவு படைத்த மனிதர்களை நம்பாமல், ஐந்தறிவே உள்ள விலங்கை - பட்டத்து யானையை - நம்பினர். சோழ மன்னர் இறந்துவிட்டால், அனைவரும் சேர்ந்து பட்டத்து யானையிடம் ஒரு மலர் மாலையைக் கொடுத்து, அதை ஊர் ஊராகப் பகுதி பகுதியாகச் சுற்றி வரச் செய்து, அந்த யானை யார் கழுத்தில் மாலையிடுகிறதோ அவனையே மன்னனாக்கினார்கள்.

இதிலும் குறையிருக்கத்தான் செய்தது. பட்டறிவு ஏதும் இல்லாத சாதாரண மக்களில் ஒருவன் கூட மன்னனாகிவிட, அவனைச் சுற்றிலும் அமைச்சர்கள், தளபதிகள் இருந்து தங்களின் விருப்பப்படி அவனைப் பொம்மையாக ஆட்டுவித்தார்கள்.

சிறிது காலம் பொம்மை அரசனாக இருந்துவிட்டு அலுப்புத் தோன்றியதும், தன் சொந்த விருப்பு வெறுப்பு தலைதூக்கத் தன்னிச்சையாக ஆள நினைக்கும் போது, அதைப் பொறுக்க முடியாமல் மீண்டும் கலகம் விளைவித்து, மன்னனை அழித்து, பழைய நிலையையே மறைமுகமாக நிகழ்த்தி வந்தார்கள்.

இவ்வாறு யானை மாலையிட்டு மன்னனாகும் சோழனுக்குச் "**சென்னி**" என்று பட்டப் பெயர் சூட்டி அவனுடைய பெயரோடு சேர்ப்பர். இப்படி வந்த பல சோழச் சென்னியர்களைப் போல்தான், இளம்பெருஞ்சென்னியும் சோழ மன்னன் ஆனான்.

ஆனால், சோழன் இளம்பெருஞ்சென்னி மிகுந்த அறிவும் வீரமும் ஆட்சித் திறமையும் கொண்டு இருந்ததால், சோழ நாட்டின் அனைத்துக் குறு, பெருநில

மன்னர்களையும், வேளிர்கள், பெருநிலக் கிழார்களையும், அமைச்சர்கள், தளபதிகள், அனைவரையும் தன்னை எதிர்க்க முடியாதவாறு செய்தான். எப்படி?

முன்னாளில் இருந்த சென்னியர்களின் செயல்பாடுகளைத் தெளிவாக ஆய்ந்தறிந்த அவன் மற்றவர்கள் அவனை ஆட்டி வைக்கும் வழிகளைச் சிந்திக்கும் முன் தானே முந்திக்கொண்டு செயலாற்றத் தொடங்கிவிட்டான். குறுநில மன்னர்கள் அல்லது வேளிர்கள் யாராவது சிறு தவறு செய்துவிட்டாலும் அவர்களைக் கடுமையாகத் தண்டித்தான். இதற்காகப் பொதுப் பாதுகாப்புப் படையொன்றை அவன் தன் நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டான்.

பெரிய பதவியிலிருந்த அதிகாரிகள் தவறு செய்தால் உடனடியாகப் பதவி இழப்பதோடு வெஞ்சிறையில் வாடவும் நேர்ந்தது. இந்த நிலையில் அதிகாரிகளும் ஏன் அரசர்களும் அவனுக்கு அஞ்சித் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் தற்காப்பு எண்ணத்திலேயே எப்போதும் இருந்தனர். தாக்குதலே சிறந்த தற்காப்பு முறை என்ற தத்துவத்தைச் சென்னி மிக எளிதாக, ஆனால் திறமையுடன் பயன்படுத்தி வெற்றியும் கண்டான்.

கொங்கு மண்டலமும் தொண்டை மண்டலமும் இளம்பெருஞ்சென்னியின் ஆற்றலையும் அறிவையும் பெரிதும் மதித்து ஆதரித்தன; நட்புப் பூண்டு ஓரணியில் நின்றன. அவன் மிகமிகச் சக்தி வாய்ந்த மன்னர் மன்னனான். மாமன்னன் ஆகிவிட்டதை உணர்த்து, முகத்தான் தன் பெயரைப் பெருஞ்சென்னி என்றும் பின்னர்ப் பெரும்பூட்சென்னி என்றும் மாற்றிக் கொண்டான்.

சென்னியர்கள் பொதுவாக யானையால் மாலையிடப்பட்டு மன்னனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவராயினும் அந்த மன்னனை மற்ற குறுநில மன்னர்களும், வேளிர் போன்றோர் அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

இந்த முறை ஏறத்தாழ ஒரு குடியரசுக்கு இணையாக அமைந்திருந்தது ஒரு விந்தைதான். உறுப்பு நாடுகள் வளம் கொழிப்பவை ஆகையால் அவரவர் நாடுகளைச் சிறப்புற ஆளுங்காலத்தில் சோழநாடு பிறர் புகழும் படியாகத்தான் திகழ்ந்தது.

ஆனால், சோழப் பெரு வேந்தர் எவர்க்கும் தனிப்பட்ட முறையில் எவ்விதச் சிறப்பும் புகழும் பெற்றிட வாய்ப்பின்றியே போய்விட்டது. அதனால்தான் கரிகாலனுக்கு முன்னர், சிறந்த சோழ மன்னர்கள் யாரும் குறிப்பிடும்படியாக இருந்ததில்லை. பெரும்பூட்சென்னியும் இளஞ்சேட்சென்னியும் கூட கரிகாலன் என்னும் வேந்தர் வேந்தனின் பெரிய தந்தை, தந்தை என்ற முறையில்தான் வரலாற்றில் இடம் பெற்றிருக்கின்றனர். சோழ நாட்டில் வாரிசு முறையைக் கிள்ளியர் என்ற குலத்தை-முதன் முதலாகத் தோற்றுவித்தவன் கரிகாலன்தான்.

பெரும்பூட்சென்னி பெரு வீரன்; அவன் படைத்தளபதி பழையனும் பெரு வீரன்.

நன்னன் முதலான அறுவரோடு பொருது வீழ்ந்துபட்ட தன் படைத்தலைவன் பழையனின் மரணத்திற்குப் பழிக்குப் . பழி வாங்கிடப் பெரும்பூட்சென்னி வெகுண்டெழுந்து கழுமலம் என்னும் ஊரைத் தாக்கிக் கணையன் என்னும் சேர மன்னனுடைய படைத் தலைவனான மறவனையும் அவனது கழுமலம் என்னும் ஊரையும் கைப்பற்றினான். சேரன், சக்தி குன்றிய மன்னனான்.

இதன் மூலம் சென்னி, பாண்டிய நாடு தவிர மற்ற தமிழ் மண்டலங்களை எல்லாம் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான். கலிங்கத்தை வென்ற அசோகன் மேலும் முன்னேறி, தெற்கேயும் படையெடுத்து வந்தான். சதகர்ணி (அல்லது நூற்றுவர் கன்னர் என்ற சாதவாகனர்) என்ற வம்சத்து மாமன்னன் அசோகனை எதிர்த்தான்.

அவனுக்குத் துணையாகப் பெரும்பூட்சென்னியும் சேர்ந்து மௌரியப் படையெடுப்பை முறியடித்துத் தோற்றோடச் செய்தனர்.

அதனால் பெரும்பூட் சென்னியின் புகழ் பரவியது. அதே நேரம் அவன் செருக்கும் மேலோங்கியது. பாண்டியனின் மகள் கயல்விழியை மணந்து தமிழகத்திற்கே தனிப் பெரும் வேந்தனாக விளங்கப் பேராவல் கொண்டான்.

அவனைப் பெரு வேந்தனென முழுமையாக ஏற்காதவர், சேரன் குட்டுவனும், சோழ நாட்டுக் குறுநில மன்னன் தித்தனும் தாம். காரணம், திருமாறனும், சேரன் குட்டுவனும், தித்தனும் நண்பர்கள்.

எதிர்ப்பாரும் மறுப்பாரும் இன்றி மேலோங்கியது சென்னியின் ஆட்சி. இயல்பாகவே ஆதிக்க எண்ணம் அவன் மனதில் ஆழமாக வேரூன்றி இருந்தது.

இந்தச் சூழ்நிலையில்தான் பேரூழியில் பாண்டிய மண்டலம் குறுகிப்போனது. இந்த நிலையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, தமிழகத்தின் தனிப் பெரும் வேந்தர் வேந்தனாகும் எண்ணம் அவன் மனதில் உறுதி பெற்றது. சேரன் குட்டுவனும் சோழன் தித்தனும் தன்னைவிடச் சற்று வயதில் பெரியவர்களாய் இருந்ததாலும், ஆட்சி அனுபவமும் நிறைந்தவர்களாய் இருந்ததாலும் அவர்களைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஆரம்ப காலத்தில் சற்றுத் தயங்கினான்.

பாண்டியரைத் துணை சேர்த்துக் கொள்ள எண்ணிய பெருஞ்சென்னிக்கு ஒரு வழி இருந்தது. ஆம், பாண்டியன் தென்னவனுக்குத் திருமாறன், இளம்பெருவழுதி என்று இரு மகன்களும் கயல்விழி என்ற இளைய மகளும் இருந்தனர். பருவம் அடைந்த கயல்விழியை அவன் மணந்து கொண்டால் பாண்டியனின் நண்பர்களான குட்டுவனும் தித்தனும் ஒன்றுபட்டுத் தனக்கும் நட்பாகி, அவனைப்

பெருவேந்தனாக ஏற்றுக் கொள்வர்; அதனால், தமிழகத்தின் பெருவேந்தனாகும் கனவு நிறைவேறும்.

இதற்காக, அவன் தித்தனை அணுகித் தென்னவனிடம் பெண் கேட்டுத் தூதும் அனுப்பி வைத்தான். தித்தனுக்குச் சிறிதும் விருப்பம் இல்லாமல் இருந்தாலும், மாமன்னர் வேண்டுகோளை மறுக்க முடியாமல், தூது செல்ல ஒப்புக் கொண்டான்; தூதும் சென்றான்.

சோழ வேந்தர்கள் பெரும்பாலும் வேளிர் குலப் பெண்களையே மணப்பர். ஒரு பேரரசன் பல அரச குமாரிகளை மணப்பது ஒன்றும் புதிதன்று. ஆனால், சோழர் மரபில் வாரிசு உரிமை இல்லாததால், மற்ற பேரரசர்கள் இத்தகைய இடைக்கால மன்னருக்குப் பெண் கொடுக்க முன் வருவதில்லை. பெருஞ்சென்னிக்குப் பிறகு யார் மன்னனாவார் என்று தெரியாத நிலையில் தன் மகளை ஒரு நிலையற்ற மன்னனுக்கு மணம் செய்விக்கத் தென்னவன் ஒப்பவில்லை.

அதுவுமின்றி, ஏற்கனவே மணமாகி, ஓர் ஆண் குழந்தைக்குத் தந்தையும் ஆகிவிட்ட பெருஞ்சென்னியோடு மண உறவுக்குத் தென்னவன் ஒப்புதல் அளிக்கவில்லை.

சினந்த சென்னி, தித்தன் முழுமனதோடு இதில் ஈடுபடாததால்தான் மணப்பேச்சு நிறைவேறவில்லை என்று கடிந்து கொண்டான்.

அதனால் தித்தனுக்குப் பெருஞ்சென்னியின் மேல் வெறுப்பே நிலைத்தது. இப்படிப்பட்ட குழப்பமான சூழ்நிலையின் போதுதான் பேரூழிப் பெருக்கால் பாண்டிய மண்டலம் கடல் வாய்ப்பட்டுச் சுருங்கிப் போயிற்று.

# பொருநையில் போர்

கடல்கோளுக்குத் தப்பிப் பிழைத்த பல்லாயிரக் கணக்கான மக்கள், ஈழத்திலும், எஞ்சியோர் பாண்டிய மண்ணிலும் சேர, சோழ நாடுகளிலும் சென்று அகதிகளாகக் குடியேறி வாழ்ந்து வந்தனர். ஈழத்தில் 35000 குடும்பங்களும் சேர நாட்டில் 20000 குடும்பங்களும் சோழ மண்ணில் 20000 குடும்பங்களும் பாண்டிய மண்ணில் 40000 குடும்பங்களும் வாழ்ந்து வந்தனர்.

இவர்களில் 75000 பேர்களைத் திரட்டி, தென்னவனும் திருமாறனும் கயல்விழியும், அவர்களுக்கு ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் போர்ப் பயிற்சி அளித்தனர்.

சொந்த நாட்டில் அகதிகளாக வாழ வேண்டிய நிலை வந்தது குறித்தும் அதை மீட்க வேண்டிய அவசியம் குறித்தும் வீரர்கள் நெஞ்சில் வேட்கையைத் தூண்டி வீறு கொள்ளச் செய்தார்கள். கயல்விழியின் வீரச் சூளுரையை நிறைவேற்ற அவளுடைய தலைமையிலேயே போர் நிகழ்த்தப்படும் என்பதையும் தெளிவாக எடுத்து உரைத்தார்கள்.

தங்களின் தலைவியின் திறமையைச் சில நாட்களிலேயே நன்கு புரிந்து கொண்ட வீரர்கள், அவள் எதிர் பார்த்ததினும் விரைவாகவும் திறமையாகவும் கற்றுத் தந்த அத்தனை போர் முறைகளையும், ஒவ்வொரு வியூகத்தையும், தாக்கும் முறையையும் தற்காப்பு முறையையும் தெளிவாகக் கற்றுத் தேர்ந்தார்கள். போர் எப்போது என்று ஏங்கவே தொடங்கிவிட்டனர்.

சேரன் வேழப் படையையும் மாவெண் தித்தன் தேர்ப்படையையும் ஈழமன்னன் குதிரைப் படையையும் பாண்டியரிடம் ஒப்புவித்தனர்.

ஏறத்தாழப் பன்னிரண்டு திங்கள்களில் அது நிகழ்ந்தேவிட்டது. கயல்விழி போர்க்கான அறிவிப்பை முறையாகச் சோழனுக்கு அனுப்பினாள்.

கொங்கரும் தொண்டையரும் பெருஞ்சென்னியின் பக்கம் நின்றனர். ஏற்கனவே தன்னிடம் அடிவாங்கிக் குற்றுயிராய் இருக்கும் நிலையிலுள்ள சேரனின் உதவி, தனக்குத் துரோகம் செய்த தித்தனின் உதவி, பஞ்சத்தில் அடிபட்ட பாண்டிய அகதிகள், இவர்களா தன் பெரும் படையை எதிர்க்கப் போகிறார்கள்?

சென்னி சிரித்துக் கொண்டான். மௌரிய மாமன்னன் மாவீரன் அசோகனையே மறித்து நிறுத்தியவன், இந்தச் சிறுமியுடன் மோதுவதா?

ஆனாலும், எந்தத் துணிச்சலில் அவள் தன்னோடு போரிடச் சூளுரைத்தாள்? ஒற்றர்கள் மூலம் நிலைமை அறிந்திட முனைந்தபோது, ஒற்றர்களின் உயிரற்ற உடல்கள், எப்படி இறந்திருப்பார்கள் என்ற ஐயமே எழாத வண்ணம் பொருநை நதிக்கரையில் கிடந்தன. கூட்டம் கூடிவிட, அங்கு வந்த தளபதிகள் இறந்தவர்கள் கையில் மீன் சின்னம் கீறப்பட்டுக் குருதி உறைந்திருந்ததைக் கண்டனர். என்ன நடந்திருக்கும் என்பதைக் கணித்துவிட்ட தளபதிகள் பொது மக்கள் முன்பு காட்டிக் கொள்ளாமல் பாண்டிய ஒற்றர்கள் போலும் என்று கூறி அகன்று விட்டனர்.

ஆனாலும், கடுந்தண்டனைக்கு அஞ்சி இச்செய்தியைச் சென்னியிடம் சொல்லாமல் மறைத்துவிட்டனர்.

சென்னி பெரு வீரன்தான்; ஆனால் அவனது சர்வாதிகாரப் போக்கால் அவனது ஆதிக்கத்திற்குட்பட்ட மன்னர்களும் அதிகாரிகளும் அவன்பால் பெரிதும் அச்சமே கொண்டிருந்தனர். அதனால் சில நேரங்களில் சில எதிர்மறை செய்திகளைக் கூட தண்டனைக்கு அஞ்சி அவனிடம் சொல்லாமல் மறைத்துவிடுவார்கள். இடித்துரைப்பார் யாருமில்லாததால், சென்னி கெடுப்பார் இன்றியே கேடுகளை வரவழைத்துக் கொண்டான்.

"நியாயமாகப் பார்க்கப்போனால் தனக்குப் பெண்கொடுக்க மறுத்த காரணத்திற்காகவே தென்னவன் மேல் போர் தொடுத்திருக்க வேண்டும். ஆனால், ஓடுங்கிப் போனவனுடன் மோதாமல் பெருந்தன்மையுடன் விட்டுவிட்ட தன்னுடன் போரிட அவனுடைய மகளைப் போருக்கு அனுப்புவதா? தென்னவனோ அன்றித் திருமாறனோ முன்னின்று படை நடத்தி வரட்டும்" எனத் தூது விட்டான்.

"அன்று கூடல்நகர் அவையில் சூளுரைத்தது நான்; ஆகவே போர் என் தலைமையில்தான் நடக்கும். அசோகனை விரட்டியதாக மார்தட்டிக்கொள்ளும் நீ, இந்தக் கயல்விழியுடன்தான் போரிட வேண்டும். நான் புறப்பட்டுவிட்டேன்." இப்படிப் பதில் வந்தது.

"பல மன்னர்கள் முன்னிலையில் நான் மணக்க நினைத்த பெண்ணுடன், அதே மன்னர்கள் முன்னிலையில் போர்க்களத்தில் சந்திக்கும் முற்றிலும் மாறுபட்ட நிலையை நினைத்து வேதனையடைந்தான். என் கையால்தான் அவளுக்கு முடிவு ஏற்பட வேண்டுமா?" சற்றுச் சோர்ந்து பின் தெளிந்து, போருக்குப் புறப்பட்டான்.

பொருநை நதிக்கரையில் மேட்டுப் பகுதியில் இரு படைகளும் நேருக்கு நேர் சந்தித்தன. (இந்த இடம் இப்போது ஆதிச்சநல்லூர் என அழைக்கப் படுகிறது. உலகிலேயே பெரும் இடுகாடாகக் கருதப்படும் இவ்விடம் 114 ஏக்கர்

பரப்புடையது. போரில் மாண்ட பல்லாயிரக் கணக்கான வீரர்களின் உடல்கள் அங்கு அடக்கம் செய்யப்பட்டிருப்பது அகழ்வாரய்ச்சியின் மூலம் தெரிய வருகிறது. இதன்பிறகு கரிகாலனும் இங்குதான் போரிட்டான். அடுத்த அடுக்காக உடல்கள் அடக்கம் செய்யப்பட்டன. ***தமிழர் இந்தியா, பக். 56, 57, 58.)***

*முன்னால் தேரில் வந்து நின்ற கயல்விழியின் கையிலிருந்த சூலாயுதப் படை அவன் அதுவரை கண்டிராதது. அது மட்டுமன்று, அவன் அறிந்திராதது இன்னொன்றும் உண்டு; அதுதான் கயல்விழியின் மறுபக்கம்!!!*

கபாடபுரத்தில் கயல்விழி சிறுமியாய் இருந்தபோது தந்தை தென்னவன் மடியில் அமர்ந்து அவளுடைய தமையன்கள் போர்ப் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்ததை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பாள். அவளுடைய முகக் குறிப்பினின்றும் தலை, கை அசைவினின்றும் அவள் ஆழ்ந்த ஈடுபாட்டுடன்தான் கண்டு கொண்டிருக்கிறாள் என்று தென்னவன் உணர்ந்தான். விளைவு - அந்தச் சிறு வயதிலேயே அவள் போர்ப் பயிற்சி பெறத் தொடங்கிவிட்டாள். எளிய வீரக் குடி மகளாகக் கருதிப் பயில வேண்டும் என்ற எண்ணத்தில் அவளுக்குத் 'தடாதகை' என்ற பெயர் சூட்டி, ஓர் ஆண் மகன் உருவத்திலேயே அனைத்துப் போர் முறைகளையும் பயில வைத்தான். அவளும் எந்த ஆடவனினும் சிறப்பாகக் கற்றுத் தேர்ந்தாள்.

போர் முறைகள் அத்தனையும் கற்றுத் தேர்ந்ததோடு புதுப்புது நுணுக்கங்களைக் கையாளும் யுக்திகளை விவரித்தபோது ஆசிரியர்களே வியந்து போயினர். அப்படித்தான் சூலாயுதம் ஒன்றை வடிவமைத்து அவள் அதைக் கையாண்டு தேரினின்றும், புரவி மீதிருந்தும், யானை மீதிருந்தும், சுற்றும் திறத்தைக் கண்டு புகழ்ந்து மகிழ்ந்தனர். அவளைச் "சூலி" என்று பாராட்டினர்.

பெருஞ்சென்னி அவளை எச்சரித்தான்.

"கயல்விழி! இப்போதும் ஒரு வாய்ப்பு தருகிறேன். நீ என்னை மணக்க வேண்டும் என்பது கூடத் தேவையில்லை. ஆனால் போர்க்களத்திலிருந்து விலகிவிடு. நான் விரும்பிய பெண்ணை நானே அழிக்கும் நிலைக்கு என்னை ஆளாக்கிவிடாதே."

"ஏ! சென்னியே! விந்தியத்திற்கும் இப்போதுள்ள குமரி முனைக்கும் இடைப்பட்ட நிலப் பரப்பிற்கும் சமமான மாபெரும் நிலத்தை - குமரிக் கண்டத்தை - ஆண்ட தென்னவனைப் பார்த்து, அந்நிலம் கடலில் மூழ்கிப் போய்விட்டதால் சிற்றரசரினும் சிறிய அரசன் என ஏளனம் செய்தாயே, உன்னை வென்று, கொன்று, உன் உடலை அடக்கம்செய்ய மருத மண்டலத் தலைவனான உனக்குச் சிறு நிலங்கூட கொடுக்காமல், நெய்தல் மண்டலத்துக்குரிய கடலில் எம் குலச் சின்னமான மீன்களுக்கு இரையாகுமாறு தூக்கி எறியச் செய்வேன். உன்னை அழிப்பதாகச் சூளுரைத்தேன், அதை முடிக்காமல் ,இந்தப் போர்க் களத்தைவிட்டு வெளியேற மாட்டேன். ஊம். தொடங்கு போரை; முழங்கு சங்கை. வீரர்களே! தாக்குங்கள் பகைவரை; வெட்டிச் சாயுங்கள் எதிரிகளை. சென்னிக்கு இனிச் சென்னியே இல்லாமல் ஆக்குங்கள்."

தாக்குதல் போரையே நிகழ்த்தி, எதிரியைத் தற்காப்புப் போரில் ஈடுபடச் செய்து, அவர்களைத் திணற அடித்துப் பெரு வெற்றிகளைக் கண்ட பெருஞ்சென்னி, கயல்விழி தாக்குதல் முறையை முதலில் தொடங்கிவிட, தானே தற்காப்புப் போரை நிகழ்த்த வேண்டியதாயிற்று. அதுவே பழக்கம் தவறிப்போன அவனுக்கும் அவன் படைவீரர்களுக்கும் பலவீனமாயிற்று. எனினும் போர் கடுமையாய் நடந்தது.

நீண்டநாட்கள் போர் - பெரும்சென்னி இறுதியில் வெறுஞ்சென்னியாய்க் கயல்விழியின் சூலத்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க மாட்டாமல் துவண்டு போனான். கயல்விழி தன் சூலாயுதத்தை அவன் நெஞ்சில் பாய்ச்சினாள்.

மாவீரன் சென்னி, சோழர்களின் வரலாற்றில் விரைந்து தோன்றி, விடிவெள்ளியாய் உயர்ந்தான். ஆனால் அதே வேகத்தில் அந்த வெள்ளியைப் போலவே மறைந்தும் போனான்.

பெருஞ்சென்னி போரில் கொல்லப்பட்டான். சோழனின் இரண்டே வயது மகன் பொன்னன்வேளையும் ஏழு வயது தம்பி கண்டியர்வேளையும் காப்பாற்ற அவனது நண்பர்களும் உறவினர்களும் இருக்கும் இடம் தெரியாமல் ஓடி ஒளிந்தனர்.

சோழ நாட்டின் நிலப் பகுதியை வெள்ளாற்றுக்கும் வெண்ணாற்றுக்கும் இடையே குறுக்கினாள். யானை மாலையிட்டு மன்னனாக்கும் முறையைப் பொருட்படுத்தாமல் போரில் தமக்கு உதவிய தமயனின் நண்பனான மாவெண் தித்தனைச் சோழமன்னனாக முடிசூட்டி, உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆளச் செய்தாள். ஆயினும் தித்தன், கயல்விழியின் வெறுப்புக்கு ஆளாவதைத் தவிர்க்கச் சோழன் என்ற அடைமொழியைச் சேர்த்துக் கொள்ளத் தயங்கினான். உறந்தை மன்னன் மாவெண் தித்தனாகவும் ஐயை தந்தை தித்தனாகவும் மட்டுமே இறுதிவரை இருந்துவிட்டான்.

# அடங்கியது கொங்கு

பொருநைப் போருக்குப் பிறகு, கயல்விழி கொங்கரை அவர்கள் நாட்டுக்குச் சென்று அந்நாட்டை வென்று தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தாள். முக்கூடல் நகரில் பெருஞ்சென்னிக்கு ஆதரவு தந்த கொங்கு மன்னன் பேரூர் நம்பி, தலைகுனிந்து நின்றான்.

"உன்னை நான் தண்டிக்கப் போவதில்லை. எமக்கு ஆதரவாக நீ நிற்க வேண்டும். உன் நாடு பாண்டிய நாட்டுக்குக் கப்பம் கட்டி வரவேண்டும்".

"தேவி, என்னை மன்னித்து விடுங்கள்; மரபை மறந்து பாண்டி மாதேவியாகிய உங்களை எதிர்க்கத் துணிந்து விட்டேன். உங்களைச் சக்தியின் உருவமாக உணர்கிறேன். என் நாட்டில் நீங்கள் அடியெடுத்து வைத்துப் பெருமைப்படுத்திய இடங்களில் எல்லாம் உங்களுக்கு வெறும் வீரக்கல்லை நடாமல், உங்கள் உருவச் சிலைகளை நிறுவித் தெய்வமாக வழிபடுவோம்" என்றான்.

வறண்ட பூமியான கொங்கு நாடு, கயல்விழி அங்குச் சுற்றுப் பயணம் செய்யும் போதெல்லாம் நல்ல மழை பெய்து நாட்டை வளமாக்கியது. பவானி ஆறு வெள்ளப் பெருக்கெடுத்ததால் அஃது ஓடுமிடமெல்லாம் அவளைப் பவானி அம்மனாகப் போற்றினர். பின்னர்ப் பவானி காவிரியில் கலக்குமிடத்திலிருந்து கரையோரமாகவே வந்து காவிரிப்பூம்பட்டினம் வந்தடைந்தாள்.

செல்லுமிடமெல்லாம் கயல்விழியைத் தெய்வமாகப் போற்றினர். சோழ நாட்டினரும் அவளை மாரியம்மனாகப் பார்த்தனர். சோழனைச் சினந்ததால் அவள் முகம் சிவந்திருந்த காலத்தில் பார்த்த சிற்பியர் அவள் கரிய அழகு முகத்திற்குச் சிவப்பு வண்ணமே தீட்டினர்.

# கெண்டையிடம் பணிந்த தொண்டைமான்

தொண்டை நாட்டு மன்னன் பெருந்திரையன் மட்டும் சரணடைய முன்வரவில்லை. அவனது கோ நகரமான காஞ்சியைச் சுற்றிலும் பெருங்காடுகள் காட்டரணாகத் திகழ்ந்தன. அந்த அடர்ந்த காட்டினூடே பழக்கமும் தெளிவும் இல்லாதவர் கடந்து செல்ல முடியாது. படைகளை அதனூடே செல்ல வைப்பது எதிர்மறை விளைவுகளைத் தந்துவிடும்.

எனவே, துறைமுகப் பட்டினமான காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து கடல்வழியாகத் தொண்டை நாட்டை அடைந்து, அதன் பிறகு, காஞ்சியை எப்படி நெருங்குவது என்று சிறந்த பயிற்சி பெற்ற தளபதிகள் மற்றும் வீரர்கள் மூலம் அறிந்து கொள்ளலாம் என்று முடிவெடுத்தாள்.

அதற்காகப் பதினைந்து பேர் கொண்ட வீரர்கள் குழுவைக் கப்பல்கள் மூலம் தொண்டை நாட்டுக் கடற் பகுதிகளையும் பிறகு, கோநகர் செல்லும் பாதைகளையும் கண்டு பிடித்து வருமாறு அனுப்பினாள். அவர்கள் கொண்டுவரும் செய்திகளையும் வழித்தடங்களையும் ஆய்ந்து, போர் வியூகங்களை வகுக்கலாம் என்று முடிவெடுத்தாள்.

பின்னாலேயே கப்பலில் புறப்பட்ட கயல்விழி, தொண்டை நாட்டின் ஒரு பகுதியான கண்டீர நாட்டின் துறைமுகப் பட்டினமாகிய அருகன் (அரிக்க) மேட்டை அடைந்தாள்.

கண்டீரப் பகுதியை வென்று, பின்னர் மீண்டும் கடல் வழியாகச் சதுரங்கப் பட்டினத்தை அடைந்தாள். பாலாற்றங்கரையில் இருந்த அந்த துறைமுகத்திற்குச் சென்றடைந்த போது, முன்னர் அனுப்பிய வீரர் குழுவின் மூவர் அவளைச் சந்தித்துக் காஞ்சியை அடையும் பல வழிகளைச் சொன்னார்கள். காட்டினூடே தரைவழிச் செல்வதை விட, நீர்வழி, அதாவது பாலாற்று வழி ஆற்று நீர்ப் போக்கை எதிர்த்துக் காஞ்சியை அடைய முடிவெடுத்தாள்.

அகன்ற பாலாற்றிலே நீர் வெள்ளமாகப் பாயாமல், சீராகப் பரந்து ஓடிக் கொண்டிருந்தது. கயல்விழி தன் சிறு நாவாய்களில் நதியை எதிர்த்துப் பயணப்பட்டாள். பாய்விரித்து எதிர்திசையில் சென்று காஞ்சிக் கரையை அடைய, மூன்று நாட்கள் தாம் ஆயின.

சந்தடியே இல்லாமல் பெரும்படையோடு கயல்விழி நீர்வழி வருவாள் என்று பெருந்திரையன் எதிர் பார்க்கவே இல்லை.

தூதுவனை அனுப்பினாள்.

“சரணடைந்து விடு, இல்லையேல் உன்னையும் அழித்து உன் நாட்டையும் அழிப்பேன்” என்ற தூதுவனின் சொல்கேட்டு, நெஞ்சமே மடங்கிப் போனான்.

அருகே வந்துவிட்ட படையை எதிர்க்க அவனிடம் போதிய படைவலி யில்லை. எல்லோரையும் எல்லைப் பகுதிகளில் நிறுத்தி, வரும் பகைவரைத் தடுத்து நிறுத்திடும் எண்ணத்தில் பல பிரிவுகளாக்கிப் பல இடங்களில் விட்டிருந்தான்.

பொருநைப் போரின் நிகழ்வுகளையும் அதன் முடிவினையும் தூதர்கள் மூலம் முன்னமே அவன் அறிந்திருந்தான். இனி, அவன் ஆற்றக்கூடிய செயல் ஒன்றே ஒன்றுதான்.

பெருந்திரையன் தானே நேரில் வந்து தன் வாளை அவள் காலடியில் வைத்துச் சரண் புகுந்தான். முழு அரசு முறைப்படி கயல்விழியைக் காஞ்சி மாநகர் அழைத்துச் சென்றான். அரசனின் சிம்மாசனத்தில் அமரச் செய்து போற்றினான்.

அவள் தன் அன்புப் பார்வையால் அவனையும் அவன் நாட்டையும் ஈர்த்துக் காத்ததால் அவளைக் காமக் கண்ணி ( காமாட்சி ) தேவி எனப் போற்றினான். கடற் பகுதியின் ஊர்களையும் வளமிக்க அந்நாட்டையும் மிகவும் அவள் விரும்பினாள். மக்களும் அவள் அன்புவிழிகளால் வசீகரிக்கப்பட்டனர். மக்கள் கயல்விழியை அந்நாட்டின் குல தெய்வமாக ஏற்றுக் கொண்டு வழிபட்டனர்.

தொண்டை நாட்டுப் படைவீரர்கள் துணையுடன் தொண்டை நாடு முழுவதும் பயணித்துப் பின்னர், தணிகை மலை, ஏழ்குன்றம், (வேங்கடமலை) வேலங்காடு (வேற்காடு) ஆலங்காடு, திருக்கோவலூர், குதிரை மலை, தகடூர், கஞ்ச மலை, கொல்லிமலை (சேலம்) எனப் பயணித்து மதுரையை அடைந்தாள்.

இதன் மூலம் தமிழகம் முழுமைக்கும் கயல்விழி ஒரு தனிப் பேரரசியாக விளங்கினாள். பேரரசியை அக்காலத்தில் சக்தி எனவும் வீரத் தேவியாகவும் வீரத் தாயாகவும் வணங்கினர்.

# அருகன்[அரிக்க] மேட்டில் அங்கயற்கண்ணி

இலங்கைக்குத் தந்தை தமையனோடு கயல்விழி பயணம் மேற்கொண்டாள். நட்பு நாடாகிய ஈழம் பாண்டிய மன்னர் குலத்தினரைப் பாராட்டி, விருந்தோம்பி மகிழ்ந்தது.

முன்னரே முடிவு செய்திருந்தபடி, இலங்கை மன்னன் முந்நீர்நாடனுடைய அழகு மகளாகிய இளவரசி சுறாக் கன்னிக்கும் பாண்டிய இளவரசன் திருமாறனுக்கும் திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது.

இலங்கைப் பயணம் வெற்றிகரமாகவும் இனிமையாகவும் முடிய, கயல்விழி அங்கிருந்து நாவாய் மூலம் காவிரிப்பூம் பட்டினத்தைத் தவிர்த்துத் தொண்டை மணடலத் துறைமுகப் பட்டினமாம் அருக்க(அரிக்க) மேடு வந்து சேர்ந்தபோது மக்கள் ஆரவாரத் தோடு வரவேற்றனர். வானமும் மக்களோடு சேர்ந்து மலரையும் முத்தையும் பொழிவது போல் மழை பெய்தது.

பாண்டி மாதேவி முகம் மலரச் சிரித்தாள். முத்துப் புன்னகை, கலகலவென ஒலி. அது வெளியே பெய்யும் மாரியை ஒத்திருந்தது. பனிக்கட்டிகள் மழையாய்ப் பெய்து முத்துக்கள்போல் சிதறியதால் அதை முத்துமாரி என்று அழைத்தனர். ஆகா! 'முத்துமாரி அன்னை' என்று புகழ்ந்து அருகிலேயே நல்ல இடம் பார்த்து மாரியாகிவிட்ட அன்னை புகழ் விளங்க ஓர் ஆலயம் அமைத்தனர்.

அதைச் சுற்றிப் புதிய நகரம் ஒன்று மதுரையைப் போல் சிறியதாக அமைத்து, அதற்குப் 'பாண்டியர் புதுச்சேரி' எனப் பெயர் சூட்டினர். தொண்டை மண்டலமெங்கும் பேரரசிக்கு ஆலயம் எடுத்தனர். கொற்றவையெனப் பெயர் சூட்டி விழா எடுத்துப் போற்றினர். பட்டி தொட்டிகளில் எல்லாம் சிறியதும் பெரியதுமாகக் கோயில்கள் எடுத்து மதுராபதி அம்மன் என்று பெயர் சூட்டினர். பிற்காலத்தில் இதுவே திரௌபதியம்மன் கோயிலாக மாறியது.

இன்றைய இந்தியா முழுவதையும் தன் ஒரு குடைகீழ்க் கொண்டு வந்த பேரரசியைப் போற்ற வடக்கிலும் தெற்கிலும் பல கோயில்கள் அமைக்கப்பட்டன. அதற்கு அந்த அரசியின் வீரம் காரணமாய் அமைந்திருந்ததில் வியப்பேது மில்லை.

ஆனால் எந்தவித வீரச் செயலையும் நிகழ்த்தாமல், பங்காளிச் சண்டைக்கு மட்டுமே காரணமாக அமைந்த பாஞ்சாலி - திரைளபதி என்று அழைக்கப்பட்ட ஒரே காரணத்தால், சொல்லொலி ஒற்றமை காரணமாக "மதுராபதியம்மன்" என்ற பெயர் திரிந்து "திரௌபதியம்மன்" என்று ஆனது வருத்தமான உண்மையாகும்.

வீரத்திற்கு நடுகல், வீரர்களின் புகழ் பொறித்த சாசனக்கல், சிறுகோயில், பெரும் கோயில்கள் அமைத்து, வெறுங்கல்லும், உருவச் சிலையும் செய்து, காப்பாற்றி ஆண்டாண்டு காலமாக இருந்த வழக்கம் அந்தப் பாரதக் கதையின் தாக்கத்தால் மாறிப் போனது. ஆனால், இன்றும் மாரியம்மன், துர்க்கை அம்மன் எனப் பெண் வடிவங்களைச் சக்தியாகப் பார்த்து, நாடு முழுவதும் கொண்டாடிக் கொண்டு வருவதை மறக்கவோ, மறைக்கவோ முடியாது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அன்னை அங்கயற்கண்ணி வானுறை தெய்வமாகக் கருதிப் போற்றப்படுகின்றாள்.

# கயல்விழியின் போர்ப் பயணம்

கயல்விழி அடுத்த சூளுரையை முடிக்க வேண்டிப் பெரும்படை திரட்டினாள். தந்தை தென்னவர் மூப்பின் காரணமாக தளர்வடைந்து விட்டதால் தன் தமையன் திருமாறனைப் பாண்டிய நாட்டை ஆளச் செய்து வடபுலம் நோக்கித் தந்தையுடன் போர்ப் பயணம் புறப்பட்டாள்.

எடுத்த எடுப்பிலேயே - அடுத்த நாட்டிலேயே இப்படி ஒரு வல்லமை மிக்க எதிர்ப்பு இருக்குமென்று பாண்டிமாதேவி அங்கயற்கண்ணி என்றழைக்கப்பட்ட கயல்விழி நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. ஆனாலும் அதைத் திட மனதோடு எதிர்கொள்ளத் தன் படைகளுக்கு வியூகம் அமைக்க அணியமானாள்.

படை வீரர்கள் போர் அறிவிப்புக் கேட்டுக் குதூகலம் கொண்டனர். தம் வீரத்தைக் காட்ட இது நல்ல வாய்ப்பு எனக் கூறி மகிழ்ந்தனர். நாகமலைத் தலைவன் நாகேந்திரன் தலைமைத் தளபதியாகப் படை நடத்தி வந்தான். இன்னொரு தளபதியான கயல்விழியின் தோழி வேல்விழி மற்றொரு படைக்குத் தலைமை தாங்கி நடத்தி வந்தாள். வேல்விழி, ஒரு புலவருங்கூட; நல்வெள்ளியார் எனப் போற்றப்பட்டவள்.

# எருமையை வென்ற பெருமை

எருமை நாட்டின் எல்லையிலேயே எதிர் கொள்ள அந்நாட்டின் தளபதிகள் சண்டக மாமலையனும் முண்டக மாமலையனும் காத்திருந்தார்கள். ஒரு பெண் நாடாள்வதும் அவள் திக்விஜயம் செய்வதும் அவர்களுக்கு வியப்பை அளித்தாலும், பெண் தானே என்ற ஏளனம் அவர்கள் உள்ளத்தில் இருந்ததை முகம் தெளிவாகக் காட்டியது.

"நாகரே! இது நாம் மேற்கொள்ளும் திக் விஜயத்தின் முதல் போர். நானே முன்னின்று நடத்துகிறேன். என் நோக்கம் அறிந்து நீங்கள் உதவிக்கு நில்லுங்கள். நம் தூதினை மதிக்காமல் போர் புரிய வரும் இந்த நாட்டைக் கைப்பற்றுவோம்" எனக் கூறிப் படையின் முன்னால் நின்று, "வீரர்களே, வெற்றிப் பயணத்தைத் தொடங்குங்கள். வெற்றி நமதே," எனக்கூவி, வாளை உருவிக் கயல்விழி முன்னால் விரைந்தாள்.

தேரில் விரையும் அந்தக் கருப்பழகியின் முகத்தில் குருதி உள்ளூரப் பாய்ந்து, அவள் முகத்தைக் கருஞ்சிவப்பாக்கி ஒரு கொடூரமான சக்தியாகக் காட்டியது. சண்டகனும் முண்டகனும் சற்றுத் திகைத்தார்கள். இப்படிப்பட்ட வீரப் பெண்ணை அவர்கள் அதற்கு முன்னர்க் கண்டதே இல்லை.

சர சர என அவள் வாள் வீசியதில் உருண்டன எதிரிகளின் தலைகள்.

இத்துணைக் கோபமாக வாளை வீசும் அவளின் ஆற்றலைக் கண்டு அரண்டு போனார்கள். நெருங்கி வந்த

அவளைத் தாக்க குதிரை மீதிருந்து, சண்டகன் தன் வாளை எடுத்துப் பாய்ந்தான். தேர் சுழன்ற வேகத்திற்கு அவன் குதிரையால் ஈடுகொடுக்க முடியவில்லை; திணறியது. இரட்டைக் குதிரைகள் பூட்டிய தேரைத் தனிக் குதிரையில் வரும் தன்னால் நெருங்க முடியாததை உணர்ந்து அதிர்ந்தான்.

சற்றுப் பின் வாங்கிய சண்டகன் தன் ஈட்டியை எடுத்து அவள் மீது வீசினான். அதைச் சட்டென்று தன் வாளால் தடுத்தாள். அந்த ஈட்டி இரண்டு துண்டாகிப் போய்ப் பறந்து விழுந்தது. எத்தனை உறுதியான ஈட்டி! இதைத் துண்டாக்கிய அந்த வாள் அவ்வளவு வலிமை பெற்றதா? அல்லது வீச்சின் வேகம் அதனைத் துண்டாடியதா?

எதுவானாலும் அதைச் சுழற்றும் அவள் வலிமை மிக மிக ஆபத்தானது. நினைத்தவனின் துணைக்கு முண்டகன் வந்தான். அவன் யானை மீதேறிக் குறுக்கிட்ட வீரர்களைத் தாக்கிக் கொன்று கயல்விழியை நெருங்கினான். அவள் கையில் சூலாயுதத்தைச் சுழற்றிக் கொண்டிருந்தாள். குதிரைகளும் வீரர்களும் அவள் வீச்சை எதிர்கொள்ள முடியாமல் சாய்ந்து மடிந்தனர்.

அருகில் வந்த முண்டகனின் யானையைத் தன் சூலத்தால் குத்திச் சாய்த்தாள். கீழே விழுந்த முண்டகன் தன் உடைவாளை உறுவிக் கொண்டு அப்போது அருகே தனித்து நெருங்கிய குதிரையில் ஏறி முன்னேறினான். அந்தத் தருணத்தில் சண்டகனும் சேர்ந்து கொண்டான். அவன் கைகளில் அப்போது வில் இருந்தது. அவன் அம்புகளை நாணேற்றி எய்தான். கயல்விழி தன் சூலத்தை எடுத்துச் சுழற்ற ஓர் அம்புகூட அவள் மேல் பாயாமல், சூலத்தால் தடுக்கப்பட்டு, திசைமாறிப் போயின.

அவர்கள் இருவரின் குதிரைகள் கயல்விழியின் தேர் சுற்றும் வேகத்திற்கு ஏற்பத் திரும்ப முடியாமல் திணறின. சூலம் சுழன்றது; சண்டகனின் வாளும் முண்டகனின் வில்லும் பறிக்கப்பட்டன.

அதே கணம் அவர்கள் தலைகள் சீவப்பட்டுத் தரையில் உருண்டன.

ஆவேசம் அடங்காதவளாகப் படையை முன்னேறச் செய்தாள். எருமை நாட்டுப் படைகள் தடுமாறின. தளபதிகள் ஒரே சமயத்தில் வீழ்ந்ததால், வழி நடத்தத் தலைமையின்றிச் சிதறி ஓடினர்.

“வீரர்களே ஓடுங்கள். உங்கள் மன்னனை வெளியே வரச் சொல்லுங்கள். இந்தப் பாண்டிமா தேவியின் முன் நின்றாலே பொசுங்கிவிடுவான்” என்று ஆர்ப்பரித்தாள் கயல்விழி.

அஞ்சிய வீரர்கள் மன்னனை அணுகி நடுங்கியபடி, அந்தப் பெண்ணரசியின் தீரத்தைக் கூறிச் சண்டக முண்டகர்கள் அவள் கையால் அழிந்ததை விரிவாகக் கூறினர். இனி நாடு உய்ய மன்னர்தாம் வர வேண்டும் என்றனர்.

மாவீரர்களான சண்டகன் முண்டகன் போன்ற தளபதிகளைத் தன் கையாலேயே சாய்த்துவிட்டாள் ஒரு பெண் என்றதும், எருமை மன்னன் முதலில் சற்று அதிர்ந்து போனான். “அவர்கள் அவள்பால் இரக்கம் காட்டியிருக்கக் கூடும். அதனால் மயங்கிய மனத்தை உடையவராய்ப் போர் செய்திருக்கக் கூடும். போரில் அவர்கள் சிந்தை செல்லாததால் அவள் வென்றிருக்கக் கூடும். இருக்கட்டும்; நாமே போர்முகம் செல்வோம். அந்தச் சிறுமியை வென்று வருவோம்” என்று புறப்பட்டான்.

கயல்விழி எதிரில் வந்த மன்னனை நோக்கி,

“ஓ! எருமையூரா! இப்போதும் ஒரு வாய்ப்புத் தருகிறேன். சரணடைந்து விடு. கப்பம் கட்டி உன் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் துன்பம் வராமல் காப்பாற்றிக் கொள்” என்றாள்.

'ஆ! எத்துணை இளையவள்! ஆனால் போர்க்குணம் நிறைந்தவளாய்க் காண்கின்றாளே!" இப்படிச் சிந்தனை ஓட',

"பாண்டிய அரசியே! நாங்கள் பெண்களோடு போர் செய்வதில்லை; அது போர் அறமும் ஆகாது. எமக்கிணையான ஆண்மகனோடேயே யாம் மோதுவோம். நீ போய்விடு. உன் நாட்டில் ஆண்மக்கள் இல்லையா? வரச் சொல்" என்றான்.

"எருமையூரா! போர்க்களத்தில் இறங்கிய பின் போர் அறம், போர் மறை, போர் வழி இவற்றையெல்லாம் பற்றிப் பேசுவது வீண். வீரத்தில் ஆண் வீரம் பெண் வீரம் என்ற பாகுபாடு உண்டா? உம் - மோதிப்பார்" என்று தன் சூலாயுதத்தைச் சுழற்றி முன்னேறினாள்.

அவள் சூலம் கைகளில் சுழன்றது. அந்த வேகத்தில் சூலத்தின் உருவே தெரியவில்லை. அவளைச் சுற்றி ஓர் ஒளிக் கவசம்தான் தெரிந்தது. எதிர்பட்டவர் எல்லாம் விட்டில் பூச்சிகள் போல் அழிந்துபட்டனர்.

எருமை அரசன் தன் கைகளில் வாளேந்திக் குதிரை மீதிருந்து வேகமாக அவளை நோக்கிப் பாய்ந்தான். அவனது வாட்சுழற்சிக்குப் பலர் மாண்டு வீழ்ந்தனர். நெருங்கிய அவனுடன் வெகு வீரத்துடன் கயல்விழி எதிர்த்துப் போரிட்டாள். சூலத்தின் சுழற்சி அவனைத் திக்கு முக்காடச் செய்தது. ஆங்காங்கே அவன் தோளிலும் மார்பிலும் சூலம் தோய்ந்து தொடர்ந்து புண்களைத் தோற்றுவித்தது.

காயங்களிலிருந்து குருதி கொட்டியது. அஃது அவள் முகத்திலும் தெறித்ததால், பயங்கர உருவாகக் காட்சி அளித்தாள்.

எருமையரசன் தன் உடல் வலிமையைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருவதை உணர்ந்தான். அதே நேரம், அவள் வீராவேசமாகச் சுழன்று சக்தியின்

வடிவாகவே மாறிவிட்டாள். அவனுடைய கை வாள் பறந்தது; அவன் கீழே வீழ்ந்தான். அவனைத் தன் இடது காலால் மிதித்து மார்புக்கு மேலே சூலத்தை உயர்த்தினாள். மிரண்ட விழிகளோடு தானாகவே குவிந்துவிட்டன எருமையரசனின் கைகள்.

“எருமை அரசே! வணங்கிய உன்னை யாம் கொல்ல மாட்டோம். என்றும் எமக்கு நட்பு நாடாக நீ இருக்க வேண்டும். அதே சமயம் நாம் கூறும் கப்பத்தையும் செலுத்திட வேண்டும். பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாக இருந்தும் எம்மை எதிர்க்கத் துணிந்ததனால் யாமே உன்னோடு போரிட்டோம். எழுந்திரு. உனது கோட்டைக்குச் செல்வோம்” என்றாள்.

போர்ப் பயணத்தின் முதல் வெற்றியை எருமையூரில் கொண்டாடினாள் கயல்விழி. பத்து நாட்கள் நடந்தது விழா. வீரத்தின் இலக்கணமாகச் சக்தியின் உருவமாக அவளை அந்நாட்டினர் கொண்டாடிப் போற்றினர்.

எருமை நாட்டுப் படைகளும் சேர்ந்துவிடத் தன் போர்ப் பயணத்தைத் தொடர்ந்தாள் கயல்விழி.

அடுத்துக் கடம்பர்கள் எதிர்க்க அவர்களைப் பாண்டிய தளபதி நாகேந்திரன் வெற்றி கொண்டான். அவர்கள் வென்ற இடத்திற்கு “நாகர் பேரூர்” எனப் பெயரிட்டாள்.

போர்ப் பயணத்தில் அடுத்ததாக மும்பை நாட்டை வென்றாள்; அங்கு அவளை ‘மும்பா தேவி’ என்று போற்றினர். பின்னர்க் கொற்கை (கூர்க்) நாட்டை வென்றதால் “கொற்றவை” என்று அழைக்கப்பட்டாள்.

வெற்றி மேல் வெற்றி! இடையே விந்திய மலை குறுக்கிட்டது.

# விந்தையான விந்திய மலை

"நாம் கபாடபுரத்திலிருந்து ஆண்டபோதும் விந்திய மலைக்கு அப்பால் செல்ல யாரும் நினைக்கவில்லை. இருபுறமும் கடல் இருந்தது. அதனால் கடல் வழியாகச் சென்றிருக்கக் கூடும். எகிப்திய, ரோமானிய, கிரேக்க, அரபு நாட்டவர்கள் கடல் வழியாக நம் நாட்டுக்கு வந்து வாணிபம் செய்வதால் மலைக்கு மறுபுறம் ஏதும் மக்கள் கூட்டம் வாழுகிறதா என்றே தெரிந்திருக்கவில்லை. வந்த வணிகர் யாரும் அவ்விதம் கூறியதும் இல்லை. எனவே, உன் போர்ப் பயணத்தை விந்திய மலையோடு நிறுத்திக் கொள் மகளே"

தென்னவன் மகளுக்குக் கூறினான்.

"எந்தையே! பெருஞ்சென்னி, வடபுல மாமன்னன் அசோகரைப் பற்றிக் கூறியதை நான் மறந்து விடவில்லை. விந்திய மலையைத் தாண்டி, தெற்கே வந்து கலிங்க நாட்டை வென்று, பெரும் புகழைச் சந்தித்தார் அசோகர். ஆயினும் அதற்குத் தெற்கே அவர் பார்வை செல்ல, சாதவாகனரை எதிர்த்துப் போரிட்டார். அப்போரில் பெருஞ்சென்னி சாதவாகனருக்கு உதவி அசோகரைத் தோற்றோடச் செய்தான்.

நம் நாட்டிலும் மேற்கு மலைத் தொடரின் இருபக்கமும் கீழை மலைத் தொடர்களின் நாற்புறமும் மக்கள் வாழ்கிறார்கள். நதிகள் மேற்கு மலைத் தொடரின் இருபக்கங்களிலும் பாய்கின்றன. இப்படி இந்தத் தென்பக்கத்துச் செழிப்பு மறுபுறமும் இருக்கக் கூடும். இந்தப் பக்கம் பாயும் நதிகளைப் போல் மறு பக்கத்திலும் இதே மலையினின்றும் நதிகள் பிறந்து பாயக் கூடும்.

எனவே நான் பயணத்தைத் தொடர்கிறேன். நம்மிடம் மலையேறிப் போரிடும் திறங்கொண்ட வீரர்களும் இருக்கிறார்களே. சேரன் குட்டுவனார் கட்டுப்பாட்டில் அவர்கள் இப்போது இருக்கிறார்கள். எனவே இப்படைகளோடு மேலும் முன்னேறுவோம்.

தந்தையே, இனிச் செல்ல உள்ள இடங்கள் இதற்கு முன்னர்ப் பார்த்திருக்காத, பழகாதவை என்பதால், பயணத்தில் பல தொல்லைகள் இருக்கக் கூடும். அகவை முதிர்ந்த உங்களுக்கு அமைதியும் அன்பான அரவணைப்பும் தேவை. எனவே, நீங்கள் மதுரைக்குத் திரும்புங்கள். விந்தியத்திற்கு அப்பாலும் இருந்து வெற்றிக் கனிகளைப் பறித்துக் கொண்டு விரைவில் திரும்புவேன்; உங்கள் வீரக் கழலடியில் விருந்தாய்ப் படைப்பேன்."

கயல்விழியின் பேச்சிற்குப் பின்னர்ப் பிற பேச்சுக்கள் அங்கு இருக்கவில்லை. விந்திய மலைக்கும் அப்பாலும் செல்ல, விடுவிடென்று ஏற்பாடுகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டன.

# தொடரும் போர்ப் பயணம்

எருமையரசனை வென்று, பின் வடக்கு நோக்கிப் பயணித்தாள். இதன் இடையில் வாதாபி என்ற இடத்தைத் தன் படைகளை நிலை நிறுத்தச் சரியான இடம் என்று தன் மனத்திற்குள்ளேயே முடிவெடுத்தாள். பின்னர் விந்திய மலையைக் கடந்துசென்றாள்.

வரைநாடு (பரோடா) மீது படையெடுத்து அம்மன்னன் வஜ்ரதத்தனின் ஆணவத்தை அழித்து அவன் கோட்டைக்குப் "பாராசக்தி கோயில்" எனப் பெயர் சூட்டினாள்.

யமுனை நதியைக் கடந்து, இடைப்பட்ட நாடுகளை வென்று கங்கைக் கரையில் உள்ள மதுரை மாநகரைக் கைப்பற்றினாள். அது தன் தலைநகரான மதுரையின் பெயராக இருப்பதைக் கேட்டு வியந்தாள். பின்னர்க் கங்கையையும் கடந்து கங்கைக் கரையோரமாகவே முன்னேறினாள்.

நீர்ப் பிறப்பிடம் அறிவதே மீன்களின் இயல்பான குணம். அதேபோல் கயல்விழியும் கங்கைப் பிறப்பிடம் காண முன்னேறினாள். பின்னர் அது குறுகி அதற்கு மேல் பாகீரதி என்ற பெயரால் அது அழைக்கப்படுவதை அறிந்தாள்.

கங்கைக் கரையோரமாகவே கயல்விழி திரும்பிப் படையோடு நடை இட்டாள். காசியில் எதிர்ப்பார் இன்றி நல்ல வரவேற்பைப் பெற்றதால் அருள்விழி காட்டி அகம் மகிழ்ந்தாள். இன்னும் சற்றுக் கிழக்கே சென்றபோது, கங்கை நதி பல பிரிவுகளாகப் பிரிந்ததை கண்டாள். காவிரி கடலில் கலப்பதை அவள் பார்த்திருந்ததால் கடற்பகுதி சில காதத் தொலைவே இருக்கக்கூடும் என்று எண்ணினாள்.

# வடவிந்திய வெற்றிகள்

அவள் நினைத்தது சரியாகவே இருந்தது. அவள் எண்ணியதைவிடப் பெரியதாகவும் இருந்தது. பெரிய பெரிய நதிகள் அவற்றை ஒட்டிப் பெரிய பெரிய சமவெளிகள். ஆனால் சிறுசிறு நாடுகள். வெகு எளிதாக அனைவரையும் வென்றாள்.

ஒரு பெண், வீர மங்கையாக வந்து போரிட்டது அவர்களுக்கு விந்தையாக இருந்து. அதிலேயே அவர்கள் அவளைப் பற்றித் தப்பாகக் கணக்குப் போட்டுத் தப்பாக அடி எடுத்து வைத்துத் தப்ப முடியாமல் தோற்றனர்.

அவளுள் ஆசை ஆர்ப்பரித்து எழுந்தது. இவ்வளவு பரந்த நிலங்களையும் தன் ஆட்சிக்குக் கீழ்க் கொண்டுவர வேண்டும் என்று முடிவு செய்தாள். பெரிய பெரிய நதிகளைக் கடக்க எதிரிகளுடைய நாவாய்களைப் பறித்து, நதிப்படகு, கடற்கப்பல் போன்றவற்றின் உதவியோடு திறம்படைத்த தன் வீரர்களின் செயல்பாட்டால் மிக எளிதாக நதிகளைத் தாண்டினாள். அதுவே அங்குள்ள மக்களுக்கு மற்றொரு புரட்சியாகத் தோன்றியது. நதிகளைத் தாண்டுவது அவர்களுக்கு மிகுந்த கடினமான செயலாக இருந்து வந்தது. எனவே, அவளைக் கண்டு அஞ்சி அடங்கிப் பணிந்தார்கள்.

அவந்தி நாடு அவளுக்கு அடிமையானது. நாட்டுக்கு நாடு படைப் பலம் பெருகப் பெருக எதிர்ப்பு குறைந்தது. செல்லுமிடமெல்லாம் மன்னர்கள் வந்து வரவேற்று நட்புப் பாராட்டிப் பாண்டிய ஆட்சியை ஏற்றனர்.

போர்முனையில் வீரர்கள் பெரும் வெற்றி ஈட்டினாலும் அல்லது மாவீரம் காட்டி மடிந்து போனாலும் அவர் வீரச் சிறப்பை மக்கள் அறிய 'நடுகல்' நாட்டுவது வழக்கம். அப்படி எடுக்கும் நடுகல்லுக்கு அல்லங்கம் என்று பெயர் சூட்டினர். அதில் அவ்வீரனின் பெயர், வீரச்செயல் இவற்றைப் பொறிப்பர்.

கயல்விழி பெண்ணானதால் வெறும் அல்லங்கம் நாட்டினால் அஃது எடுபடாமல் போய்விடக்கூடும் என எண்ணி அவளுடைய உருவச்சிலையையே செய்து பொது இடத்தில் நிறுத்திச் சிறப்புச் செய்தனர். அப்படிப்பட்ட உருவச் சிலைக்கு அந்தந்த நாட்டு வழக்கப்படி, வட்டார முறைப்படி, பல பெயர்கள் அமைந்தன. முழு உருவச்சிலை, முகம் மட்டும் காட்டும் சிலை, ஆயுதங்கள் ஏந்திய சிலை, இப்படிப் பலவகை ஆங்காங்கே அமைக்கப்பட்டன; அனைவராலும் ஏற்றிப் போற்றிச் சிறப்பிக்கப்பட்டன.

# பாஞ்சாலத்தில் ஜ்வாலமுகி [தணல்முகி]

ஐந்து நதிகள் பாயும் பாஞ்சால நாட்டு இளவரசி பாஞ்சாலி துருபதநாட்டு இளவரசியாகத் திரௌபதி பெயரில் தெற்கே கோயில் இருப்பது எவ்வாறு பொருந்தாது எனில், அவள் திக்விஜயம் செய்து நாடுகளை வெல்லவில்லை; அன்பும், அருளும், அரவணைப்பும் காட்டி ஆட்சி புரியவில்லை. ஆனால் அதே பாஞ்சால நாட்டில் காங்கார நாட்டு மன்னனோடு நாகர்கோட்டை என்ற இடத்தில் கயல்விழி போரிட நேர்ந்தது. வீரமிகுந்த அந்தக் காங்கார மன்னன், பெண் ஒருத்தியிடம் தான் அடி பணிவதா என்று ஆணவத்தோடு தூது வந்தவனிடம் இழிவாகப் பேசப் போர் மூண்டது.

நேருக்கு நேர் நின்ற காங்கார மன்னனைக் கண்டதும் அவன் தன்னைச் சாதாரண பெண் என்று எள்ளி நகையாடியதை நினைத்ததும் அந்தக் கரியமுகம் சிவந்தது. கண்களில் அனல் பறந்தது.

அவனைக் கண்டு வாள் உயர்த்திய அங்கயற்கண்ணியைக் கண்டதும் அவள் முகத்தில் ஜொலிக்கும் கனலைக் கண்டு, அவன் தன் சக்தியை இழந்தான். இவள் சாதாரணப் பெண் அல்லள்; மாபெரும் சக்தி படைத்த தெய்வப் பிறவி என்று அவன் உள்ளத்தில் எண்ணங்கள் ஓடின. அங்கேயே, அப்போதே மண்டியிட்டான்.

“தாயே! உன் கனல் முகம் கண்டு என் தவற்றை உணர்ந்தேன். எனது அமைச்சர்களும் படைத்

தளபதிகளும் தங்கள் வீரத்தை விரிவாக எடுத்துரைத்துத் தங்களை எதிர்த்து இந்த நாட்டைக் குருதிக் குளமாக்க வேண்டாம் என்று வற்புறுத்தினார்கள். என் பிடிவாத குணத்தால் அவர்களை அசட்டை செய்து போருக்கு வந்தேன்.

நல்ல வேளை! தங்கள் முக தரிசனம் முன்னரே இப்போது கண்டேன். தாங்களே நேரில் வராது போயிருந்தால், போர் நடந்திருக்கும்; என் நாடு அழிந்திருக்கும். தங்கள் முகத்தில் ஒளிரும் அந்தத் தனலே என் நாட்டை அழித்திருக்கும். என்னை மன்னியுங்கள். நான் கண்ட அந்தத் தனல்முகம் என் கனவிலும் மறையாது. இந்த இடத்திலேயே தங்களுக்குத் தனல்முகி என்று பெயர் சூட்டி ஓர் ஆலயம் எடுப்பேன்".

கயல்விழி சினந்தணிந்து தன் அருட்பார்வையை வீசினாள். (இப்போதும் பஞ்சாப் மாநிலத்தில் ஜ்வாலமுகி என்று ஊரும் கோயிலும் இருக்கிறது.) மன்னனும் மக்களும் அவளை வணங்கி மகிழ்ந்து வாழ்த்தி வரவேற்றனர். பல நாட்கள் விழா எடுத்து விருந்தோம்பி வெற்றிச் செல்வியை வழி அனுப்பி வைத்தனர்.

வழிநெடுகிலும் பெரும்பான்மையான அரசுகள் பணிந்தன, எதிர்த்தவர்கள் அழிக்கப்பட்டனர். மூன்று ஆண்டுகளில் எல்லா நாட்டினையும் கயல்விழி வென்று ஒப்பாரும் மிக்காரும் இல்லா வீர மகளாக எல்லோர்க்கும் விளங்கினாள்.

# கயல்விழியின் காதல்

இமயமலையை நோக்கி எழுந்தது பாண்டியப் படை. இமய மன்னன் சோமனாதித்தன் போரிடவும் வரவில்லை, சரணடையவும் வரவில்லை. ஒற்றர்களையும் வீரர்களையும் விட்டு அவனைத் தேடப் பணித்தாள்.

நெடும் பயணம் - கடும்போர் - சென்ற இடமெல்லாம் வெற்றி - இப்போது இருப்பதோ இமயத்தின் நெற்றி. எதிர்ப்பார் யாரும் இல்லை. எனவே, எல்லார்க்கும் இடையே சிறிது எதிர்பாரா ஓய்வு.

அன்று கயல்விழி மட்டும் தனியாகக் கிளம்பினாள். வேண்மாடம் (இமய மன்னனுடையது) விட்டு வெளியே வந்தவள் திரும்பித் தன்னுடன் யாரும் வர வேண்டாம் எனக் கூறிவிட்டு, இரண்டு மூன்று மணித்துளிகள் போயிருப்பாள்.

அரண்மனை மாடத்தில் இரண்டு புறாக்கள் அசைந்து அவள் கவனத்தை ஈர்த்தன. "குர்ர்ர்ரு-குர்ர்ர்" என்று ஒரு புறா எழுப்பிய ஒலியின் புதுமை அவளை அந்தப் புறாக்களையே தொடர்ந்து பார்க்க வைத்தது.

பக்கவாட்டில் குறுக நடந்தது செங்கால்களைக் கொண்ட அந்தப் பெண் புறா. பார்வையிலும் நடையின் நளினத்திலும் உடல் சிலிர்ப்பிலும் குறுகுறுப்பே மிகைப்படத் தெரிந்தது.

அதைக் கண்ட சேவல் புறா கம்பீரமாக நடந்து பெண்புறாவை அணுகியது. தன் அலகால் பேடையின் அலகைப் பற்ற எத்தனித்தது. கோபம் கொண்ட-

கொண்டது போல்-பேடை, தன் அலகால் ஆண் புறாவைக் கொத்தி விரட்டியது. ஆனால் பார்வையில் சீற்றமில்லை. தாக்குதலில் வேகம் இல்லை. மென்மையே மிளிர்ந்தது.

ஆண் புறா பக்கவாட்டில் மெள்ள நகர்ந்து தன் துணையை மீண்டும் நெருங்கித் தன் சிறகால் அணைத்துக் கழுத்தோடு கழுத்தை உரசித் தன் கருத்தைக் கண்களால் தெரிவித்தது. பெண் புறா ஆண் புறாவை மேலும் நெருங்கியது. பணிந்து அமர்ந்து கொண்டது. அழைப்பை ஏற்ற ஆண் புறா மகிழ்ந்து அதன் மேல் படர்ந்தது.

கூடிக் களிக்கும் அந்தப் புறாக்களைப் பார்த்த கயல்விழியின் அடி இதயத்தில் ஏதோ குறுகுறுத்தது. இரண்டு சிக்கி முக்கிக் கற்கள் நறநற வென உராய்வதுபோல் இருந்தது. சற்றே வெப்பம் உள்ளிருந்து கிளம்பியதை அவள் சரியாக உணரவில்லை. கால்போனபடி நடந்து போய்க் கொண்டிருந்தாள்.

இயற்கை எழிலைக் கண்டு, நுகர்ந்து, மகிழ்ந்து நடந்தவள், தன்னை மறந்து வெகு தூரம் வந்துவிட்டாள். எப்பக்கம் பார்த்தாலும் எத்தனை நேரம் பார்த்தாலும் திகட்டாத எழிற் குவியல். அதுகாறும் இருந்த சூழ்நிலைக்கு முற்றிலும் மாறான அந்தச் சூழ்நிலையில் அவள் தன்னை மறந்ததில் வியப்பு ஏதும் இல்லை.

இறுதியாக அவள் வனச்சோலை ஒன்றைக் கண்டாள். இயற்கை அழகு கொட்டிக் கிடக்க, அதைக் கண்டு மட்டிலா மகிழ்ச்சியில் ஆழ்ந்து அமிழ்ந்து போனாள்.

கங்கையாற்றின் ஒரு பகுதி அருவியாகப் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது. ஓங்கி உயர்ந்து, காயும் கனியுமாகக் குலுங்கும் மரங்கள், சிறிதும் பெரிதுமான வண்ண வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கி அவளை -

தங்கள் வருங்கால மாதரசியை "வா வா" என்று அழைத்தன. புதர்ச்செடிகள், மரத்தைச் சுற்றிப் படர்ந்த கொடிகள், காய் கனிகள் பலவித வண்ணங்களில் காய்த்துத் தொங்கி அசைந்தாடும் அழகும் அவற்றைப் புள்ளினங்களும் குரங்குகளும் வேறு சில விலங்கினங்களும் தாவிப் பறித்து உண்டு எச்சத்தை வீசியெறிந்து விளையாடி மகிழ்ந்த எழிலும் அவள் நெஞ்சைக் கொள்ளை கொண்டன; மென்மைப் படுத்தின. சற்றுப் பெரிய விலங்குகள் அருவியில் மூழ்கி நீராடிக் களிப்பதையும் கயல்விழி கண்டு களித்தாள்.

அவள் "இதுவரை காணாத - காண நாட்டம் சிறிதும் இல்லாத - இருட்டு உலகத்தில் இருந்திருக்கின்றோம்; எப்படிப்பட்ட அற்புதமான அழகின் சிரிப்புகளைக் கண்ணிருந்தும் காணாது இருந்திருக்கிறோம்" என்று முதன்முறையாக வருந்தினாள். அஃது இளமை உணர்வுகளின் கண்விழிப்பு என்பதை அவள் அப்போதும் உணரவில்லை. காரணம் அக்காட்சிகள் இன்னும் அவள் கருத்தை முழுமையாய் ஆழமாய்க் கவரவில்லை.

அந்தச் சோலையின் உயர்ந்த மரத்தின் கிளை ஒன்றில் இரண்டு காட்டுப் புறாக்கள் அமர்ந்து குறும்புகள் புரிந்து கொண்டிருந்தன. பெண் புறா கிளையில் பக்கவாட்டில் நகர்ந்து எட்டிப்போக, ஆண் புறாவும் அதேபால் நகர்ந்து அதனோடு ஒட்டி இழைய, பெண் புறா மீண்டும் நகர, ஆண் புறாவும் விடாமல் பேடையை நெருங்கி உரசி தன் அலகால் முத்தமிட, உடல்கள் உரசப் பேடை மயங்கிப் பணிந்தது.

"ஆ' .. .. அங்கு, அந்த அரண்மனை மாடப் புறாக்களைப்போல் .. .. அவள் நெஞ்சில் சிக்கி முக்கிக் கற்கள் "பறபற"வெனச் சற்று வேகமாக உரச, அடிமனதில் வெப்பம் அதிகமாகப் பெருகுவதை அவள் உணர ஆரம்பித்தாள். அஃது ஏன்? புரியவில்லை. போதும் என்று பார்வையைத் திருப்பினாள்.

அங்கே .. தோகை விரித்தாடும் ஆண் மயிலும் அதன் விருப்பத்திற்கு இணங்கிடும் பெண் மயிலும் - அவள் நெஞ்சில் அப்போது கனல் மூண்டுவிட்டதோ? சீ .. என்ன இது? அருவிக் கரையோரம் சென்றாள். சென்றவளின் முன் இன்னொரு காட்சி.

கடுவன் ஒன்றும் மந்தியொன்றும் இன்பம் துய்த்துக் கொண்டிருப்பதைக் கண்கள் இமைக்காது கண்டாள். கனல் இப்போது தன் மேனியெங்கும் தீயெனப் பரவுவதை அவளால் தடுத்திட முடியவில்லை . . . துவண்டாள். இஃது என்ன புது உணர்ச்சி?

அந்த இடத்தைவிட்டு விலகி, அருவி ஓரமாக விரைந்து நடை போட்டாள். சிறிது தொலைவே போயிருப்பாள்.

அங்கே பெரிய மரம். அதனடியில் மேடை போன்ற இடம். அந்த மேடையில் தவ நிலையில் ஓர் இளைஞன் அமர்ந்திருந்தான்.

சிவந்த மேனி - புலித்தோல் ஆடை, அவிழ்ந்து விரிந்த தலைமுடி, ஒளிதிகழ் முகம், கண்மூடிய தவம். கண்ட கணத்தில், அவன் பேரொளியோடு ஒரு மின்னலாய் மாறி அவள் கண் வழியே புகுந்து கருத்தகத்தில் நுழைந்துவிட்டான்.

உள்ளே எரிந்த தனல் அப்போது முற்றிலும் மறைந்து பெரும் மின்னொளியாய் அவள் இதயத்தை ஆக்கிரமித்துக் கொண்டது. வைத்தகண் வாங்காமல் அவள் எத்தனை நேரம் பார்த்தாளோ - தன்னிலை அடைந்தபோது அவன் அதே தவ நிலையில் இருந்தான்.

யார் அவன்? என் உள்ளத்திலும் உடலிலும் இந்த எழுச்சியை இவன் மட்டும் தோற்றுவித்தது எப்படி? இவனை விடவும் அழகான வலுவான இளைஞர்கள் எத்தனையோ பேர்களைப் பார்த்து இருக்கிறேன்;

பழகியும் இருக்கிறேன்; ஆனால், அவர்களால் ஏற்படுத்த இயலாத இன்ப உணர்வுகள் - இனிய அதிர்வுகள் இவனைப் பார்க்கும் போதே என்னிடத்து எழுகின்றனவே, ஏன்? எப்படி? கண்கள் திறந்து என்னைக் கண்டவனும் இல்லை. மலர்ந்த சிரிப்போ மகிழ் பேச்சோ நிகழவில்லை; எனினும், மனம் மயங்கி மகிழ்கிறதே, ஏன்? நல்லவனா? வல்லவனா? உயர் குடிப் பிறந்தவனா? தாழ்ந்த குடிமகனா? ஒன்றும் அறிதற்கும் முன்னரே அவனோடு ஒன்றிப் பொருந்த உள்ளமும் உடலும் ஒருங்கே விழைகின்றனவே, அந்தக் கள்ளம் புகுந்ததும் ஏன்? எப்படி?

கயல்விழி கலங்கித் தவித்தாள். கவலையால் அகம் சோர்ந்தாள்.

காலம் கடந்து கரைந்தது; காரிருள் சூழத் தொடங்கியது. அவனைப் பார்க்காமல் இருக்கமுடியாது என்பது போல் கயல்விழி திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு தான் வந்த வழியே திரும்பினாள்.

நடந்த யாவற்றையும் கயல்விழியே அறியாதவாறு புதர் மறைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த ஓர் உருவம் ஓசை செய்யாமல் மறைந்தது.

வாடி வதங்கிச் சோர்ந்து துவண்டு, முகம் கூம்பி, எதையோ தொலைத்துவிட்டு வந்தது போன்ற மன வாட்டத்துடன் திரும்பிய தங்கள் தலைவி இளவரசி கயல்விழி அங்கயற்கண்ணியைக் கண்ட தோழியர் அதிர்ந்தனர்.

வீறு கொண்ட பார்வை, மிடுக்கு நடை, நிமிர்ந்த நெஞ்சு, எவரையும் ஊடுறுவும் கண்கள் அனைத்தையும் அப்படியே சில நேரப் பொழுதில் முற்றிலும் இழந்து திரும்பி இருக்கிறாள் என்றால் அதிர்ச்சியடைய மாட்டார்களா?

அந்தத் தொய்ந்துபோன கோலத்தில் அவளை அதற்கு முன் யாரும் பார்த்ததே இல்லை. அரண்மனை திரும்பிய கயல்விழியின் பார்வை அவளையும் அறியாமல் அந்தப் புறாக்கள் இருந்த மாடத்தை நோக்கிச் சென்றது. மாலையானதால் இருள் சூழ, அந்தப் புறாக்கள் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தன. ஆனால் தன் மனதின் அமைதி மட்டும் தன்னைவிட்டுப் போய்விட்டது என்பதை அவள் உணர்ந்தாள்.

யாரிடமும் பேசாது இயல்புக்கு மாறாகத் தளர்நடையோடு வந்து தன் மஞ்சத்தில் அமர்ந்தாள். களைத்து வந்திருக்கும் கன்னிக்குப் பால், பழச்சாறு கொடுத்தனர் தாதியர். அதை அவள் மறுத்துவிட்டுத் "தோழியரே, சிறிது நேரம் என்னைத் தனியாக விடுங்கள்" என்றாள்.

தான் எப்போதும் படுக்கும் மென்மை நிறைந்த படுக்கையில் சாய்ந்தாள். அவள் மனதில் காட்டில் தான் கண்ட சோலையும், அதில் புறாக்கள், மயில்கள், குரங்குகள் கூடி மகிழ்ந்த காட்சிகளும், மரத்தடியில் தவமியற்றும் நிலையிலேயே தன் நெஞ்சத்தில் நுழைந்துவிட்ட அந்த ஆடவனும் சுற்றிச் சுற்றி வந்து வாட்டினார்கள்.

மேனி எரிவது போல் உணர்ச்சி.

"யாரங்கே? இந்தக் கட்டிலில் யார் நெருப்பை இட்டது?" கத்தினாள்.

குரல் கேட்டுப் பணிப்பெண்கள் நடுங்கினர். தோழியர் ஓடோடி வந்தனர்.

"என்ன தேவி? என்ன ஆயிற்று?"

"இந்தப் பழைய பஞ்சு மெத்தையை எடுத்துவிட்டுப் புதிய மென்மையான மலர் மஞ்சம் விரித்திடுங்கள். இந்த முரட்டுப் படுக்கை என் மேனியெங்கும் குத்துகிறது."

அவள் உளறினாள். அந்தப் படுக்கையில்தான் அவள் அதற்கு முன்னர் உறங்கி வந்திருக்கிறாள். ஆனால், அன்றோ அவள் மென்னுடலை அது புண் படுத்தியது.

அரசியின் ஆணை அடுத்த கணம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் விளைவு? சற்றும் மாறவில்லை.

"இஃது என்ன முட்படுக்கை?"

கோபித்தாள். இரவு முழுவதும் பணிப் பெண்களையும் தோழியரையும் அழைத்துத் தூங்க விடாது அலைக்கழித்துத் தானும் தூங்காமல் தவித்தாள். விடிவதற்குச் சிறிது நேரமே இருக்கும் என்ற போதுதான் கண்ணயர்ந்தாள்.

கயல்விழியின் தோழியும் தளபதியும் சிறந்த புலவருமான வேல்விழி எனப்படும் நல்வெள்ளியார் அவள் படும் காமத்துயர் கண்டு மனம் ஆற்றாமல் அவளுக்கு உதவிட உறுதி பூண்டாள். அதற்கு முன் கயல்விழி கொண்ட காதலின் உறுதித் தன்மையை அறிய விரும்பினாள்.

"கயல்விழி, இஃது என்ன உன்னிடம் என்றும் நான் காணாத மாற்றம்? தடுமாற்றம்? வீரப் பேரரசி முகவாட்டம் உற்றிருப்பதா? சொல் தோழி. உனக்கு என்ன நேர்ந்து?"

"ஒன்றுமில்லை, வேல்விழி. ஏதோ நம் ஊர் நினைவுகள். நம் மக்களைப் பிரிந்த கலக்கம்; அவ்வளவுதாம்."

"கயல்விழி! உன்னை நான் உணரமாட்டேனா? எதையும் மறைக்காமல் சொல், தோழி!"

"வேல்விழி? என்ன பேசுகிறாய்? உன்னிடம் நான் மறைத்தேனா? மறைப்பதற்கு என்னிடம் என்ன இருக்கிறது?"

"என்ன மறைத்தாய் என்று சொல்கிறேன்; சரி தானா என்று பார்."

"மனையுறை புறவின் செங்கால் பேடைக்
காமர் துணையொடு சேவல் சேரப்
புலம்பின்று எழுதரு புன்கண் மாலைத்
தனியே யிருத்தல் ஆற்றேன் . . . ."

இது நம் அரண்மனையில் நிகழ்ந்தது. அடுத்து,

"குறுநடைப் புறவின் செங்கால் சேவல்
நெடுநிலை வியன்நகர் வீழ்துணைப் பயிரும்
புலம்பொடு வந்த புன்கண் மாலை"

இங்கு மாடப்புறாவும் அங்குக் காட்டுப் புறாவும் உன்னை முற்றிலும் மாற்றிவிட்டன என்பதை யான் அறிவேன். அது மட்டுமன்று; உன் நெஞ்சில் இடம் பிடித்தவன் யார் எனவும் நான் நன்கறிவேன்.

"வேல்விழி, நீ . . நீ . . எப்படி . . ?"

"கயல்விழி, நீ என் உயிர்த்தோழி மட்டுமன்று; நாட்டின் இளவரசியும் கூட. நீ தனியே செல்வதைப் பார்த்துத் தளபதி என்ற முறையில் நான் எப்படி வாளாவிருக்க முடியும்? எனவே, நீ அறியாதவாறு நான் உன்னைப் பின்தொடர்ந்தேன்; எல்லாவற்றையும் அறிந்தேன். ஆனால் முக்கிய அதிர்ச்சி ஒன்றுள்ளது."

"நீ என்னைப் பின் தொடர்ந்து வந்ததே எனக்கு அதிர்ச்சியாய் இருக்கிறது. மேலும் ஓர் அதிர்ச்சியா? அஃது என்ன? சொல்."

"உன் மனங்கவர்ந்தவன் யார் தெரியுமா?"

"என் மனங்கவர்ந்தவனா? என்ன . . என்ன உளருகிறாய்?"

"பொறு, பொறு. என் உளறலை முடித்து விடுகிறேன். தோழி, அவர் நாம் தேடிக் கொண்டிருக்கும் இந்த இமயத்தின் மன்னர் சோமனாதித்தன்தான்."

"ஆ! நம் எதிரியா?"

"இல்லை. அவருக்குத்தான் நாம் எதிரி. நமக்கு அவர் எதிரியில்லை. நாம்தானே போர்ப் பயணம் மேற்கொண்டிருக்கிறோம்?"

". . . . . . . . . . . . . ."

"தலைவி! இப்போதே அந்த இமய மன்னர் சோமனாதித்தனைத் தேடிப் பிடித்து வருகிறேன். தங்கள் ஆணையை எதிர்பார்க்கின்றேன்."

"வேல்விழி! அவருக்கு ஊறு ஏதும் நேர்ந்து விடலாகாது. எச்சரிக்கையோடு இரு. அவர் தப்ப முயலமாட்டார் என்றே எனக்குத் தோன்றுகிறது".

"அதென்ன தேவி! அவர் தப்ப மாட்டார் என்று அவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறீர்கள்? எதிரிகள், மாற்றார் கையில் சிக்குவதை விரும்புவார்களா? அப்படியாயின் அவர் ஏன் மறைந்து உறைகிறார்? ஒன்று, எதிர்த்துப் போரிட வேண்டும் அல்லது முழுமையாகச் சரண் அடைந்து அவர் நாட்டை நாம் தர அவர் ஏற்க வேண்டும். இரண்டும் இன்றித் தலை மறைவானவரைத் தான் நாம் அறிவோம். மீண்டும் மறைந்து விட்டால் அவரைக் கண்டுபிடித்தல் சற்றுக் கடினமே. இருப்பினும் முயன்று பிடித்துத் தக்க தண்டனையும் அளிக்கலாம்".

"வேல்விழி! போதும், என் மனமறிந்தும் நீ இப்படிப் பேசலாமா? அவரால் அன்றோ இப்போது நான் தண்டனை ஏற்றிருக்கிறேன். அவரைக் காணாமல் இனி என் வாழ்க்கை என்னாகும் என்று அறியேன். என் அருமைத் தோழியல்லவா? எப்படியும் கண்டுபிடித்து விடுவேன் என்றாயே, அதைச் செய். அவரிடம் என் மனம் காமுற்றதைக் கூறு. உன்னைக் கை கூப்பி வேண்டுகிறேன்."

"ஐயோ, மாதேவி! இதென்ன நீங்கள் என்னை வணங்குவதா? புரிந்து விட்டது. உங்கள் ஆராக் காதல் எப்படியும் நிறைவேறும். அவரைக் கண்டுபிடித்து உங்கள் மனநிலையை விளக்கி உங்கள் இருவரையும் சேர்த்து அறத்தோடு நிற்றலே என் கடமையாகும். (நெகிழ்ந்து) கவலை கொள்ளதே கயல்விழி! மன்னித்துவிடு, இதோ இக்கணமே புறப்படுகிறேன்."

புறப்பட அடி எடுத்து வைத்த வேல்விழி திரும்பிப் பேசினாள்.

"ஆயினும், ஓர் எச்சரிக்கை. வேட்டுவனின் உறுதியான வலையில் சிக்கினாலும் அதனை அறுத்துக்கொண்டு தப்பிவிடும் ஆற்றல் மிக்க புறா, சிலந்தியின் வாயூறிய நுண்ணிய இழைகளைக் கொண்ட அதன் வலையில் சிக்குண்டு அதனின்றும் தப்பிக்க முடியாமல் - தப்பிக்க விரும்பாமல் - அதனால் ஈர்க்கப்படுவதையே விரும்பும் நிலையிலேயே நீ இருக்கிறாய். பொங்கியெழும் வீரத்தைப் பருவக் காதல் எப்படிக் கட்டுப்படுத்துகிறது பார்த்தாயா?

காதலில் கட்டுண்டு, உன் குறிக்கோள், சூளுரை இவற்றைக் காற்றில் பறக்க விட்டுவிடாதே. நான் சொன்னவற்றை எல்லாம் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிரு. இப்போது நான் சோமனாதித்தரைக் கண்டு வருகிறேன்".

# வேல்விழியும் – சோமசுந்தரனும்

வேல்விழி தனியே வருவதைக் கண்டதும் மறைந்திருந்த சோமனாதித்தன் அவள்முன் வந்தான்.

"வணக்கம், இமய மன்னரே!"

"வணக்கம், தளபதியாரே! என்னைச் சிறை செய்யத்தானே வந்திருக்கிறீர்கள்?"

"இல்லை, எம் இளவரசி உங்களை எப்போதோ சிறை செய்து உங்களுடைய அடிமையாகிவிட்டார்."

"என்ன, என்ன சொல்கிறீர்கள்? எனக்குப் புரியவில்லை. என்னைச் சிறை செய்து என்னிடம் அடிமையாகி விட்டாரா?"

"இதில் புரிந்து கொள்வதற்கு ஒன்றுமில்லை. அதுதான் காதல் தத்துவம். யாரை வெற்றி கொள்கிறார்களோ அவர்களிடமே தோல்வியடைவதாக எண்ணுவது. இது மறப்போர் அன்று, அகப்போர்."

"என்ன சொல்ல வருகிறீர்கள்?"

"மன்னா! எம் தேவி உங்கள் பால் மனம் பறிகொடுத்து மாய்ந்து போகிறார். இந்தக் கோலத்தில் அவரை நாங்கள் இது காறும் கண்டதே இல்லை."

"என்ன? என்னிடம் மனம் பறிகொடுத்து விட்டாரா? என்னிடம் காதலா? அவர் என்னைப் பார்த்ததும் இல்லையே!"

*"பார்க்காமல் காதல் எப்படி வரமுடியும்? பழகாமல் வரக்கூடும்; ஆனால், பார்க்காமல் வருவதென்பது மிகமிக அருமை. கண்ணொடு கண் கலக்காமல் இருந்திருக்கலாம்; ஆனால், எங்கள் தலைவி உங்களைத் தவக்கோலத்தில் கண்டு தன்னையே இழந்து விட்டிருக்கிறார். எட்ட இருப்பினும் உங்களால் ஈர்க்கப்பட்டுக் காதலால் தன்னையே இழந்து தவித்துக் கொண்டு இருக்கிறார்!"*

*"விந்தை! கண்டதும் காதலா? நடைமுறையில் இயலக் கூடியது தானா?"*

*"ஏன் கூடாது? இல்லாமலா எம் தலைவி இன்று இன்னலுக்கு இலக்காகி இருக்கிறார்?"*

*"நன்று! நன்று! உங்கள் தேவியின் உண்மை நிலைதான் என்ன?"*

'சுடர்சினம் தணிந்து குன்றம் சேர,
நிறைபறைக் குருகினம் விசும்புகந்து ஒழுக,
எல்லை பையைக் கழிப்பி முல்லை
அரும்புவாய் அவிழும் பெரும்புல் மாலை
இன்றும் வருவது ஆயின் நன்றும்
அறியேன் வாழி தோழி அறியேன்
ஞெமைஓங்கு உயர்வரை இமையத்து உச்சி
வாஅன் இழிதரும் வயங்குவெள் அருவிக்
கங்கையம் பேர்யாற்றுக் கரையிறந் திழித்தருஞ்
சிறையடு கடும்புனல் அன்னவென்
நிறையடு காமம் நீங்கு மாறே.'

*'உங்கள் மீது கொண்ட காதல் பெருக்கும் கூட, உங்கள் நாட்டின் இமயத்திலிருந்து விழுந்து பெருகும் உங்கள் பேரியாறு கங்கையைப் போன்றதென்று சொல்வாளாகில் அக்காதலின் திறத்தை நீங்கள் அறிந்து கொண்டு எம் அரசியை மணக்க முன் வர வேண்டும்."*

“தளபதியாரே! உங்கள் தலைவியின் நிலை அறிந்தோம். யாமும் அவள் மீது காதலுற்றோம். வெற்றி அன்றி வேறெதும் காணாத உம் தேவியின் சிறப்பைப் பல்லோரும் பலப்படப் பாராட்ட முன்னரே கேட்டு மகிழ்ந்தவன் நான். அந்த மகிழ்வின் உந்துதலால் பாஞ்சால நாட்டிற்கே வந்து உங்கள் இளவரசியைத் தொலைவில் இருந்து கண்டு களித்தேன்; கண்ட அக்கணமே அவர் மீது காதலுங் கொண்டேன். யாரும் யாரிடத்தும் காதல் கொள்ளலாம்; ஆனால் கை கூடக் கூடுமோ? சிற்றரசனாகிய நான், பேரரசிக்குரிய பெருமை உடைய உம் தலைவிக்குக் காதலன் ஆக - கணவன் ஆக முடியுமா என்ற ஐயமே என்னை மறைந்து வாழத் தூண்டியது; நன்று.”

“மன்னா, உம் காதலை யாமும் அறிவோம்”

“அஃதெப்படி?”

“ஆம்! யாம் இங்கு வந்தபோது எம்முன் நீங்களே வந்து தோன்றினீர்கள். உள்ளத்தின் காதலே உங்கள் கள்ள மறைவிடத்தை விட்டு நீங்கச் செய்தது. மேலும், என் முகத்தில் ஆவல் தோன்றும்படியாக்கிக் கொண்டு தேடினேன். என்னால் இன்னல் வராது என்றும் யாம் இழந்ததைத் தேடும் முக பாவங் காட்டியதாலும் எம்முன் நீங்கள் அச்சமின்றி வந்தீர்கள். சரிதானே”.

“ஒரு படைத் தளபதிக்குரிய வீரத்தோடும் அறிவோடும் ஒரு தோழிக்குரிய அன்புடனும் ஆதங்கத்துடனும் நீங்கள் வந்திருப்பது விந்தையே அல்ல? நல்லது. நீங்கள் நாடு திரும்பிய பின், சில நாட்களுக்குள் உங்களை நாடி நானே வருவேன். உங்கள் தோழியின் நிலைமையை நீங்கள் தான் தேற்றி மாற்றிட வேண்டும்”.

“ஒரு முறை நீங்கள் இருவரும் நேரில் சந்தித்து அன்பைப் பரிமாறிக் கொள்ளலாமே. அஃது இருவருடைய நலனுக்கும் இனியது”.

“அவ்வாறானால் நாளையே இதே இடத்தில் நான் காத்து இருப்பேன்; உங்கள் தேவி சந்திப்பின் இப்பிறவி பெற்ற பயனைப் பெற்றவன் ஆவேன்!”

“நன்றி மன்னா! வருகிறேன். ஆனால், ஒரு கோரிக்கை. வீரமும் காதலும் தமிழர்க்கு இரு கண்கள் போன்றவை. எம் தேவி கயல்விழி, வீரத்தின் விளைநிலம்; வெற்றியைத் தவிர வேறெதையும் விளைவித்து அறியாதவர். இப்போதே காதல் என்ற வித்து விதைக்கப் பட்டுள்ளது; விளைவது இன்பமாக இருக்க வேண்டும்; வேதனையின் நிழல்கூட விழக்கூடாது. அவர் அகத்திலே, உங்களால் சிறு குறை ஏற்படினும், மாபெரும் குறிக்கோளுடன் போர்ப் பயணம் புறப்பட்டிருக்கும் எம் தேவியின் மன நிலை மாறிவிடக்கூடும் என்று அஞ்சுகிறோம். எக்குறையும் என்றும் இராது நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். இதுவே யாம் உங்களிடம் கோரும் வாக்குறுதி.”

சோமனாதித்தன் முகம் மலர்ந்து முதன் முதலாகப் புன்னகை புரிந்தான்.

“அவ்வாறே வாக்களிக்கிறோம் தளபதியாரே”.

# காதற் புறாக்கள்

பனிப் படர்ந்த மலைச் சாரல். தண்ணென்ற குளிர்க் காற்று. மலர் மணம் வீசும் மரங்களடர்ந்த பொழில்.

குளிர், குளிர், குளிர்! எங்கும் குளிர்!

ஊர்வன, பறப்பன, ஓடுவ அனைத்தும் தத்தம் உறவோடு ஒடுங்கி விட்டன. அமைதியான அந்தச் சூழல். ஆனால், அவள்?

கயல்விழி அமைதி இழந்து அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தாள். வெளியே தாங்கொணாக் குளிர்; ஆனால், அவளோ உள்ளும் புறமும் வெம்மையால் வெந்து கொண்டிருந்தாள். அவள் விடும் மூச்சு வெண்புகையாய் வெம்மையை வெளியேற்றியது.

வந்து எத்தனை நேரம் ஆகிறது! இன்னும் வரக் காணோம். காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலையில் மலர்ந்து துயருழத்தும் இந்தக் காம நோய் எனக்கு மட்டும் தானா? அவருக்கு இல்லையா? தன்னந் தனியளாய்த் தவிக்கிறேனே, இந்தத் தவிப்புப் புரியாதவரா? இல்லை, புரிந்து கொண்டே புலம்பட்டும் அவளென்று மறைந்திருந்து பார்த்து மகிழ்வு கொள்கிறாரா?

ஒரு வேளை நான் கொண்டது ஒருதலைக் காதலாக இருக்கக் கூடுமோ? இல்லை, இல்லை; இருக்க இயலாது. அவர் என்னை முன்னரே பாஞ்சாலத்தில் கண்டு

காதலுற்றதாக வேல்விழியிடம் சொல்லியிருக்கிறாரே, அது பொய்யா? காதல் கொண்டது உண்மை என்றால், இத்தனை நேரம் காத்திருக்க வைப்பதேன்?

கயல்விழி அமைதி இழந்து தவித்தாள். அவள் ஆணைக்கு அடிபணிய ஆயிரம் பேர் காத்திருக்கின்றனர்; ஆனால், அவளோ ஒரே ஒரு முறை பார்த்து உள்ளம் இழந்துவிட்ட ஒருவனுக்காகக் காத்திருக்கிறாள்! அவனிடம் அவள் பேசியதும் இல்லை. இந்தக் காதல் இத்துணை இயல்பானதா?

கபாடபுரம் எங்கே? கயிலாய மலை எங்கே? இடையே எத்தனை, எத்தனை காத தூர இடைவெளி! இரு வேறு துருவங்கள்! எனினும் ஈரிடத்து உள்ளங்களும் இணைய நேர்ந்த இயற்கையின் நியதிதான் என்னே!

எண்ணிப் பார்க்க இதயம் குளிர்ந்தது; எனவே முகமும் மலர்ந்தது.

மூப்பு பிணி சாக்காடு என்றும் இந்த உடலுக்கு நிச்சயம். நிற்கும் புகழ் ஒன்றே; நில்லாதது இளமை. இந்த இளமையில் எழுகின்ற காம உணர்ச்சிகள்தாம் எத்துணை இன்பம் பயக்கின்றன. எண்ணும்போதே இத்துணை இன்பம் என்றால், இணைய எழும் இன்பத்திற்கு ஈடும் இருக்க முடியுமா?

விடை அறியாது கண்களை மூடி வியப்பில் ஆழ்ந்தாள்.

காதல் என்பது என்ன? மணியின் கண் ஒளி, மலரின் கண் மணம், சந்தனத்தில் தட்பம் எப்படி அமைந்துள்ளன; அது போன்றே, காதலும் ஆண் பெண் இருவரது உள்ளத்தின்கண் இருந்து எழுகின்ற ஒரு பேரின்ப வெள்ளமாகும். அதை உற்று உணரலாம். இப்படி இருந்தது என்று யாருக்கும் யாரும் எடுத்து இயம்ப இயலாது.

மூச்சு சட்டென்று நின்றது. கயல்விழி ஊன்றிக் கவனித்தாள்.

என்ன ஓசை அது? யாரோ வருகின்றனரா? அவரா? அவர் தானா?

கயல்விழி அசையவில்லை. அடித்து வைத்த கற்சிலைபோல் அப்படியே இருந்தாள். மூச்சு விட்டால் முன்பக்கம் எழுந்து தாழ்வது தன் தாளாக் காதலைக் காட்டி விடுமே! அடக்கிக் கொண்டாள்.

அவர் தான்; அவரே தான்! அருகே வந்து விட்டார்; இதோ பின்புறம் நிற்கிறார். திரும்பக் கூடாது. என்ன தான் அவர் செய்கிறார்? பார்ப்போம்.

அந்தக் குளிர்ச் சூழலில் உடல் வியர்த்தது. இதயமோ விரைந்து இயங்கியது. என்ன நடக்கும்? என்ன செய்யப் போகிறார்? எதிர்பார்ப்பு உடலைச் சிலிர்க்க வைத்தது.

மெல்ல விரல்கள் முகத்தில் பட்டன. மேனி குலுங்கியது. விரல்கள் விரிந்து அவள் விழிகளை மூடின. விளையாட்டா இது? விண்ணில் பறந்தாள் கயல்விழி.

கண்களை மூடிய விரல்களின் மென்மை கயல்விழியை வியப்பில் ஆழ்த்தியது. அவருடைய விரல்களா இவை? இத்துணை மென்மையா? பெண்ணின் விரல்களினும் மென்மையா? ஒரு வேளை, அவர் இல்லையோ!

கலக்கம் அவள் நெஞ்சில் எழுந்தது. வேல்விழிதான் தன்னோடு விளையாடுகிறாளா? வருவார் அவரென்று வழி அமைத்துத் தந்தவள், அவர் வராததால் இங்கு வந்து தன்னோடு வம்பு செய்கிறாளா? இருக்காதே!

சட்டென்று திரும்பினாள். அவன் தான் நின்றிருந்தான். கயல்விழியின் கண்கள் விரிந்தன; கவலைகள் கலைந்தன. கண்கள் தரையை நாடின.

இமய வேந்தன் சோமனாதித்தன் இன்னகை கொண்டான்.

வாளை அவள் கையில் எடுத்தால் இந்த வையகமே நடுங்கும். ஆனால், இன்றோ அவன் முன் நடுங்கி நின்றாள்; நாணத்தால் நேருக்கு நேர் பார்க்கும் திறனற்றுத் தரையைப் பார்த்தாள். இதுதான் காதலா?

"தேவி!"

யாழினும் இனிதாய் அவன் குரல் அவள் இதயத்தை அடைந்தது. ஏறிட்டுப் பார்த்தாள் கயல்விழி. எல்லாமே அவளுக்கு இப்போது புரிந்தது. தன்னை மறந்தாள்; தன் தகுதியை மறந்தாள். இனி, எல்லாம் அவனே என்ற எண்ணத்திற்கு ஆட்பட்டாள்.

"தேவி? இப்படி அமர்வோமா?"

அவள் தோளைத் தொட்டு அணைத்தபடி அழைத்தான். எந்த எதிர்ப்பும் இன்றி அவள் கால்கள் அவன் இழுப்பிற்கு ஏற்ப இசைந்து அசைந்தன.

அவள் இவ்வுலகத்தில்தான் இருக்கிறாளா? எங்கோ மிதந்து செல்கின்ற இன்னுணர்வு ஒன்றே கயல்விழியை அப்போது இயக்கிக் கொண்டிருந்தது.

அமைதி! அமைதி! எங்கும் அமைதி! அமர்ந்த அவள் அவனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ஏன்? அவளைத் தடுப்பது என்ன? நாணமா? அவளுக்கா? ஆயிரக் கணக்கான படை மறவர்களோடு அணிவகுத்துப் பல களங்களில் பகைவரைக் கணக்கின்றிக் கொன்று குவித்த அவளுக்கா ஓர் ஆணின் முகத்தை ஏறெடுத்துப் பார்க்க வெட்கம்?

எண்ணிப் பார்க்க உள்ளம் சிரித்தது; புறத்தே அவள் இதழ்களில் புன்னகை விரிந்தது; கன்னங்களில் செழுமை படர்ந்தது.

அந்த அழகு ஒழுகும் முகத்தையே பார்த்துக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்த சோமனாதித்தன், அவளிடம் நிகழ்ந்த மாற்றத்தைக் கண்டு நிலை இழந்து போனான்.

அடடா! என்ன அழகு, என்ன அழகு! ஈரம் படர இதழ்களிலே தோன்றும் இள நகை என்னென்னவோ செய்கிறதே! கன்னங்களில் உண்டாகும் குமிழ்ச் சிரிப்பு நெஞ்சைக் காயப்படுத்துகிறதே! சிறு மாற்றமே சிந்தையைச் சீரழிக்குமானால், முகம் தூக்கிப் பார்த்து முறுவலித்தால் என்னாவது?

'தேவி, என்ன சிரிப்பு? நான் அறிந்து கொள்ளலாமா?"

கயல்விழி ஏறெடுத்து அவனைக் கண்டாள். கொண்ட பெயருக்கு ஏற்ப அவளின் கெண்டை விழிகள் பிறழ்ந்தன; இமைகள் படபடத்தன. கண்கள் இமைக்காது அவள் கண்களைச் சோமனாதித்தன் எதிர்த்து நோக்கினான்.

இந்தக் கண்களில்தாம் எத்துணை ஈர்ப்புச் சக்தி! அன்பும் அருளும் ஒருங்கே அமைந்து ஒளிர்கின்ற பாங்கு உயிரையே உண்கிறதே. இந்த எழிலரசிக்காகவோ இத்தனை ஆண்டுகள் தான் ஒற்றைத் தனி மரமாய் ஒன்றிலும் பற்றற்றுத் தவவேடங் கொண்டிருந்தது? பெறற்கரும் பேறன்றோ இந்தப் பெண்ணின் மணி! இவளைப் பெற இன்னும் எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் தவங்கிடந்து காத்திருக்கலாமே.

தன்னையே உண்டுவிடுவான் போல் வைத்த கண்கள் அசையாது பார்த்துக் கொண்டிருந்தவனைக் காணக் கயல்விழிக்குக் கரையிலா மகிழ்ச்சி. இத்துணை ஆசை இவனுக்கு இருக்கும் என்று அவள் எண்ணிப் பார்த்தவள் இல்லை. ஆசைக்கு அளவில்லை என்பது எவ்வளவு உண்மை!

"ஐயா, போதும் பார்த்தது".

சோமனாதித்தன் மெல்லச் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

"பார்த்தது போதும் என்றீர். மேலே என்ன செய்யலாம் என்று எண்ணிப் பார்த்தேன்; தானாகவே சிரிப்பு வந்தது".

"அப்படி என்ன எண்ணினீர்? நான் அறிந்து கொள்ளலாமா?"

சோமனாதித்தன் சொல்லத் தயங்கினான். கயல்விழியின் கண்கள் விடை வேண்டி அவனைக் கெஞ்சின.

"அழகெலாம் ஒன்றாய் இணைந்த ஓர் அழகுச் சிலையாக அருகே அமர்ந்திருக்கும் உங்களை, ஆரத் தழுவி ஈர இதழ்களில் இன்முத்தங்களைச் சொரிந்து சேரக் கூடின் பிறந்த பயனைப் பெற்றவன் ஆக மாட்டேனா? சிந்தித்தேன்; சிரிப்பு வந்தது."

கயல்விழி நாணித் தலை குனிந்தாள். உடல் மெல்ல நடுங்கியது. பொல்லாதவர் இவர்; பொறுமை இல்லாதவர். கண்டதும் காதல், சரி; அதற்காக முதல் சந்திப்பிலேயே முயக்கமா? முறைதானா?

கயல்விழி மெல்ல நெளிந்தாள்; பின்னர் மொழிந்தாள்.

"உங்கள் சிந்தனை சரி . ."

அவன் அவசரமாய்க் குறுக்கிட்டுப் பேசியபடியே கயல்விழியை இழுத்து அணைத்தாள்.

"நான் நினைத்தது சரி என்று ஒப்புக் கொள்கிறாயா?"

கயல்விழி அவன் அணைப்பை விரும்பினாலும் கைகளால் தடுத்து விலக்கினாள்.

"பொறும், பொறும். நான் கேட்க வந்தது என்னவென்றால், உங்கள் நினைப்புக்கும் சிரிப்புக்கும் என்ன தொடர்பு என்பதே; எங்கே? சொல்லுங்கள்."

சோமனாதித்தன் அவளிரு கைகளையும் தன் கைகளிலே கொண்டான்.

"தேவி, நீங்கள் மிகச் சக்தி வாய்ந்த பெரும்படைக்குத் தலைமை தாங்கி இங்கு வந்திருக்கிறீர்கள். தமிழகத்தின் தன்னேர் இல்லாத பாண்டிய குலத்து இளவரசி நீங்கள். குமரி முதல் இமயம் வரை உங்கள் படை எடுப்பால் தோல்வியுற்ற பகை மன்னர்கள் பலர்; பணிந்து உங்கள் தலைமையை ஏற்ற. பார்வேந்தர்கள் பலர். பகைவர்கள் இடையே பவனிவரும் உங்களுக்குப் பாதுகாப்பு என்பது நீங்கள் அணியும் உள்ளாடை போன்றது; உங்களை விட்டு ஒருபோதும் பிரியாது.'

கயல்விழி குழம்பினாள். அவன் பேச்சு எதுவும் அவளுக்குப் புரியவில்லை. சிரித்தது எதற்கு என்று கேட்டால் எதை எதையோ விரித்துப் பேசுகிறானே!. வியந்தாள் அவள்.

"என்ன சொல்ல வருகிறீர்? புரியும்படி சொல்லுங்கள்."

சோமனாதித்தன் சிரித்தபடி சொன்னான்.

“சொல்கிறேன். உங்களைக் கட்டி அணைத்து முத்தமிட என் கருத்தும் கைகளும் துடிக்கின்றன; ஆனால் அப்படிச் செய்ய மாட்டேன். ஏன் தெரியுமா? நம் ஒவ்வொரு அசைவையும் ஓராயிரம் கண்கள் மறைவிலிருந்து கவனித்து வருகின்றன. நம் உள்ளார்ந்த காதல் உறவு வெளி உலகிற்குத் தெரிவதை நான் ஒப்பேன். பாதுகாப்புக் கருதி உங்கள் காவலர் பலர் வழியெங்கும் ஒளிந்திருந்து கவனித்து வருவதை நான் வரும்போது கவனித்துக் கொண்டுதான் வந்தேன். அதனால்தான், என்ன தான் உங்களை அணைத்து மகிழ ஆசைப்பட்டாலும், அஃது அயலார் கண்களுக்கு விருந்தாகி விடும்; ஆகவே அது கூடாது என்று சிரித்தேன்.”

கயல்விழி கலகலவென்று மனம்விட்டுச் சிரித்தாள். அப்படிச் சிரித்து எத்தனை ஆண்டுகள் ஆகி இருக்கும்? அவளுக்கு நினைவிருக்கவில்லை. அன்றே பெண்மையின் உண்மைத் தன்மையை முதன் முதலாக உணர்ந்தாள்; உவகை கொண்டாள்.

“ஐயா, அப்படியாயின் நம் உறவு? கதிரவனைக் கண்ட பனிபோல் காணாமற் கழிவது தானா?”

“தேவி, கவலை ஏன்? அரச குடும்பத்தினர் காதல் கொண்டால், இப்படிப்பட்ட இடர்கள் இருக்கத்தாம் செய்யும். இணைந்த ஈருள்ளங்கள் ஈருடல் ஒருடலாய் இணைய வழிகள் இல்லாமலா போய் விட்டன?”

“அன்பரே, சொல்லுங்கள்; என்னால் உங்களைப் பிரிந்து இனியும் இருக்க இயலாது. நாம் ஒன்றாகும் வழியினை உரையுங்கள்.”

“அவசரம் ஏன்? அமைதியாக இருங்கள். போர், போர் என்று பொங்கி எங்கும் போரிட்டது போதும்; புறப்பட்டு உங்கள் நாட்டிற்குப் போய்ச் சேருங்கள். நீங்கள் சேர்ந்த சில நாட்களுக்குள், நான் அங்கே வருவேன்; உங்களை முறைப்படி மணப்பேன்.”

மகிழ்ச்சியால் கயல்விழி மலர்ந்தாள்.

“உண்மையாகவா?”

“உறுதியாக! உயிரை விட்டு உடல் தனித்து இயங்க முடியுமா? என் உயிரே நீங்கள்தான். ஓடு நீர்வழி ஓடும் துரும்பென உங்களை நாடி ஒருபொழுதும் தங்காது தொடர்ந்து வந்து சேருவேன். ஐயம் சிறிதும் வேண்டாம். இது நிச்சயம்; நம்புங்கள்.”

“நம்புகிறேன்.”

அருகசைந்து அவனை இறுக அணைத்துக் கொண்டாள் கயல்விழி. இருண்டு கறுத்த மேகம் விரைந்து நகர்ந்து வெண்ணிலவை மூடி மறைத்தது. எங்கும் இருள்! அவன் அவளுடலை ஆரத் தழுவி அளவிடற்கரிய இன்ப உணர்வுகளை அடைந்தான்; அவளுக்கு அளித்தான். ஈர இதழ்களில் தன் திறந்த இதழ்களைச் சேர்த்தான்; இன்னமுதம் அருந்தினான்.

கயல்விழி தன் கண்களை இறுக மூடிக் கொண்டாள். உடலும் உள்ளமும் ஒருங்கே நடுங்கின; உதறின. அவன் கைகள் அவள் உடலிலே அத்துமீறி அங்குமிங்கும் படிந்து அல்லல் அளித்தன; ஆனாலும், அந்த அல்லல் அவளுக்கு அளப்பறிய ஆனந்தத்தையே அளித்தது.

அந்த இருள் அப்படியே தொடர்ந்து நீடிக்கக் கூடாதா? ஏங்கின இருவர் உள்ளங்களும்!

# காசி நகர்

கங்கை நதிக்கரையில் அமைந்திருந்த காசி மாநகரில் மாபெரும் வரவேற்பு கயல்விழிக்குக் காத்திருந்தது!

வங்க மன்னன் கங்கசாரன் கீழ் அடிமை அரசர்களாய் அல்லற்பட்டுக் கொண்டிருந்த வடபுலத்துச் சிற்றரசர்கள், தங்கள் மீட்சிக்குக் கயல்விழியின் வரவிற்காகக் காத்துக் கொண்டிருந்தனர். சென்ற இடம் எங்கும் வென்று சிறப்புற்ற கயல்விழிக்குக் கங்கசாரன் ஒரு சிறு துரும்பு என்று எண்ணினர்; வெற்றி பெறப் போகும் அவர் தங்களை வேற்றாராகக் கருதார்; வேந்தர்களாக மதித்து நட்பு கொள்வார் என்று நம்பினர்.

வடபுலத்து மன்னர்கள் எல்லாம் ஒன்று கூடி வரவேற்றனர். தங்க அரியணையில் கயல்விழியை அமர்த்தி மணிமுடி சூட்டி ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தனர்.

அன்புப் பெருக்கோடு அருட்பார்வையும் சேர்த்து அந்த மன்னர்களைப் பாராட்டி, "எமக்கு நீங்கள் காட்டிய அன்பிற்கு நன்றி. அவரவர் நாட்டை அந்தந்த மன்னர்களே ஆளட்டும். பெரும் பொருளும் திரையாகக் கொடுக்க வேண்டாம். ஆண்டுக்கு ஒரு நாள் எம் அரசிற்காகும் செலவை நீங்கள் தந்தால் போதும். அதுவே நமது பிணைப்பாக அமையட்டும்" எனக் கூறினாள்.

கப்பம் என்ற முறையில் பெரும்பொருள் கேட்காமல் அவள் காட்டிய பரந்த கருணை மற்றும் அருட்பார்வையையும் போற்றி அவளை 'அருள்விழித்தேவி' என்ற பொருள் விளங்க 'விசாலாட்சி' எனப் போற்றினர். அதுவே அவளது அருளாட்சி என்னும் பொருள் தரலாயிற்று. அவளைத் தெய்வத்திற்கு இணையாகப் போற்றினர். எல்லோரும் வழியனுப்பத் தன் பயணத்தைத் தொடர்ந்தாள்.

# வங்கத்தை வென்ற மங்கை

வளம் மிகுந்த பகுதியாதலின், தமிழகத்தை விடச் செழிப்பு வாய்ந்த நிலமாகப் பல்வகைப் பயிரினங்கள் விளைவதால் செல்வச் செழிப்பில் திளைத்திருந்தது அந்நாடு. அதுதான் வங்க நாடு.

வங்க நாட்டு வேந்தன் கங்கசாரன் தனக்கு நிகர் எவரும் இல்லை என்று இறுமாந்திருந்ததில் வியப்பேதும் இல்லை. செல்வத்தால் ஆகாதது எது?

பாதுகாப்பிற்குப் பெரும் படை, படை வீரர்களுக்கு நல்ல ஊதியம், சிறந்த போர்ப் பயிற்சி. எனவே வங்க நாட்டை நெருங்க எவரும் பயந்து ஒதுங்கியதோடு அவ்வரசனுக்கு அடிபணிந்தும் கப்பம் செலுத்தியும் வாழ்ந்து வந்தார்கள்.

செல்வச் செழிப்பு மிகுந்ததால் அவனது இறுமாப்பும் அளவு மீறியது. அண்டை நாட்டு மன்னர்கள் யாரும் தன்னை எதிர்க்க முடியாது என்று உறுதியாகவே இருந்தான். ஆனால், அவன் தென்திசையிலிருந்து ஒரு பெண் புயல் வரும், வந்து தன்னைத் தாக்கும் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை.

வங்க தேச எல்லைக்கு வந்துவிட்ட கயல்விழி நட்புக்கரம் நீட்டினாள். அவன் அதை அலட்சியப்படுத்தியதோடு, கேவலம் ஒரு பெண்ணரசியோடு இணையாக எண்ணப்படுவதா என்று வெறுத்தான். தனக்கும் வீரம், புகழ், செல்வம், படைபலம், இவற்றோடு சற்றும் ஒப்பிடக்கூட முடியாத எங்கோ தெற்கிலிருந்து வந்த சிறு படைத்தலைவிக்கும் நட்பா? சிரித்தான்; சீறினான்.

“அவளுடைய நட்பு எமக்குத் தேவையில்லை. அவள் வந்த வழி பார்த்துச் செல்லலாம்.”

அலட்சியத்தோடு பதில் அளித்ததைக் கேட்டுக் கயல்விழி புன்னகைத்தாள்.

“சரி, வங்க மன்னன் என்னை எதிரியாகவாவது ஏற்றுக் கொள்வானா?”

வினா, தூதுவன் மூலம் மீண்டும் விரைந்தது.

“என்ன? என்ன? எதிரியாகவா? எனக்கு எதிரியாகவா? அவளுக்குப் பித்தம் பிடித்துவிட்டதோ? சுற்றுப் புறத்திலுள்ள பதினைந்து நாடுகள் எனக்கு அடிமை. ஏதோ சுற்றுப் பயணம் வந்தோமாம், பார்தோமாம் என்று போகச் சொல். எதிரியாக நாம் அவளை ஏற்றால், அவள் நம்மை போருக்கு அழைக்கிறாள் என்றுதானே பொருள்? பெண்ணாயிற்றே என்று சற்று யோசித்தேன். நீ போய்ச் சொல் அவளிடம், நாம் அவளை எதிரியாக ஏற்றுக் கொண்டுவிட்டோம். எப்போது போரிடலாம்? எங்கே போரிடலாம்? என்று கேள்.”

“வங்கத்துச் சிங்கத்தை அதன் கல்லளையிலேயே எதிர்ப்போம்” என்று, தன் வீரர்களுக்கு ஊக்க உரை நிகழ்த்தினாள்.

வழியெங்கும் பல நாடுகள் போருக்கு வராமல் சமாதானமே செய்து கொண்டிருந்ததால் வீரர்களின் தோள்கள் திணவெடுத்திருந்தன. போர் என்ற முழக்கத்தைக் கேட்டதும் துள்ளிக் குதித்து “வெற்றித் தாய்க்கு வணக்கம்” எனக் கூவி மகிழ்ந்தார்கள்.

வங்க மன்னன் கங்கசாரன் - “பந்தர மகுட வீரமகா கங்கசாரன்” என்று பட்டம் சூட்டிக் கொண்டவன்.

“சேனாபதி! வீரர்களே! எதிரிப்படை நம் இடத்தில் வந்து நம்மோடு போரிடுவதாகச் செய்தி வந்திருக்கிறது. அவர்கள் படை நம் ஆழநீர்க் கங்கையைக் கடக்கக் குறைந்தது ஐந்து நாட்கள் ஆகும். அவர்களை ஆற்றிலேயே மடக்கிப் போரிட்டால் வெகு எளிதாக வென்று விடலாம். நீரின் மீது நின்று போரிட அவர்களுக்குப் பயிற்சி இருக்க வாய்ப்பில்லை. எனவே, நாம் படைகளைத் திரட்டி நாளை மறுநாள் கங்கைக் கரையில் எதிரிகளை இறங்கக்கூட விடாமல் தடுத்து ஆற்றிலேயே சமாதி செய்திட, வீரர்கள் பேராயத்தமாகிப் புறப்பட ஆணையிடுங்கள். நான் படையை முன்னின்று நடத்திடக் காலையில் வந்து சேர்வேன்”.

அன்று இரவு, என்றும் இல்லாத விதமாக வானத்தில் கார் மேகங்கள் சூழ்ந்தன. எங்கும் ஒரே இருள். எதிரில் வருவோர் கூடத் தெரியாத மையிருட்டு. கங்கசாரன் சிரித்துக் கொண்டான்.

“மேலும் ஒரு நாள் அவகாசம் கூட எதிரிக்குக் கொடுக்கலாம் போலிருக்கிறதே. நன்று. நாம் ஒரு நாள் கழித்துச் செல்லலாம். நம் வீரர்கள் இருட்டில் தடுமாற வேண்டாம்” என்றெண்ணி அதைத் தளபதிக்குத் தெரிவித்துவிட்டான்.

மூன்று முறை வங்க மன்னன் அவைக்குத் தூதுவனாகச் சென்ற “அழல்கண்ணன்” ஒரு துணைத் தளபதி. பெயருக்கு ஏற்ப அவன் கண்கள் கனன்று சிவந்தே இருக்கும்.

“மதுவருந்திச் சிவந்த கண்களுடன் காட்சியளிக்கும் இவன் தூதுவனா? பேசுவானா? பிதற்றுவானா?” என்று கிசுகிசுத்தான் கங்கசாரன்.

அருகில் இருந்தோர் நகைத்தனர். ஆனால், அவன் “அழற்கண்ணன்” மட்டுமல்லன் - “சுழற்கண்ணனா”கவும்

இருந்தான். கண்கள் சுழன்று கொண்டே இருக்கும். அவன் பார்வை சென்ற இடத்தில் என்னென்ன, யார் யார், எப்படி எப்படி, எங்கெங்கே என்பனவற்றை மனதிற்குள் ஆழப்பதித்துக் கொண்டு விடுவான். அழல்கண்ணன் என்ற பெயரைவிட, அவனை எல்லோரும் சுழல்கண்ணன் என்றே அழைப்பர் என்பதே அவன் தீர்க்கமான பார்வையின் சிறப்பைக் கூறும். அவன் வந்து இளவரசி கயல்விழியிடம் தான் கண்டவற்றை யெல்லாம் சொன்னான். அப்போதே கயல்விழி வியூகம் வகுத்துவிட்டாள்.

கங்கையின் இருபுறமும் போக்குவரத்துக் கப்பல்கள் சென்ற வண்ணம் இருந்தன. தானிய மூட்டைகள், துணிகள், கட்டைகள் இதுபோல் கப்பலின் கொள்ளளவு முழுவதும் ஏற்றிக் கொண்டும் வந்து கொண்டும் இருந்தன. நாவாய்களை வாங்கி ஆற்றைக் கடக்கலாம் என்றாலோ அத்தனையும் வங்க அரசின் ஆதிக்கத்தில் இருப்பன. வேறு சூது செய்யத் திட்டமிட்டாள்.

கப்பல்களை அவ்விடத்திலேயே நங்கூரம் பாய்ச்சி நிற்கும்படி வாணிபத் தலைவன் மூலம் ஆணையிட்டாள். அக்கரையிற் சூழ்ந்திருந்த காரிருள் ஆற்றுப்பக்கம் வந்தால் கப்பல்கள் திசை தடுமாறி, நீரோட்டத்தோடு கலந்து, கடற்கரை எங்கிருக்கிறது என்று தேடிச் சென்று விடும். இந்தக் காரணம் சரியாகவே இருந்ததால் நாவாய்கள் ஆங்காங்கு நிறுத்தப்பட்டன. பாண்டிய வீரர்கள் ஒவ்வொரு கப்பலையும் அடுத்தடுத்து நிற்கும்படிச் செய்தனர். இரண்டிரண்டு கப்பல்களாகச் சாய்கோடு அமையுமாறும் இடைவெளி மிகக்குறைவாக இருக்குமாறும் செய்தனர்.

இப்படியாக அமைக்கப்பட்டு மறு கரை வரை நிறுத்தினர். வங்க நாட்டு வணிகர்களைக் கப்பலின் பாதுகாப்புக் கருதி இப்படி நிறுத்தியிருப்பதாக நம்ப வைத்தார்கள். இதில் விந்தை என்னவென்றால் இருண்ட

மேகம் கறுத்துப் பூமியை இருண்ட பிரதேசமாக ஆக்கியது உண்மைதான். ஆனால், அஃது ஒரு கல் தொலைவிலேயே நிலை கொண்டுவிட்டது. எனவே கங்கை ஆற்றில் என்ன நடக்கிறதென்று ஒரு கல் தொலைவில் அப்பால் உள்ளவர்களுக்குத் தெரியவில்லை.

வங்க மன்னனும் தன் தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை இவற்றோடு ஒரு சிறிய யானைப் படையையும் அணிவகுத்துக் கங்கைக் கரையை நெருங்கிப் பகைவரைக் கரையிறங்கவிடாமல் தடுத்திடத் துடிதுடித்துக் கொண்டிருந்தான். ஆனால், அந்த இருட்டு, அவனை நதிக்கரையை நோக்கி அசையவிடவில்லை. எல்லோரும் அமைதியாக அன்றிரவு உறங்கினர்.

மறுநாள் வேகமாக வங்கப் படை முன்னேறியது. ஆனால், அங்கே, பாண்டியர் படை கங்கை ஆற்றங்கரையில் அணிவகுத்து நின்றுகொண்டிருந்தது. தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை இருந்தது. யானைப்படை இல்லை.

கங்கசாரன், எதிரிப்படை கங்கையாற்றங்கரையில் அணிவகுத்து நின்றதையும் தன் மாளிகைக்குப் பல முறைத் தூது வந்த அந்தக் அழற்கண்ணன் குதிரையின் மேல் படைகளுக்கு முன்னால் இருப்பதையும் கண்டான். ஆச்சரியப்பட்டு முடிக்கு முன், முன்னால் நின்ற பாண்டியப் படையின் நடுப்பகுதி வீரர்கள், சொல்லி வைத்தாற் போலச் சீரான காலடி அளவுடனும், கால அளவுடனும், பக்கவாட்டில் இருபுறமும் நகர்ந்து வழி அமைத்தனர். அதன் ஊடே தேர் ஒன்று தனக்கு நேராக வருவதைத் தன் தேரில் இருந்த கங்கசாரன் கண்டான்.

அந்தத் தேரில் வருவது யார்?

முழுப்படையும் கடந்து, படைக்கு முன்னால் அழற்கண்ணன் சற்று ஒரு புறமாக ஒதுங்கி நகர்ந்து நிற்க,

வந்து நின்றது தேர். அதில் முழுப்போர்க் கோல உடையணிந்து வீரமே உருவாகப் பெண்மணி ஒருத்தி, எழில் முகத்தில் புன்னகையோடு திரிசூலம் ஏந்தியபடி நின்றதைக் கண்ட வங்க வீரர்கள் அந்தக் கணத்திலேயே அதிர்ந்து போனார்கள்.

கரை புரண்டோடும் கங்கையாற்றை ஓர் இரவுக்குள்ளாகவே கடந்து வந்திருக்கிறாள் என்றால் அவள் சாதாரண வீராங்கனை அல்லள். போர்த் தந்திரத்தையும், போர் புரியும் முறைகளையும் முற்றிலும் அறிந்தவளாகத்தான் இருக்க வேண்டும். அவள் இதழில் பூத்த புன்னகை?

முதன் முறையாகத் தன் இதயத்தில் சற்று அச்சம் தோன்றுவதைக் கங்கசாரன் உணர்ந்தான். ஆனாலும், அடுத்த கணம் தன்னைச் சுதாரித்துக் கொண்டான். படைகள் எதிர் எதிரே நின்றன.

"கங்க சாரா! இறுதியாக நட்புக் கரம் நீட்டுகிறது பாண்டிய நாடு, ஏற்றுக் கொள்; நண்பர்களாக இருப்போம்."

"தென்னகத்துப் பெண்ணே! நீ மாய வேலைகளைக் காட்டி என்னை அச்சுறுத்த எண்ணாதே. இந்த ஆற்றை எந்த மாய சக்தியால் கடந்து வந்தாய் என்று நான் அறியேன். ஆனால், என் படைத் திறம் அறியாமல் "சிங்கத்தின் குகையிலேயே சந்திப்பேன்" என்று நீ சொன்னவாறு, குகைக்குள் தான் நுழைந்திருக்கிறாய். சிங்கத்தை வென்று, குகையை விட்டு நீ வெளியேற முடியாது. அதற்கு இரையாகத் தான் போகிறாய். வாய்ப்புத் தருகிறேன். மண்டியிட்டு வணங்கி மன்னிப்புக் கேட்டுக் கொள்; நீ உயிரோடு உன் நாடு செல்ல அனுமதிக்கிறேன்."

இதுகாறும் அவள் முகத்தில் இழைந்தோடிய புன்னகை மறைந்தது. பற்கள் இறுகின. முகம் அனலாய்ச் சிவந்தது. கண்கள் தீப்பிழம்பாயின. கோர உருவமாகக் காட்சியளித்தாள்.

“மதியற்ற மன்னா, இனி உன் அழிவிலிருந்து உன்னை யாரும் காப்பாற்ற முடியாது. மண்டியிடப்போவது யார் என விரைவில் தெரிந்துவிடும். உம், போர் துவங்கட்டும். வீரர்களே, விரைந்து முன்னேறி எதிரிகளைத் துவம்சம் செய்யுங்கள்” என்றவள், தன் வாளை உயர்த்தி, “வெற்றி நமதே, வெட்டிச் சாயுங்கள் பகைவரை” என்றபடி, பகைவர் படையை ஊடுருவினாள்.

அவள் போர் புரிந்த விதத்தைக் கங்கசாரன் மட்டுமன்று, வேறு யாருமே அதுவரை கண்டிருக்க மாட்டார்கள்.

மோத வரும் எதிரிகளின் எண்ணிக்கைக்கும் தாங்கி வரும் ஆயுதத்திற்கும் ஏற்பத் தன் ஆயுதங்களைக் கணத்தில் மாற்றிக் கொண்டு ஒருவர் கூட தப்ப முடியாமல் மண்ணில் சாய்த்தாள். தலை உருண்டவர்களையும் வேல், அம்பு மார்பில் பாய்ந்து சாய்ந்தவர்களையும் எண்ணிக்கையில் சொல்லவே முடியவில்லை. பலர் வரும் போது சூலாயுதத்தால் முன்னும் பின்னும் இருப்பவர்களைக் குத்திச் சாய்த்தாள். அவள் சூலாயுதம் சுழலும் வேகம் யாரும் பார்த்தறியாதது. சிறு கூட்டமாக வாளைச் சுழற்றி வீசி வீசி வந்த எதிரிகள் வீழ்ந்து மடிந்தனர்.

ஒருவர் கூட அவளை நெருங்க முடியவில்லை. சற்று ஓய்ந்த நேரம் பகைவர் தூரத்தே இருக்கும் போது வில்லெடுத்து அம்புகளை மழையெனப் பொழிந்து மாய்த்தாள்.

எந்த ஆயுதத்தை எப்போது எடுப்பாள், எந்தப் போர் முறையை எப்போது கையாள்வாள் என்று தெரியாமல் திக்பிரமை பிடித்த வங்க வீரர்கள் பின் வாங்கினர். பாண்டியப் படை முன்னேறியது. எதிர்ப்பு வரவரத் தொய்வது போல் இருந்தது.

இதனை உணர்ந்த கங்கசாரன் போர் முனையின் முன்பகுதிக்கு வந்து கயல்விழியின் முன் தன் தேரை நிறுத்தினான். இருவரும் விற்போரில் இறங்கினர். ஊகூம், ஓர் அம்பு கூட அவளை நெருங்கவில்லை.

"போதும் கங்க சாரா! இனித் தனிப் போரில் இறங்குவோம், வா இறங்கி."

ஒரு பெண் தன்னைத் தனிப் போருக்கு அழைப்பதை அவன் அவமானமாக எண்ணினான்.

"சரி வருகிறேன்; உன் உயிரைக் காப்பாற்றிக்கொள்."

இருவரும் தனிப்போர் புரிந்தனர். பலவிதமான ஆயுதங்கள் - மாற்றி மாற்றித் தாக்கினாள். தற்காத்துக் கொள்ளவே அவன் எந்த ஆயுதத்தை எடுப்பது என்று திகைத்தான். வாள் என்றால் வாள், சரி - அதையும் அவள் சுழற்றும் வேகம். அவனால் எதிர்கொள்ள முடியவில்லை. சங்கிலியால் பிணைக்கப்பட்ட முள் குண்டு ஆயுதத்தை அவன் சுழற்றிய போது அதைச் சூலாயுதத்தால் தடுத்து, நேரம் பார்த்துத் தாக்க அந்த முள் குண்டு அவன் மார்பிலேயே தாக்கிவிடச் சற்று இடறினான்.

கயல்விழி மூர்க்கமானாள். தன் சூலாயுதத்தை எடுத்துச் சுழற்ற ஆரம்பித்தாள். கங்கசாரன் எந்த ஆயுதத்தை எடுத்தாலும் அவள் சுழற்சியைத் தடுக்கவோ அவ்வப்போது அவன் உடம்பில் ஆழ்ந்த வெட்டுகள் விழுவதைத் தடுக்கவோ முடியாமல் குருதி வடிவானான்.

துள்ளிக் குதித்துக் குதித்துச் சுழன்ற அவள் சூலாயுதத்தின் அடிப்பாகத்தால் அவன் தலையைத் தாக்கினாள். இடியென இறங்கிய அடி அவனைக் கீழே மல்லாக்கச் சாய்த்தது. ஆவேசத்தின் உச்சியிலிருந்த கயல்விழி அவன் நெஞ்சிலே இடது காலை ஊன்றி அவன் மார்பை நோக்கித் தன் சூலாயுதத்தை இறக்கினாள்.

"தாயே! மன்னித்துவிடு"

போர்க்களமே அதிர அபயக்குரல் எழுப்பினான் கங்கசாரன்.

கயல்விழி, உயர்த்திய சூலத்தைப் பெரும் திறமையுடன் நிறுத்திக் கொண்டாள். குருதியால் நனைந்து முகம் எல்லாம் குருதி வடியச் சிவந்த கண்களுடன் மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்கித் தன்னை அமைதிப்படுத்திக் கொள்ள அவள் சிறிது நேரம் எடுத்துக் கொண்டாள். பின்னர், தன் இடது காலை அவன் மார்பினின்று அகற்றினாள்.

"கங்கசாரா! எழுந்திரு. அழல்கண்ணா, மன்னரைச் சகல மரியாதைகளோடும் அவர் தலைநகருக்கு அழைத்து வாருங்கள். தகுந்த சிகிச்சை அளிக்கப்படட்டும்; முன்போல் குணமடையட்டும். அவர் மகாவீரர்; அவருக்கு எல்லா நன்மையும் விளையட்டும்."

இரு திங்கள் அங்குத் தங்கினாள் கயல்விழி. வங்க நாட்டுக்குட்பட்ட எல்லா நாடுகளும் தம் குடைக் கீழ் வரப் பணித்து அவர்கள் கப்பம் கட்டச் சில விதிகள் செய்து, பின் புறப்பட அணியமானாள்.

"தாயே! ஒரு சந்தேகம், கேட்கலாமா?"

கங்கசாரன் கேட்டான்.

"கேள் மன்னா!"

"யாராலும் எளிதில் கடக்க முடியாத எமது கங்கையாற்றைப் புதியவராகிய நீங்கள் ஒரே நாளில் கடந்து, நான் எதிர்பாராத வகையில் என் எதிர் வந்து நின்றீர்களே, அஃது எப்படி?"

கயல்விழி சிரித்துக் கொண்டே, "அழல்கண்ணா! மன்னரின் ஐயத்தை நீயே தீர்த்து வை".

அழல்கண்ணன், சிறு வரைப்படம் வரைந்து ஆற்றின் குறுக்கே கப்பல்கள் எவ்வாறு நிறுத்தப்பட்டன என்பதைக் காட்டி, "நதியானது அலையின்றி அமைதியாயிருந்தது. நாவாய்கள் சற்று மேடு பள்ளமான பாதைக்கு இணையாக அமைந்தன. எமது வீரர்கள் கரடு முரடான பாதையானாலும் சரி, மலைப்பாதை ஏற்றமானாலும் சரி, நல்ல பயிற்சி பெற்றவர்கள். குதிரைகளும் சரி, தேர்களும் சரி, இந்தச் சிறுசிறு மேடுபள்ளத்தை ஒரு பொருட்டாக மதிக்காமல் விரைந்து பயணித்து இக்கரை வந்து சேர்ந்தன" என்றான்.

"எங்களுக்கு அமைந்த இன்னொரு எதிரி அந்தக் கருமண்டலம்" என்றான் கங்கன்.

"அது நேராவிட்டாலும் ஒருநாள் தான் வேறுபட்டிருக்கும். நிலைமை ஏதும் மாறியிருக்காது."

"வெற்றித் தாயே, நன்றி. ஆணவம் என்றும் வென்றதில்லை. நீங்கள் பலமுறை நீட்டிய நட்புக்கரத்தை உதாசீனப்படுத்தியது எவ்வளவு தவறென்று உணர்கிறேன். உலகில் அனைவரும் போரின்றி இருந்தால் எவ்வளவு சுபீட்சமாயிருக்கும்? போரில் உங்கள் மென்மையான இயல்புக்கு மாறாக கொதித்தெழுந்து கொடுந் தலைவியாகப் பார்த்த போதே நான் தோற்று விட்டேன். அந்த வடிவு என்நெஞ்சில் மறையாது நிற்கிறது. அதே கோலத்தில் உங்களுக்கு ஒரு கோட்டம் நிறுவி, துர்க்கையாக, பத்ரகாளியாக நாங்கள் வழிப்பட அனுமதிக்க வேண்டும்."

மெல்லப் புன்னகைத்தாள் கயல்விழி.

திரும்பும் வழிநெடுக எல்லாம் வங்க மன்னனுக்குக் கட்டுப்பட்ட நாடுகள். ஆகவே, வழியெங்கும் சிறந்த வரவேற்புகள் தாம். கொண்டாட்டங்கள் தாம்.

இறுதியாகக் கயல்விழி வேங்கடம் வந்தடைந்தாள். அந்த மலையின் அழகும் அமைப்பும் வெகுவாக ஈர்த்தன.

மலைகளால் சூழப்பட்ட உயரத்தில் ஒரு சமவெளி. ஆகா! ஒரு படையை இங்கு நிறுத்தி, வடவர் படையைத் தடுக்கலாம்; போர்ப் பயிற்சித் தளமாகவும் அமைக்கலாம்.

வேங்கட மலை அவள் மனக்கண் முன் அப்படியே இருந்தது. பயணம் தெற்கு நோக்கித் தொடர்ந்தது; தணிகை மலையைக் கடந்து காஞ்சி மாநகர் வந்தடைந்தாள்.

# காஞ்சி நகர்

தொண்டை நாட்டு வேந்தன் கயல்விழியை வரவேற்றுக் காஞ்சியிலுள்ள தன் அரண்மனையில் தங்கிச் செல்லுமாறு வேண்ட அவளும் அங்குத் தங்கி மக்களைச் சந்தித்தாள். தம் மக்களை அன்பு கனிந்த பார்வையால் வசீகரித்தாள். அன்புவிழியால் அனைவரையும் ஆட்கொண்டதால் 'காமாட்சி' என்று பெருமிதத்தோடு அழைக்கப்பட்டாள்.

அந்தக் காலகட்டத்தில் இயற்கையை மட்டுமே போற்றிப் பாராட்டி நன்றி தெரிவிக்கும் விதமாக மக்கள் கூடி, விழா எடுத்துக் கொண்டாடுவார்கள். (இன்றும் நாம் பொங்கல் விழா அந்த அடிப்படையில்தானே கொண்டாடுகிறோம்.) இறை வழிபாடோ கோயில்களோ கிடையாது. அதே முறையில் கயல்விழியையும் அவளுடைய வீரத்தையும் வெற்றியையும் போற்றுமுகத்தான் விழாக்கள் எடுக்கப்பட்டன. புத்த சமயமும், சமண சமயமும் ஏற்கப் பட்டு மக்களிடையே பரவி இருந்த காலம் அது.

தெய்வ வழிபாட்டையோ கடவுள் நம்பிக்கையையோ குறிப்பிடாத மதங்கள் அவை. எனவே, அவற்றின் கொள்கைகள் திறந்த மனத்துடன் வாழ்ந்த மக்களால் வெகு எளிதில் எதிர்ப்பில்லாமல் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அடையாளங்களோ வழிபாடுகளோ இல்லாததால் எவ்வளவு விரைவில் ஏற்கப்பட்டதோ அதே காரணங்களாலேயே அவை பிற்காலத்தில் (ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்) மறைந்து போயின.

கொள்கை என்ற நிலை மாறிச் சமயம் என்ற நிலை என்றைக்கு உருவானதோ அப்போதுதான் கயல்விழியும் தெய்வமானாள்.

பாலாற்றைத் தாண்டிப் பின்னர் ஞாயிற்றோன் குன்றம் (இன்றைய திருவண்ணாமலை), பெண்ணையாறு கடந்து ஆரைக்கல் வழியாகச் சென்று, ஆன்பொருனை நதிக்கரையில் அமைந்த சேரரது தலைநகர் கருவூரை அடைந்தாள்.

சேரன் குட்டுவனும் அவன் மகன் பெருஞ்சேரலாதனும் அவளை வரவேற்றுத் தாங்கள் கூறியபடி தலைநகர் கருவூரையும் அதை ஒட்டிய பகுதியையும் அவளிடம் ஒப்படைக்க முன் வந்தனர். தங்களுக்கெனத் துறைமுகப் பட்டினமாம் வஞ்சியில் ஒரு புது தலைநகரை உருவாக்கி வைத்திருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் சோழ மன்னன் தித்தனும் அவனது மகள் சிறுமி ஐயையும், மகன் வெளியனும், மோகூர்ப் பழையனும் (இவன் மோகூர் சிற்றரசனாயிருந்து கொங்கு மன்னனானவன்) கலந்து கொண்டனர்.

மாபெரும் நிலப்பரப்பை வென்ற கயல்விழி, தனக்கு உதவியாக இருந்த சேரனின் தலைநகரை ஏற்க ஒப்பவில்லை. அது சேரரிடமே இருக்கட்டும் என்று கூறிச் சேரன் காட்டிய அன்புக்கும் வாய்மைக்கும் நன்றி கூறி விடை பெற்றாள். (பிற்காலத்தில் சேரர் குடி இரு கிளைகளாக, ஆனால் ஒற்றுமையாக அந்த இரண்டு தலைநகரங்களிலும் இருந்து ஆண்டனர்.)

# மூடமான திருமாறன்

பாண்டியன் திருமாறன் மக்கள் குறையறிய மாறுவேடம் பூண்டு செல்வதும், ஒற்றர்கள் மூலம் மக்கள் நடமாட்டத்தைக் கண் காணித்துத் திருடர் பயம் இல்லாமல் செய்தும், வேந்தனின் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றி வந்தான். அதற்கு வந்தது ஒரு சோதனை.

வழக்கப்படி மாறுவேடமணிந்து நகர்ச் சோதனைக்குச் சென்றவன் ஓரிடத்தில் குதிரையை நிறுத்திவிட்டு, யாரும் கவனிக்காவண்ணம் ஒற்றர்கள் வாழும் தெருவில் சென்று கொண்டிருந்த அவனது கவனத்தைக் கவர்ந்து அந்த வீடு. அஃது அந்தண ஒற்றன் கங்கணரின் வீடு அன்றோ? நடுநிசியில் வீட்டினுள் மங்கலான ஒளி.

ஐயம் மேலிட வீட்டை நெருங்கினான். கதவோரம் நின்று காதுகொடுத்துக் கேட்டான்.

ஓர் ஆணும் பெண்ணும் சிணுங்கலும் சிரிப்புமாகச் சரச நிலையில் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டான். தங்கையிடமிருந்து அவ்வப்போது செய்திக் கொண்டுவரும் கங்கணன், சென்ற பௌர்ணமியன்று தானே திரும்பிச் சென்றான்? இந்த அமாவாசைத் தினத்தன்று இங்கு வரச் சாத்தியமில்லை. அப்படியானால், இந்த ஆண் குரல் யாருடையது? சினம் தலைதூக்கச் சிந்தனை செயல்படாத நிலையில் வீட்டின் கதவைப் படபடவெனத் தட்டினான்.

"யாரது?"

உள்ளிருந்து அதிகாரத் தோரணையில் குரல் வந்தது.

துணுக்குற்றான் திருமாறன். தன் தவற்றை உணர்ந்தான். உரிமை உள்ள ஒருவனே இவ்வாறு கடுமையாகக் கேட்க முடியும். செய்த தவற்றைத் திருத்திட, விரைந்து அடுத்தடுத்த வீடுகளின் கதவுகளைத் தட்டிவிட்டு ஓடினான்.

"யாரது?" - "யாரது?", என்று வீட்டிலுள்ளோர் கதவைத் திறந்து வெளியே வந்து பார்த்தபோது, இருளில் ஓர் உருவம் ஓடிக்கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் குளம்படி ஓசையைக் கேட்டனர்.

மறுநாள், மன்னன் எதிர்பார்த்தபடியே, அந்தணர்கள் கங்கணர் தலைமையில் ஒன்றாகக் கூடி, அவைக்கு வந்தனர். முந்தைய இரவு நடந்த நிகழ்ச்சியைக் கூறி, "இஃது இதுவரை நடந்திராத நிகழ்ச்சியாக இருக்கிறது" என்றனர்.

மன்னன் : கள்வனாக இருக்கலாமோ?

கங்கணர் : கள்வனாக இருந்தால் கதவைத் தட்டுவானா? தவிரவும் இன்றைய சூழ்நிலையில் கள்வர் பயம் இல்லையே, மன்னர் பெருமானே.

மன்னன் : அப்படியாயின் அவர் யாராக இருக்கக் கூடும்?

கங்கணர் : பொருள் திருடும் கள்வனல்லன் அவன். காதல் வசப்பட்டவன், அதுவும் என் மனைவியிடம் மையல் கொண்ட கயவன். இந்த நிகழ்ச்சி சமூக நீதிக்கே கேடு. மன்னர் விரைவில் அக்கள்வனைப் பிடிக்கச் செய்து தண்டிக்க வேண்டும்.

கங்கணரின் மனைவி "ஐயோ!" என்று அலறி "மன்னவரே" என, ஏதோ கூற முயன்றாள்.

கங்கணர், தம்மிடம் ஒற்றன் என்ற முறையில் தனிமையில் சந்தித்திருந்தால் நிலைமையை விளக்கியிருக்கலாம். ஆனால், அவர் மக்கள் முன்னிலையில் பேசியதால், அறிமுகம் இல்லாதவர்போல் பேச வேண்டிய சூழ்நிலையாகிவிட்டது.

கங்கணர் : நிறுத்து. உன் அழுகையாலும் வஞ்சகப் பேச்சாலும் மன்னரையும் மக்களையும் ஏமாற்றி நம்ப வைத்துவிட முடியாது.

மன்னர் : கங்கணரே, அவன் எல்லார் வீட்டுக் கதவுகளையும் தானே தட்டியிருக்கிறான்? அப்படியிருக்க நீர் உம் மனைவியைச் சந்தேகிப்பது எப்படி முறையாகும்?

கங்கணர் : மன்னா, அவன் மிகப் புத்திசாலி. நான் வெளியூர் சென்றிருக்கும்போது அவர்களுக்குள் உறவு ஏற்பட்டிருக்க வேண்டும். அன்று வந்திருப்பேன் என்பதை அறிந்திருக்க மாட்டான். 'யாரது?' என நான் கேட்டதும் எல்லா வீட்டுக் கதவுகளையும் தட்டிக் குழப்ப மேற்படுத்திவிட்டான். அந்தப் பிறன்மனை விழைவோனைக் கண்டுபிடித்து இருவருக்கும் தண்டனை வழங்க வேண்டும்.

திருமாறன் அப்படியே விக்கித்துவிட்டான். தான் அறிவு தடுமாறிச் செய்த செயல் எப்படித் திசைமாறி விட்டது? 'நானும் அவன் மனைவிமேல் ஐயம் கொண்டுதானே கதவைத் தட்டினேன்? என் தவறும் பெரும் தவறல்லவா? அதைத்தானே அந்த அந்தணனும் செய்திருக்கிறான். என் தவறுதலால் ஏதுமறியாப் பெண்ணொருத்தி பழி ஏற்பதா?' சிந்தனையிலிருந்து மீண்டபோது . . . .

ஒரு பெரியவர் : மன்னரே, கங்கணரின் வழக்கு விசாரணைக்கு உட்பட வேண்டியதே இல்லை. விசாரிக்கத் தேவையில்லை. அவனைப் பிடித்தால் உடனடியாகத் தண்டனை கொடுத்துவிடலாம்.

மன்னன் : அவனுக்கு என்ன தண்டணை கொடுக்கலாம்?

முதியவர் : கதவைத் தட்டிய கரத்தை வெட்டி விடலாம்.

எல்லாரும் : ஆம் . . . . ஆம்.

மன்னன் : நன்று, எப்படியும் நாளைக்குள் பிடித்து விடலாம். தண்டனையையும் நிறைவேற்றி விடலாம். நாளை மீண்டும் கூடுவோம். அவை கலையட்டும்.

அன்று மாலை . . .

கங்கணர் திருமாறனிடம் பேசிக்கொண்டிருந்தான். "வேந்தர் பெருமானே, என்னை மன்னிக்க வேண்டும். அதிகாலையில் தங்களைச் சந்தித்துக் கொண்டு வந்த செய்திகளைக் கூறி இருக்க வேண்டும். தங்கள் தங்கை கயல்விழித்தேவியார் வடபுலம் முழுவதும் வென்று, வெற்றிவாகைச் சூடி, வந்து கொண்டிருக்கிறார். இடையே இன்னும் ஓர் இன்பச் செய்தி; இமய மன்னர் சோமனாதித்தரிடம் காதல் கொண்டுவிட்டார். வழியெங்கிலும் வரவேற்பு, விருந்து, பரிசளிப்பு என மக்கள் அன்பு வெள்ளத்தில் திளைத்துக் கொண்டிருக்கிறார். இதனால், அவர் வருகை மேலும் தாமதப்படும். இதைக் கூறிடவே என்னை முன்னதாக அனுப்பி வைத்தார். வந்த இந்த நேரத்தில் குறை கூறும்படி நேரிட்டதற்கு மிகவும் வருந்துகிறேன்."

"கங்கணரே, நீர் மன்னிப்புக் கோரத் தேவையில்லை. எத்தனை மகிழ்ச்சியான செய்திகளைக் கூறியிருக்கிறீர். இதோ எம் பரிசு", எனத் தனது முத்துமாலையைக் கழட்டிக் கொடுத்தான்.

கங்கணர் மகிழ்ந்து, "வாழ்க மன்னன் கொற்றம்." என வாழ்த்தி விடைபெற்றுத் திரும்பினான்.

மறுநாள் . . . .

கூட்டம் நெருக்கியடித்துக் கொண்டு இருந்தது. அவை நிறைந்திருந்தது.

கள்வனையும் அவனுக்கு வழங்க இருக்கிற தண்டனையையும் காண அனைவரும் ஆவலோடு இருந்தனர். திருமாறன் வந்து அரியணையில் அமர்ந்தான்.

"சான்றோர்களே, குடிமக்களே, இன்றைய வழக்கில் குற்றம் புரிந்தவன் ஒருவன். ஆனால், இழைத்த குற்றங்கள் இரண்டு. குடிமக்களின் வீட்டுக் கதவுகளைத் தட்டி அவர்களுக்குக் குழப்பம் விளைவித்தது ஒன்று. மற்றது, கங்கணர் தம் மனையாள் மேல் சந்தேகம் ஏற்படும் வண்ணம் நடந்துக் கொண்டது. முதல் குற்றத்திற்கு விசாரணையே தேவையில்லை என்றும் தட்டிய கரத்தை வெட்டிட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. இப்போது அந்தத் தண்டனையை நிறைவேற்றிவிட்டு அடுத்த வழக்கை விசாரிப்போம். தண்டணையை நிறைவேற்றி விடுவோமா? இதற்கு ஆட்சேபம் செய்பவர் யாரும் உண்டா?."

எங்கும் நிசப்தம். எல்லார் முகத்திலும் குழப்பம். குற்றவாளியையே காணவில்லை; தண்டனையை நிறைவேற்றுவதாவது . . . .?

"உங்கள் மௌனம் சம்மதமென ஏற்று இதோ - தண்டனையை நிறைவேற்றுகிறேன்." எனக் கூறியவன் கண்ணிமைக்கும் நேரத்தில் இடது கையால் தன் உடைவாளை உருவித் தன் வலது கையை மணிக்கட்டுக்கு மேல் முழங்கைக்குக் கீழே வெட்டித் துண்டாக்கினான்.

வெட்டுண்ட கை துள்ளித் துடித்ததை விடக் கூடிநின்ற மக்களின் நெஞ்சத் துடிப்பு ஆ... ஆ.. எனப் பேரொலியாகப் பிரதிபலித்தது. அவையே அதிர்ந்தது.

அதிர்ச்சியிலிருந்து மீண்ட அரண்மனை வைத்தியர் உடனடியாகக் குருதிப்போக்கை நிறுத்திக் கைக்கு மருந்திட்டு ஆறாய்ப் பெருகும் கண்ணீரைத் துடைக்கவும் ஆற்றாமல் கட்டுப்போட்டுக் கொண்டிருந்தார்.

வலியின் வேதனையைச் சிறிதும் வெளிக்காட்டாமல் திருமாறன் மக்களைப் பார்த்து, "அவையோர்களே, நான் தான் அந்தக் குற்றவாளி. இனி அடுத்த வழக்கு தொடரட்டும்" என்றான்.

கங்கணர் துடித்துப்போய், "மன்னவா, இஃது என்ன கொடுமை? குற்றவாளி என்று கூறிக்கொண்டு தண்டனையையும் தாங்களே கொடுத்துக் கொண்டீர்கள். இனி வழக்கு ஏது? ஆனால், இந்த உண்மையை முன்பே கூறாதது ஏன்? . . ஏன்? இனி, நான் என் வாழ்நாள் முழுவதும் தண்டனை பெறாத குற்றவாளியாகவே வாழும் நிலை ஏற்பட்டுவிட்டதே. இனி நான் வாழ்வதே தவறு. தண்டனைக்குரியவன் நான் தான். என்னைக் கொன்று விடுங்கள்" எனக் கதறினார்.

திருமாறன், "முதலிலேயே நான் தான் குற்றவாளி என்று அறிந்திருந்தால், நீங்கள் இந்த வழக்கே வேண்டாம் என்று கூறி விடுவீர்கள். எனினும், குற்றம் புரிந்தவன் என்ற முறையில் தன்னிலை விளக்கம் அளிக்க வேண்டியது எனது கடமை. கங்கணர் வெளியூர் செல்லும் முன்னர்த் தன் மனைவியிடம் "நம் மன்னர் ஆட்சியில், நீ தனியே இருக்கப் பயம் கொள்ளத் தேவையில்லை" என்று சொன்னதைக் கேட்க நேர்ந்தது. (தான் ஒற்றன் என்ற முறையில் வெளியூர் சென்றிருப்பதை வெளியிடாமல் இப்படிக் கூறுகிறார் என்று கங்கணருக்குத் தெரியும்.) அவர் ஊரில் இல்லாத நேரத்தில் நடு இரவில் அவர்

வீட்டில் ஆண் குரல் கேட்கவே சிந்தை கலங்கிக் கதவைத் தட்டிவிட்டேன். பிறகு நடந்ததை எல்லோரும் அறிவீர்கள்.

மன்னாகிய நான், ஆராயாது, அறிவிழந்து, என் குடிமகளை ஐயுற்றது மாபெரும் குற்றம். அதனினும் பெரிய குற்றம், அவள் கணவனே அவளை ஐயுற வைத்தது. நான் தான் தவறு செய்தேன் என்றறிந்தால் வழக்கைக் கொண்டுவர மாட்டீர்கள். ஆனால் அந்தக் குற்றமற்ற பெண்ணின் மேல் கொண்ட ஐயப்பாட்டைக் கங்கணரும் சரி, மற்றும் மக்களாகிய நீங்களும் சரி, உங்கள் மனத்தினின்று முழுமையாக நீக்கிட மாட்டீர்கள். கங்கணரே, குற்றமற்ற உங்கள் மனைவியை ஏற்றுக் கொள்வீர்களா?' என்றார்.

கங்கணர் தன் மனைவியின் கரங்களைப் பற்றி, "ஆயினும் மன்னவா, இத்தனை ஆண்டுகள் அவளோடு வாழ்ந்த நாள் அவளைச் சந்தேகித்ததற்கான தண்டனை எனக்குக் கிடையாதா?".

மன்னர் : தேவையில்லை. அது நீங்கள் உங்கள் துணைவி மீது கொண்ட ஆழ்ந்த அன்பின் அடையாளம்.

அழுத்தமான மௌனத்தோடு அவை கலைந்தது.

பின்னர், திருமாறனுக்குச் செயற்கைக் கையொன்று செய்து மேலே மெல்லிய தங்கத் தகட்டால் வேய்ந்து பொருத்தினர். அவனை மக்கள் **பொற்கைப் பாண்டியன்** என்று வேதனையிலும் மகிழ்வோடு அழைத்தனர்.

# வைகைக் கரையில் வரவேற்பு

பாண்டிய நாடே விழாக் கோலம் பூண்டிருந்தது.

கோநகரான மதுரையின் மாட வீதிகள் பட்டி தொட்டிகள் எல்லாம் கண்களையும் கருத்துகளையும் கவரும் வண்ணம் அழகுற அரசினரால் அலங்கரிக்கப்பட்டு அனைவரையும் ஈர்த்தன. மாட மாளிகைகள் மக்களின் ஆசைக்கும் அவர்தம் வசதிக்கும் ஏற்ப வண்ணங்கள் பூசப்பட்டும் தோரணங்கள் கட்டப் பெற்றும் புதுப் பொலிவோடு விளங்கின. எங்கும் எழில்! எதிலும் எழில்!

அன்று மலர்ந்தன மலர்கள் மட்டுமல்ல; மக்களின் மனங்களும் முகங்களும் கூடத்தாம். பட்டாடை உடுத்திப் பருவச் சிட்டுக்கள் பவனி வந்தனர். பகலில் விண்மீன் கூட்டமா? பார்த்தோர் வியந்தனர். இருப்போர், இல்லோர் என்றின்றி எல்லோர் உள்ளங்களிலும் ஒரு மகிழ்ச்சி; நடையிலே பெரு எழுச்சி!

ஏன்? எதற்காக?

விந்திய மலைக்கும் அப்பால் சென்று வெற்றிக் கொடிநாட்டியவர், இமயம்வரை சென்று மீனக் கொடியை நிறுத்தி இன்புகழ் கொண்டவர், இப்பாண்டிய நாட்டின் இணையிலா வீரத்தின் விளைநிலம் இளவரசி கயல்விழி தேவியார் நாடு திரும்புகிறார்; இருக்காதா மக்களிடையே எழுச்சியும் மகிழ்ச்சியும்! வேண்டாமா வெற்றி மங்கைக்கு வரவேற்பும் வாழ்த்தும்!

பனிமலை வரை பரந்து விரிந்த இந்த நாடு முழுதும் போர்ப் பயணம் செய்த தென்னவனின் செல்வ மகள் திரும்பி வருகிறார்; அஃதும் எப்படி? குமரி முதல் இமயம் வரையும் வங்கம் முதல் சிந்து வரையும் ஆட்சி செய்து வந்த அத்தனை நாட்டு அரசர்களையும் வென்று வாகை சூடிய வெற்றித் திருமகளாக வீடு திரும்புகிறார்! கேட்கவும் வேண்டுமோ பாண்டிய நாட்டு மக்களின் பரபரப்புக்கும் பரவசத்திற்கும்!

வீர மாதேவியாக வரும், தடாதகை என்றும் அங்கயற்கண்ணி என்றும் அனைவராலும் அன்போடு அழைக்கப் பெறும் கயல்விழிக்கும் உடன் களம் சென்ற படை மறவர்களுக்கும் வைகைக் கரையிலே வரலாறு காணாத வரவேற்பிற்கு ஏற்பாடாகி இருந்தது.

வையகமே பணிந்து போற்றி வாழ்த்தும் வீர மகளைப் பெற்ற தென்னவன் தன் மகளை வரவேற்க நெஞ்சில் நிறைவும் கண்களில் பெருமையும் நிறையக் காத்து நின்றிருந்தார். பாண்டியர் பழம் பெருமையை மீண்டும் நிலை நிறுத்திய தங்கை கயல்விழியை எதிர்நோக்கி மகிழ்வும் பாசமும் பொங்க மன்னன் திருமாறன் வரவேற்பு ஏற்பாடுகளைத் திறம்பட மேற்பார்வை இட்டுக் கொண்டிருந்தான்.

பாவலர் பாடவும் நாவலர் விளக்கவும் முடியா மாபெரும் வரவேற்பு விழா அங்குக் கயல்விழிக்காக ஏற்பாடு செய்திருந்தனர்.

மதுரை நகரம் அல்லோகலப் பட்டுக் கொண்டிருந்தது. வீதிகள் எல்லாம் விழாக் கூட்டம். மாட வீதிகள், மாளிகைகளின் உப்பரிகைகள் எங்கும் மக்கள் கூட்டம். பன்னாட்டு மக்களும் உள்நாட்டு மக்களும் ஒன்றாய்க் கூடிக் குழுமியதால் எங்கும் குழப்பம். கூட்டம் அலை மோதியது.

பாங்குடன் அமைக்கப்பட்ட பாதைகள்; அவற்றின் ஊடே விழா நடைபெறும் இடத்திற்கு மக்களைப் பக்குவமாய் வழிநடத்தி வைத்தனர் காவலரும் காவற் பெண்டிரும்.

பாணரும் விறலியரும் ஆங்காங்கே மக்கள் குழுமும் இடத்தில் கூடினர். பாடல்களைப் பாடினர். தாளம் தோன்றிடத் தோலிசைக் கருவிகளையும் பண்கள் நன்கு விளங்கக் குழலிசைக் கருவிகளையும் இசைத்தனர். அவற்றிற்கு ஏற்ப, அடியொற்றியும் பொருள் விளங்க மெய்யசைவுகள், முகபாவங்கள் காட்டியும் ஆடினர்.

மக்களின் மகிழ்ச்சிப் பெருக்கும் கொண்டாட்டமும் பாண்டியரின் நல்லாட்சியில் நாடு கொண்டிருந்த நல்ல செழிப்பையும் நாடா வளத்தையும் காட்டுவதாக அமைந்திருந்தன.

அனைத்து நாடுகளையும் தன் ஆளுகைக்குக் கீழ்க் கொண்டுவந்த பாண்டிய இளவரசி கயல்விழி, கற்றவர், பெற்றவர் நெஞ்சமெலாம் களிப்புறப் பொற்றேரில் வந்து சேர்ந்தாள்.

எல்லையிலேயே எதிர்பார்த்துக் காத்திருந்த எல்லோரும் வாழ்த்தொலி எழுப்பி வரவேற்றனர். அவ்வொலி விண்ணையும் அயல்நாட்டு மண்ணையும் தாண்டி ஒலித்து.

எல்லையிலே இன்னொரு எழில் தேர் அணியமாய் நின்றிருந்தது. கோட்டினாற் செய்த கொடுஞ்சி நெடுந்தேர் - காட்சித் தேர் அது.

தேரின் நான்கு சக்கரங்களும் கணைய மரத்தில் எழிலுறக் கடையப் பட்டிருந்தன. அச்சுக்கள் இரண்டும் வலிய எஃகினால் வடிக்கப்பட்டுப் பூட்டப்பட்டிருந்தன. அடிப்பாகம் அன்றலர்ந்த தாமரைப்பூ அமைப்பில்

முழுவதும் கோட்டினால் செய்யப்பட்டிருந்தது. அமர் இருக்கையோ, நடுவில் ஒதிமத் தூவலால் ஆன பட்டினால் பளபளக்கப் பதிக்கப் பெற்ற இரு பக்கங்களிலும் சாய்வணைகள் அமைக்கப் பட்டிருந்தது.

ஐந்திணை நிலங்களைக் குறிக்குமாறு ஐந்து நெடுந் தூண்களும் அமைக்கப்பட்டு, அதன் மேற்கூரை மொட்டு வடிவிலே தட்டுத் தட்டாய் தகைவுறப் பொருத்தப் பட்டிருந்தது. உச்சியில் வெண்பட்டாலான மீன்கொடி வீசுவளியில் ஒளிவீசிக் கொண்டிருந்தது.

முழுத் தேரும் வெண் கோடுகளாலும் சுற்றிப் பொன்னிழைகளாலும் பட்டிழைகளாலும் பொலனுறப் பொருத்தப்பட்டு அழகு செய்தன. அன்றியும் ஒன்பான் மணிகளையும் சீர்மிகப் பெற, அமைய வேண்டிய இடங்களில் அழகுறப் பொருந்தியும் சரஞ்சரமாய்த் தொங்கியும் வளைய வளையமாய் வாகுறச் சுற்றிப் பிணிந்தும் கவின் செய்தன.

அம்மட்டோ? அன்றலர்ந்த நாண்மலர்கள் அத்தனையும் அவ்வழகுத்தேரை அணி செய்தன!

சிங்காரத் தேர் அது. சிற்றிடையர் மென்னடைக்கும் அவர்தம் செவ்விளங் கனிகள் சேர் அசைவிற்கும் சிறந்த எடுத்துக் காட்டாய் எழுந்த தேர் அது. உவமை என்பது உயர்ந்ததன் மேற்று என்பதற்கு ஒப்ப உயர்ந்தது, உன்னதமானது அது.

அந்த அழகுத் தேரில் எல்லோரும் எழுச்சி பெற எல்லையில் வந்து சேர்ந்த தன் தங்கை எழிற்செல்வி கயல்விழியை அமரச் செய்து, வெண்புரவிகள் கொண்டு அழைத்தேக விழைந்து பணித்திருந்தான் வேந்தன் திருமாறன். ஆனால், மக்கள் கூட்டம் அதற்கு மறுப்புத் தெரிவித்தது.

"பார் வேந்தே, வேண்டாம் வெண்புரவிகள். எங்கள் வெற்றிச் செல்வியை இந்தத் தேரிலே நாங்களே அழைத்துச் செல்கிறோம். வீட்சியுற்ற நம்மவர்க்கு மீட்சியளித்த தாய் மீனாட்சியை மாமதுரையின் மாட வீதிகள் எங்கும் வரவேற்கக் காத்திருக்கும் மக்கள் வெள்ளம் கண்டு மகிழ, மெல்ல அழைத்தேகும் மேன்மையை எங்களுக்குத் தாருங்கள். பெறுமவற்றுள் மிகப் பெரும் பேறான இப்பணியை எங்கள் யாவர்க்கும் தந்திட வேண்டும்."

இரைஞ்சித் தொழுதனர் எழுந்திருந்த இளைஞரும் முதியரும்.

நெகிழ்ந்து உருகிப்போனான் தென்னவன் திருமாறன்.

# வேத்தியல் மாடம்

வேத்தியல் மாடம் நிறைந்து வழிந்தது.

அமைச்சர்களும் படைத் தலைவர்களும் ஒரு பக்கம் அமர்ந்திருந்தனர். மறுபக்கம் ஆன்றோரும் சான்றோரும் அமர்ந்திருந்தனர். எதிர்புறத்தே எண்பேராயத்தினரும் சிறப்புக்குரிய அரசு அலுவலர்களும் வீற்றிருந்தனர். இவர்கள் அனைவர்க்கும் பின்புலத்தே சாரணர்களும் ஒற்றர்களும் சார்ந்து அமர்ந்திருந்தனர்.

அவையின் நடுநாயகமாகப் பாண்டிய மன்னன் திருமாறன்! பக்கத்தில் தந்தை பெருங்கோவழுதி தங்கை கயல்விழி அமர்ந்திருந்தனர்.

"வேத்தியல் குழுவின் ஒப்பற்ற உறுப்பினர்களே, உங்கள் அனைவர்க்கும் வணக்கம். உங்களைச் சந்தித்து உரையாடுவதில் பெரு மகிழ்வு கொள்கிறேன். நம் உயிரினும் மேலான தென்னவர், எங்கள் தந்தையார் பெருங்கோவழுதி அவர்களின் விருப்பிற்கு ஏற்ப, இளவரசியார் அவர்கள் இமயம்வரை திக்விஜயம் மேற்கொண்டு வெற்றிக் கொடி நாட்டிப் பாண்டியர் குலத்தின் பழம் பெருமையை நிலை நாட்டியிருக்கிறார். அதற்கான வெற்றி விழாக்களைக் கடந்த ஒரு திங்களாய் நித்தம் நிகழ்த்தி மெத்த மகிழ்ந்தோம் மக்களும் யாமும். இந்த இனிய சூழலில் இன்று கூடியுள்ளோம்."

திருமாறன் தன் பேச்சைச் சற்று நிறுத்தி எல்லோரையும் ஒரு சில வினாடிகள் சுற்றி நோக்கினான். பின்னர் மீண்டும் பேச்சைத் தொடர்ந்தான்.

“உங்கள் அனைவர் முகத்திலும் ஓர் எதிர்பார்ப்பு இருப்பதை நான் காண்கிறேன். அதற்கான காரணத்தையும் நான் அறிவேன். இளவரசியாரின் திக்விஜத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள உங்களைப் போலவே நானும் ஆவலுடன் உள்ளேன். கயல்விழியின் வெற்றிப் பயணத்தைப் பற்றித் தெற்றென விளக்கும் திறம் படைத்தவர் படைத் தலைவர்களுள் ஒருவரான வேல்விழியைத் தவிர வேறுயார் இருக்க முடியும்? அவர் இப்போது நம் எல்லோர் ஆவலையும் தீர்த்து வைப்பார்.”

எல்லோரும் வேல்விழி வீற்றிருந்த இடத்திற்காய்த் தம் பார்வையைத் திருப்பினர். வேல்விழி மெல்ல எழுந்தாள்; தன் விழிகளால் அவையைச் சுற்றி ஒரு முறை உழுதாள்; பின்னர் அமைதியாகப் பேசினாள்.

“வேந்தர் வேந்தே, இளவேந்தே, வெற்றிச் செல்வியாம் எங்கள் பாண்டிய மாவிளவரசியே, வேத்தியல் குழுவின் வினைவல் உறுப்பினர்களே, அரசு அலுவலர்களே, ஆன்றறிந்த சான்றோர் பெருமக்களே, அன்பர்களே, உங்கள் அனைவர்க்கும் என் உள்ளார்ந்த வணக்கங்கள் உரித்தாகுக.

நம் வேந்தர், பல்லாற்றானும் என்னினும் சிறந்த மூத்த தளபதிகள் நாகேந்திரர் போன்ற திறமை மிக்கோரை நம் இளவரசியின் இகலாற்றலைக் கூற அழைக்காமல், என்னை இங்குப் பணித்தற்கு இனிய கரணியம் இருக்கிறது; அதை இறுதியில் உரைப்பேன். எனினும், எனக்கிடப்பட்ட பணியை இப்போது முதலில் ஆற்றுவேன்.

கபாடபுரத்தைத் தலை நகராகக் கொண்டு தமிழகம் முழுவதையும் காவலராக இருந்து காலங்காலமாய்க் காத்து வந்தவர் தென்னவர் என்ற பாண்டிய குல மன்னரே ஆவர். மற்றையர் அனைவரும் அவர் ஆணை கேட்டு ஆண்டு வந்தவரே!

அவ்வப்போது நேர்ந்த கடற்கோள்களால் சிறு சிறு தீவுகள் மூழ்கின. சில நிலப் பிரிவுகளும் ஏற்பட்டன. எனினும் தமிழ்க் கூறும் நல்லுலகம் பாண்டியர் தலைமையில் எந்தக் குழப்பமும் பூசலும் இன்றி அமைதியாகவே சீரும் சிறப்புமாக விளங்கி வந்திருக்கிறது.

அந்தச் சூழ்நிலையில்தான் அக்கொடிய ஊழி, கபாடபுரத்தையும் சுற்றியிருந்த பன்னூறு தீவுகளையும் கடற்கோள் மூலம் கொள்ளை கொண்டது. பாண்டிய மண்டலத்தின் பெரும்பகுதி கடலுள் கரைந்தது.

பல்லாயிரக் கணக்கில் மக்கள் மாண்டனர். தப்பிப் பிழைத்தோர் ஏதிலிகளாக இடந்தேடிப் பொருநை நதிக்கு வடபகுதியிலும் வந்து சேர்ந்தனர்.

இலங்கைக்குப் பயணம் சென்றிருந்த இளவரசர் இளம்பெருவழுதி கடலுள் மாய்ந்தார். நம் இன்னூழின் பயனாய் வியத்தகு முறையில் வேந்தரும் வேந்தர் வேந்தரும் இளவரசியாரும் தப்பிப் பிழைத்தது ஊழிக்கே ஊழியாய் அமைந்து.

இவை எல்லாம் நீங்கள் அறிந்ததே. எனினும் இளவரசியாரின் இன்றைய வெற்றிக்குக் காரணம் அஃது என்பதால் மீண்டும் உரைத்தேன்.

கடற்கோளால் சுருங்கியது பாண்டிய மண்டலம் மட்டுமே; பாண்டியரின் வீர உணர்வு அன்று. இளைத்தது பாண்டியர் மண் என்று எள்ளி நகையாடினார் சோழர் பெருஞ்சென்னி; எரி மலையாய்ச் சீறி எழுந்தார் இளவரசியார்.

பெருஞ்சென்னியை வெறுஞ்சென்னி ஆக்குவேன் என்று சூளுரைத்தார்; உரைத்தபடியே பொருநையிலே போரிட்டு அவரைக் கூறிட்டுக் கொன்றார். அடுத்துத் தமிழகம் முழுவதையும் பாண்டியர் ஆளுகைக்குள்

கொண்டு வந்தார். பின்னர்த் தண்பொழில் நாட்டைத் தாக்கி வெற்றி கொண்டார்.

எருமை நாட்டு மன்னனை வெற்றி கொண்டதே இளவரசியின் எழுச்சிக்குத் தூண்டுதலாய் அமைந்தது. இந்த வெற்றியே இமயம்வரை பயணம் கொள்ள வித்தாக முளைத்தது.

அடுத்தடுத்து வீழ்ந்தன அருகில் தண்பொழில் நாட்டின் பகுதிகளாக விளங்கிய கடம்ப நாடும் கலிங்கமும். அடுத்து அவர் பார்வை, விந்திய மலைக்கு வடக்கேயான முன் கண்டறியாத நாடுகளின்மேல் விழுந்தது.

விந்தியத்திற்கு வடக்கேதான் எத்தனை, எத்தனை நாடுகள்!

குந்தளம், கூர்ச்சரம், மாளவம், அனாத்தா, அவந்தி, சிந்து.

சிந்து நாட்டில் பனி நீர் உருகிப் பளிங்குபோல் ஓடும் அழகான ஆறுகள் - தூசுகளும் மாசுகளும் இல்லாதபோது விரைந்தோடும் வெள்ளை நீரின் அசைவே தெரியாமல் ஆழ்தரையும் தெளிவாகத் தெரியும் அவ்வழகைப் பன்னூறு பாடல்களாலும் விளக்க முடியாது.

அடுத்து, அவந்தரம், அசோகா, உருசியா, கோகாயா, காம்போதம், காந்தாரம், மதுரா, குரு, சூரசேனா, கோசலம், பாஞ்சாலம், வாத்சயா, மத்திய தேசம், சேதிநாடு, காசி, விதேகம், மகதம், கர்ணா, அங்கம், வங்கம்.

வங்கம், கங்கை பரந்தோடும் வளமான நாடு. நாம் இங்குக் கடலில் கப்பல் விடுகிறோம்; நதிகளில் ஓடமும்

தோணியும் விடுகிறோம். ஆனால், அங்கே அவர்கள் ஆறுகளில் பன்னூறு நாவாய்களைச் செலுத்தி மக்களையும் பொருள்களையும் ஏற்றிச் செல்கின்றனர். அஃது ஓர் ஆற்றுத் துறைமுகம் எனலாம்.

அப்புறம், கபர்ணா, மேகலா, கிரி, தென் கோசலம், விதர்ப்பம், ஆய்மாகா, சௌபாலம், மாத்ரம், பிரயாகை, மிதிலை, உத்கலம், தண்டகாரண்யம், வஜ்ஜி, மல்லி, வாத்சம் . . .

இப்படி எண்ணற்ற நாடுகள்! இளவரசியார் கால்பதியாத நாடுகளே இல்லை எனலாம். எதிர்த்த நாடுகள் அவரின் அதிரடி தாக்குதலுக்கு ஆளாயின; தோற்று அடிமையாயின. அவர் ஆற்றலைத் தங்கள் ஒற்றர்கள் மூலம் முன்னரே அறிந்து, எதிர்ப்பதால் ஏற்படும் விளைவுகளைத் தெளிந்து, இளவரசியாரை எதிர்கொண்டு சென்று பல நாடுகள் வாழ்த்தி வரவேற்றன; அவர் தலைமையை ஏற்று வாழ்வு பெற்றன.

விந்திய மலைக்கும் இமய மலைக்கும் இடைப்பட்ட நாடுகள் அனைத்தும் இளவரசியாரின் பேராற்றலுக்கு முன் புறங்காட்டிப் பணிந்தன; பாண்டியர் தலைமைக்குக் கட்டுப் பட்டன.

ஆனால், இமயம்? மறந்து விட்டேனா? மன்னிக்க வேண்டும். எம் தேவியின் இதயம் இணைந்து விட்ட இடமன்றோ அது!"

கயல்விழி நாணத்தால் தலை கவிழ்த்தாள். வேல்விழி தொடர்ந்தாள்.

"வெற்றிச் செருக்கு விழையும் இளவரசியார் எழில் முகத்தில் நாம் கண்டிராத வெட்கச் சுழிப்பைக் காணும் பேற்றினை இன்று பெற்றோம்."

அவையினர் அனைவரும் அகமகிழ்ந்து மென்னகை கொண்டனர்.

“இளவரசியார் முகத்தில் இப்போது நாணச் சிவப்பை மட்டுமே நீங்கள் கண்டீர்கள்; ஆனால், போர்க்களத்திலே நாங்கள் தேவியின் பன்முகங்களைக் கண்டு பயந்திருக்கிறோம். அருள் ஒளி வீசும் அன்னை முகத்திலே அனல் வீசி ஒளிரக் கண்டு அஞ்சி மருளாத பகை வீரர்களே இல்லை. அமைதியே உருவான இந்த முகத்தில் ஆங்காரத்தைப் பார்த்திருக்கிறோம். வாரி, வாரி வழங்கிய கைகளில் வாளும் வேலும் சூலமும் வளியெனச் சுழலக் கண்டு வியந்திருக்கிறோம். மெல்லியல் உடல் வனப்பில் கல்லியல் கடுமையும் கனன்றெறி தணலையும் கண்டிருக்கிறோம். வெண்ணிற விழிகள் சென்னிறமாய் விளங்கப் பார்த்திருக்கிறோம்.

சுருங்கச் சொல்வதென்றால், எம் தேவியார் பணிந்தோர்க்கு மண்ணுலக வாழ்வையும் எதிர்த்தோர்க்கு விண்ணுலகப் பதவியையும் வாரி வழங்கியதைப் பார்த்து மகிழ்ந்துள்ளோம்.”

இடையே அமைச்சர் ஒருவர் எழுந்து குறுக்கிட்டார்.

“தளபதியாரே! இமய வேந்தர் இங்கு வரவில்லையா?”

கயல்விழியின் கண்களில் ஆவல் மின்னல்போல் மின்னி மறைந்தது. விடையை அறிந்து கொள்ள வேண்டுமென்ற வேட்கை, காதல் குறிப்பின்றித் தும்மல் போல் தோன்றி விட்டது. கண்களில் தோன்றிய ஆவல் கண நேரமே காட்சி அளிப்பினும், கயல்விழியின் கருத்தறிந்த வேல்விழி கடைக்கண்ணால் அதைக் கவனிக்கவே செய்தாள்.

"ஆன்றோர், சான்றோர், அமைச்சர், அலுவலர் குழுமியுள்ள இவ்வறங்கூறு ஆலயத்தில் - புறப் பொருளாம் போர், வீரம், ஆட்சிமை, கொடை, வெற்றி, திறை, வரி, சுங்கம், நீதி போன்றவற்றை மட்டுமே ஆய்தற்குரிய இவ்வவையில், அகப்பொருள் பற்றிப் பேச வேண்டிய சூழ்நிலை உருவாகி உள்ளது. அதன் பொருட்டே மன்னர், வெற்றிப் பயணத்தைப் பற்றி என்னைப் பேச வைத்திருக்கிறார்கள்.

இமயம்வரை எம் தேவியார் எல்லா நாடுகளையும் படை நடத்தி வெற்றி கொண்டார்; எல்லாரும் பாராட்டி மகிழ்ந்தோம். வெற்றி கொண்ட அவரையும் வெற்றி கொண்டுள்ளார் இமய வேந்தர்.

ஆம்; இமய மன்னர் சோமனாதித்தரிடம் நம் இளவரசியார் தம் இதயத்தை இழந்து விட்டார். இமய மன்னரை விரும்புகிறார்; மணந்து கொள்ளவும் விழைகிறார். இஃது ஒருதலையானது அன்று; ஒத்த அன்பினர், ஒருவரை ஒருவர் உயிரெனக் காமுறுவர்.

அக வாழ்வில் முடிவை எடுப்பது, காமுற்றோரின் தனியுரிமை. அல்லாது, அவ்விருவர் குடும்பத்தினரின் ஒப்புதலும் தேவை. இஃது இயல்பான நிலை.

ஆனால், இந்நிலை மன்னர்குல மரபினர்க்குப் பொருந்தாது. அவர்களின் மண உறவு அரசியலோடு பின்னப் பட்டது. தங்கள் விருப்ப வெறுப்பினும் நாட்டு நலனையே முன்னிறுத்த வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு. கொண்ட காதலுக்காக வேண்டாம் ஆட்சி என்று விலகியவர்கள் முன்னர் உண்டு. எம் தேவியார் அப்படிப் பட்டவர் அன்று. நாட்டு மக்கள் நலனையே தன் நலமாகக் கொண்டவர். அதனால்தான் இந்த அறிவார்ந்த அவையினர் முன் அவர் மனத்திற்கு இயைந்தவரை மணப்பதற்கு ஒப்புதல் கோரி நான் இப்போது அறத்தோடு நிற்கிறேன்.

குமரி முதல் இமயம் வரை வெற்றிக் கொடி நாட்டிய வீரத்தின் விளைநிலம் எங்கள் பாண்டிய குலச் செல்வி, இளவரசியார் இன் மணத்திற்கு இவ்வவை முழு மனதோடு ஒப்பதல் அளிக்கும், வாழ்த்தி மகிழும் என எதிர்பார்க்கிறேன். நன்றி.''

வேல்விழி தன் பேச்சை முடித்துத் திரும்பிப் பார்க்கும் முன்னரே, அவையில் ஆரவாரம் எழுந்தது. எல்லோரும் எழுந்து வாழ்த்து முழக்கம் இட்டனர்.

"வாழ்க, இளவரசியார்! வாழ்க, இளவரசியார்! நடக்கட்டும் அவர் மனப்படி திருமணம்!''

எங்கும் இதே ஒலி! எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சியின் எதிரொலி.

இளவரசி கயல்விழி தமையனிடம் ஏதோ சொல்வதை எல்லோரும் கவனித்தனர்.

"அமைதி! அமைதி! அனைவரும் அமருங்கள்.''

மன்னன் சொற்கு மறுப்பேது. அனைவரும் உடன் அமர்ந்து அமைதி காத்தனர். திருமாறன் பேசினான்.

"அன்புடையோரே, இளவரசியார் உங்கள் முன்னர்ச் சில சொற்கள் கூற விழைகிறார்; அதைச் செவி மடுப்போம்.''

கயல்விழி எழுந்து நின்றாள். அவள் கண்கள் மின்னின. எல்லோரும் அவள் எழில் முகத்தையே உற்றுப் பார்த்தனர். என்ன சொல்லப் போகிறாரோ என்ற எதிர்பார்ப்பில் அவள் இதழ்கள் விரிவிற்குக் காத்திருந்தனர்.

“தந்தையே! நம் மாபெரும் தென்பகுதி நிலப்பரப்பைக் கடல் கொண்டதனால் தங்களைச் சிற்றரசனெனச் சிறுமைப்படுத்திப் பேசிய பெருஞ்சென்னி அழிந்து போனாலும் அவன் என் அகத்தில் எழுப்பிய தீ இன்னும் அணையாது எரிந்து கொண்டுதான் இருக்கிறது. இந்தத் தண்பொழில் நாடுகள் மட்டுமல்ல; விந்தியத்திற்கும் அப்பாலும் இமயம்வரை உள்ள நாடுகள் எல்லாமும் இன்று இப்பாண்டியர் ஆளுமையின் கீழ் வந்துவிட்டுள்ளன. எதிர்த்தோர் நசுக்கப் பட்டனர். பணிந்தோர் அணைத்துக் கொள்ளப்பட்டனர்.

இன்று, தாங்கள் இந்த வையகமே ஏற்றிப் போற்றும் மன்னர் மன்னராகி விட்டீர். இனி, இவ்வுலகம் தங்களை “இமயக் கொடியோன்” என்றே புகழ்ப்பாடும். வடபுலத்தில் இன்றே தங்களை “மலையத்வஜன்” என்று வாழ்த்துவர்.

பாண்டிய நாட்டின் எல்லை இன்று,

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்

என்றாகி விட்டது. இப்போது மக்கள் தங்களை,

‘வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆளும் தென்னவன் வாழி’

என்று வாயார வாழ்த்தித் திளைக்கிறார்கள். இந்தப் பெரும் வெற்றிகளை எல்லாம், மூலவரான எந்தை தென்னவர் பெருங்கோ வழுதியின் பெருமைமிகு பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்; பெருமைப்படுகிறேன்.

இனி நீங்கள் மகுடம் சூடிப் பார் வேந்தராகப் பவனி வர வேண்டும். இதுவே மக்கள் எல்லாருடைய விருப்பம். என் விருப்பமும் அதுவே!'

அவையினர் வாழ்த்தொலி எழுப்பித் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். தென்னவன் பெருங்கோவழுதி மென்னகை பூத்தான்.

"மகளே! மக்கள் விருப்பம் என்ன என்பதை நான் முன்னரே நன்கறிவேன். வேண்டாம் புரவி என்று தேரின் வடம்பிடித்து, ஊரின் தெருவெங்கும் உன்னை ஊர்வலமாக அழைத்துச் சென்றனரே, அஃதொன்று போதாதா அவர்களின் இதயம் எங்கே, யாரிடத்து என்பதை அறிதற்கு? மக்களின் மனதை அறியாதவன் மன்னனாய் இருந்திருக்க முடியுமா?

கயல்விழி! இன்றுவரை யாரும் ஆற்றிடற்கு அரிய, ஆற்றவும் ஆசைப்படாத - பேரரும் போர்களை உடற்றி இருக்கிறாய்! எத்தனை வேந்தர்கள் உன் வாளுக்கு இரையாகி இன்னுயிர் இழந்திருக்கின்றனர்! நீ வெற்றி கொண்ட நாடுகள்தாம் எத்தனை! எத்தனை!

வீரப் போர்கள் பல உடற்றி நீ கொண்ட வெற்றிகள், பெற்றோன் நான் என்ற பெருமையால் பேருவகையை அளிக்கின்றன. அதற்காக நீ பறித்த வெற்றிக் கனிகளை நான் உண்ணல் விவேகம் அன்று; அது முறைமையும் ஆகாது.

இன்றளவு யாரும், ஏன்? எந்த ஆண்மகனும் பெற்றிடாத - பெற்றிடற்கு அரிய பெரும் வெற்றிகளை ஈட்டிய நீயே சிறந்த ஆட்சியை அளித்திட வேண்டும். அளிப்பாய் என்பதில் எனக்கு ஐயம் சிறிதும் இல்லை. என் வாழ்த்துக்களோடு நீ இவ்வையம் உய்ய நல்ல ஆளுமை அளித்திடுக. உன்னைப் பெற்ற பொழுது உற்ற மகிழ்வினும் பெரு மகிழ்வை நான் இப்போது பெற்றுள்ளேன்.

அன்பும் அருளும் பொருந்திய என் அருமை மகளே! நீயே முடி சூட்டிக் கொண்டு 'ஞாலமாதேவி அங்கயற்கண்ணி' என்ற நாமத்துடன் இவ்வையம் உள்ளளவும் சீரும் பேரும் பெற்று, இணையற்ற பேரரசியாய்ப் பேறு கொள்வாயாக!"

கயல்விழியின் கண்கள் குளமாயின. அவள் அண்ணன் திருமாறனை நோக்கினாள்.

"தங்கையே! தந்தை சொல்லின் தகுந்த வேறு உண்டோ? அவர் சொன்னவை அனைத்தும் மக்கள் மனத்தின் மறு ஒலிப்பாகும். இம்மாபெரும் பேரரசை ஆளுதற்கு ஆற்றல் அமைந்தவள் நீயே. இதுதான் மக்களின் விருப்பம். என் விருப்பமும் அதுவே; தயங்காமல் ஏற்றுக் கொள்."

அரண்மனையே அதிர்ந்தது. எங்கும் ஆரவாரம்! எழுச்சி ஆர்ப்பாட்டம்!

"வாழ்க, அங்கயற்கண்ணி தேவி!"

"வாழ்க, ஞாலமாதேவி!"

மக்கள் வாழ்த்தினர்; மகிழ்ந்தனர். அவர்களின் வாழ்த்தொலி விண்ணை எட்டி மீண்டு எங்கும் ஒலித்தது; உவகை அளித்தது.

# நெஞ்ச நிறை

அழகிய மாலைப் பொழுது!

அரண்மனைப் பொழிலில் தனிமையில் கயல்விழியும் வேல்விழியும் ஊஞ்சலில் அமர்ந்து ஆடியபடி பேசிக் கொண்டிருந்தனர்.

கயல்விழி குறும்புடன் வேல்விழியை விளித்தாள்.

“புலவர் நல்வெள்ளியாரே! படைத் தலைமை கொண்டதால் உங்கள் புலமை தடை பட்டுவிட்டது போலும்.”

“அன்று; அன்று அம்மையே!
அங்கண்மா ஞாலம் புரக்கும்
அங்கயற்கண் தேவி யேயுன்
நெஞ்சஞர் உடற்றி வானிமயம்
இருந்துவா ழிதயம் புகுந்த
வெஞ்சுடர் மதியோன் .....”

குறுக்கிட்டாள் கயல்விழி.

“போதும், போதும் புலவரே போதும்”

அமைதி சிறிது நேரம் அங்கே ஆளுமை கொண்டது.

“உம்ம் . . . வேல்விழி!”

வேல்விழி சட்டென்று எழுந்து விறைப்பாய் நின்று விடை அளித்தாள்.

"தேவி, ஆணை இடுங்கள்; அடிமை காத்திருக்கிறேன்."

"ஐயோ! என் நிலைமை புரியாமல் ஏளனம் செய்யாதே. அம்ம, வாழி தோழி!"

"அம்ம, வாழி தோழி! அப்படி வா வழிக்கு. என் இனிய தோழி, இப்போது சொல். உனக்கு யாது வேண்டும் கொல்?"

"தோழி! அறியாதவளா நீ? அனைத்தையும் சொல்லடி."

"எதைச் சொல்ல வேண்டும்? யான் ஏதும் அறியேனே!"

"அங்ஙனமாயின், நீ அறியாதவற்றைக் அகல எடுத்து அறை!"

இருவரும் இணைந்து கலகலவெனச் சிரித்தனர். வேல்விழி சொன்னாள்.

"கயல்விழி! நாம் இமயம் விட்டு நீங்கும்போது, நீ அவர் மீது கொண்ட அளப்பரு காமத்தை நெஞ்சோடு இருத்திக்கொள் என்ற என் இன்னுரையை நல்லுரையாக முழுதும் ஏற்று, இன்றுவரை ஒழுகி வந்திருக்கிறாய். அப்படிப்பட்ட அருங்குணம் அமைந்தவள் நீ. உன் உயிர்த் தோழியாகிய எனக்கு உன் தலைவனின் நலனையும் நிலைமையையும் கவனித்துவரும் பெரும் பொறுப்பு உண்டல்லவா? அவரை விட்டு நாம் நீங்கிய அக்கணம் தொட்டு இக்கணம்வரை அவர் என் கண்காணிப்பிலேயே இருந்து வருகிறார். திறனுடைய நம் ஒற்றர்கள் நால்வர் அவரைத் தொடர்ந்து கவனித்தும் வருகின்றனர்; காத்தும் வருகின்றனர். நீ எதற்கும் கவலற்க!"

"அப்படியா? நன்றி. வேல்விழி அவர் இப்போது எங்கிருக்கிறார்? எப்படி இருக்கிறார்?"

"அவசரப் படாதே. அவர் இங்குத்தான் இருக்கிறார். வணிகர் போன்று மாற்று உருவில் வந்துள்ளார். ஏனப்படி? யான் அறியேன். பயணியர் மாளிகையில் பல்லோரோடு தானும் ஒருவராய்த் தங்கியுள்ளார். எனினும், என் கண்காணிப்பினின்று அவரை இம்மி நேரமும் விலகி இருக்க விட்டதில்லை."

"நீ என்னையே கண்காணித்தவள் ஆயிற்றே, அவரை மட்டும் விட்டுவைப்பாயா? அதுவும் எனக்காக என்றால்! நன்றி தலைவருக்கு; அரவணைப்பு அன்பு தோழிக்கு; புலவர்க்கு நான் என்ன செய்யட்டும்?"

மீண்டும் கலகல சிரிப்பு.

# மறை வெளிப்பாடு

மாளிகைக்குள் நுழைந்து கொண்டிருந்த அந்த மாந்தளிர் மேனி எழில் மங்கையை வியப்புடன் நோக்கினான் மறையுருவில் தங்கியிருந்த இமய மன்னன் சோமனாதித்தன். அவளை எங்கோ முன்னர்ப் பார்த்திருந்ததாக அவனுக்கு நினைவு. ஆனால், எங்கு? குழம்பினான்.

ஒயிலாக ஒசிந்து நடந்துவந்த அவள் மேனியில், உச்சி முதல் உள்ளங்கால் வரையில் பொன், வெள்ளி அணிகள் மின்னிப் புன்னகை புரிந்தன. பல வண்ண மணிகளும் முத்துச் சரங்களும் மாலைகளும் பளபளத்தன. பட்டாடை உடுத்திப் பகட்டாகக் காட்சியளித்தாள் அந்தப் பாவை.

அந்த அழகுப் பதுமை அசைந்து அசைந்து நடந்து வரும் நளினம் அனைவரையும் ஆட்டிப் படைத்தது. தன்னைத் தேடி வாராளோ என்று தங்கியிருந்த ஒவ்வொருவரும் தவித்தனர். ஆனால், அந்தத் தளிர்க் கொடியாளோ தனித்து அமர்ந்திருந்த சோமனாதித்தன் எதிர்வந்து அமர்ந்தாள்; அவள் யாரென்று ஓர்ந்திருந்த அவன் எண்ணத்தைத் தகர்த்தாள்.

“ஐயா, வணிகரே?”

அவள் அழைத்தாள். அவன் மேலும் ஊன்றி அவளை ஆராய்ந்தான். குரலும் முன்னர்க் கேட்ட குரலாய் உள்ளதே!

“வணிகரே! ஏன் வாயடைத்துப் போய் விட்டதா?

ஏன் வாயையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்?"

தடுமாறிப் பேசினான் சோமனாதித்தன். அவன் குழப்பம் நீடித்ததே ஒழியத் தெளிவு தென்படவில்லை.

"இல்லை, இல்லை. பொறுத்துக் கொள்ளுங்கள். சொல்லுங்கள்."

"சொல்வதா? என்ன சொல்ல வேண்டும்?"

இடக்காகக் கேட்டாள் அவள். மிடுக்காக அவனிடமிருந்து அப்போது விடை வந்தது.

"என்னை நாடிவந்த காரியம்?"

"வணிகரை நாடி வம்பளக்கவா வருவர்? உங்களிடம் உள்ள உயர்ந்த அணிகள், மணிகள், துணிகள் வாங்கிட விழைகிறேன். காட்டுவீர்களா?"

"எல்லாப் பொருள்களும் என்றோ விற்றுத் தீர்ந்து விட்டன. வேண்டும் என்றால் வெளிநாட்டிலிருந்து வரும் சிறந்தவற்றை வாங்கி வைத்திருப்பேன்; நாளை வந்து வாங்கிக் கொள்ளுங்கள்."

"என்ன வணிகர் நீங்கள்? வேற்று நாட்டுப் பொருள்களை விலை கொடுத்து வாங்க, இடையே நீங்கள் எதற்கு? நானே வாங்கிக் கொள்ள மாட்டேனா? உங்கள் நாடு எது?"

சோமனாதித்தன் அவளை உற்று நோக்கினான். அவள் யாராய் இருக்கும்? தெரிந்தவளாய்த் தெரிகிறாளே! அவளுக்கு நம் அடையாளம் தெரிந்திருக்குமா? அவள் கேள்வி ஐயத்தின்பாற் பட்டதா?

'வணிகரே! என்ன சிந்தனை? கேட்ட கேள்விக்கு

விடை இல்லையே! யார் நீங்கள்? எந்த நாடு? இங்கு எதற்கு வந்தீர்?"

"பெண்ணே! உங்கள் கேள்விகள்? விளங்கவில்லையே?"

"ஐயா, உண்மையில் வணிகரா நீங்கள்? இங்கு வந்து பல நாட்கள் ஆகியும் எந்தப் பொருளையும் விற்றவர் இல்லை, நீங்கள். நகரைச் சுற்றிச் சுற்றி வந்துள்ளீர்; உங்கள் நாட்டம் நல்லதற்கு இல்லை."

"தாயே, தாங்கள் யார்? ஒற்றரோ? பாண்டிய நாட்டில் பாவையர்களும் ஒற்றர்களாய்ப் பணியாற்றுகின்றனரோ? விந்தை! விந்தை!"

"விந்தை இதில் என்ன? பாண்டியர் படையின் தலைமைப் பொறுப்புகளில் பெண்களும் உண்டே; உங்களுக்குத் தெரியாதா?"

அவள் கண்களில் குறுநகை தெரிந்தது. அவன் மூளையில் சிறுபொறி மின்னலிட்டது. கலகலவென்று வாய்விட்டுச் சிரித்தான். அவளும் அதில் கலந்து கொண்டாள்.

"வேல்விழி! என்னை வீழ்த்தி விட்டீர்! இஃதென்ன எழிற் கோலம்? மிடுக்கு நடை எங்கே? மிரளா விழிப்பெங்கே?"

"இமய வேந்தர் சோமனாதித்தரே, இஃதே என் இயல்பான தோற்றம். நீங்கள் வணிகர் வடிவிலே வந்தீர்; நான் செல்வக் குமரியாக வந்தேன்; அவ்வளவே."

"மாற்றுருவில் வந்த என்னை, இயல்பான வடிவில் வந்து ஏமாற்றி விட்டீர்."

இருவரும் இணைந்து சிரித்தனர். இருவர் உள்ளங்களிலும் மகிழ்ச்சி!

"வேந்தே, உங்கட்கும் எம் இளவரசியார்க்கும் இடையே எழுந்த இன்காதல், அரங்கேற இனி அட்டி இல்லை. எல்லோரும் உங்களிருவர் மணத்திற்குத் தங்கள் இசைவைத் தந்துவிட்டனர். மகிழ்ச்சி தானே?"

"கனி அருந்தக் கசக்குமா? பெறுபவற்றுள் அரிய பேறன்றோ அவர்."

"இன்னும் ஒரு நற் செய்தி. தங்களின் காதற் தலைவி, ஞால மாதேவியாக இம்மதுரையில் மகுடம் சூட்டிக்கொள்ள இருக்கிறார்."

"அப்படியா? மிக்க மகிழ்ச்சி."

அவன் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

"இமய வேந்தரே! உளம் ஒன்றிய உங்கள் இருவர் மணவிழாவை எப்போது வைத்துக் கொள்ளலாம். தேவியார் முடி சூடிய பின்னரா? அன்றி, விழாவிற்கும் முன்னரா? உங்கள் விருப்பம் என்ன?"

"ஆஃகாஃகா . . . . பேரரசியையே நான் மணக்க விரும்புகிறேன்."

# ஞாலமாதேவி மதுரை மீனாட்சி

அத்தாணி மண்டபம் நிரம்பி வழிந்தது. நெடிதுயர்ந்த தூண்கள்; அவை கலைநயத்தோடு கூடிய வளைவு வடிவால் மேலே இணைக்கப்பட்டிருந்தன. தூங்கா விளக்குகளின் ஒளி ஆங்காங்குப் பதிக்கப் பட்டிருந்த கண்ணாடிப் பட்டகத்தில் பட்டு எதிரொளித்து மண்டபத்தில் பகலினும் அதிக ஒளி பரப்பியது. யவனரின் பாவை விளக்குகள் மண்டபத்தின் ஒவ்வொரு மூலையிலும் வைக்கப்பட்டு மிளிர்ந்தன. தூணின் நாற்புறமும் ஓதிம விளக்குகள் நிறுத்தி வைக்கப்பட்டு ஒளிர்ந்தன.

அனைத்து நாட்டு மன்னர்களும் அவரவர்க்குரிய இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். பொதுமக்கள், வணிகப் பெருமக்கள், நிலக்கிழார்கள், சான்றோர்கள், புலவர்கள், வேளிர்கள், பாணர்கள், விறலியர், கூத்தர்கள், ஆடவர், மகளிர், வேண்மாடத்தில் பன்னாட்டு அரசியர், இளவரசிகள், அவர்களுடைய தோழியர், பணிப்பெண்கள், காவலர்கள், பணியாளர்கள் இப்படி அனைத்துத் தரப்பினரும் கூடிக் குழுமியிருந்தனர்.

மண்டபத்துக்கு வெளியே எங்கும் இசைக் கருவிகள் முழங்கின. சிறியதும் பெரியதும் குறுகியதும் நெடியதும் வளைவானதும் சுருள் வடிவானதும் ஆன கொங்கு நாட்டு ஊது கொம்புகளை ஒலித்தனர். தோற்கருவிகள் தாள அலகுடன் இசைத்துக் கேட்போரை மகிழ்ந்து ஆடவைத்தன. சோழநாட்டுப் பண்ணிசைக்கும் இசைக் கருவிகள் இசைக்கப்படும்போது கேட்போர் மென்மையாகத் தாளம் போட்டுத் தலையசைக்க வைத்தன. நாட்டுப்புற இசைக் கூத்துகளை மக்கள்

கூட்டம் கூட்டமாக நின்று கண்டு களித்தனர். எங்கும் குதூகலம், கோலகலந்தாம்.

முடிசூடும் நேரம் நெருங்கிவிட்டது. அதைத் துவக்க மங்கல இசை ஒலித்தது. மக்களின் கவனமெல்லாம் அரண்மனை கொலுமண்டபத்தின் பக்கம் திரும்பியது. அடுத்த நிகழ்ச்சியை ஆவலுடனும் ஆர்வத்துடனும் காணத் துவங்கினர்.

மைய மண்டபத்திற்குக் கட்டியங் கூறுவோர் வந்தனர்.

"வடதிசைக் கங்கையும் இமயமும் தென்திசைக் குமரியும் ஆளும் தென்னவன் வாழி"

"தண்டமிழ் காக்கத் தன் இன்னுயிரையும் பணயமாக்கி இன்றும் தமிழ் காக்கும் தென்னவனாம் எம் மன்னன் திருமாறன் வாழி"

"விந்தியம் நடுவாகத் தென்புலமும் வடபுலமும் வெஞ்சமரில் வென்று குமரி முதல் இமயம் வரை தென்னவனாம் பாண்டியரின் ஒரு குடைக்கீழ்ப் புரக்கும் ஞாலமாதேவியே வாழி."

மக்களின் கண்கள் அத்தனையும் முதலில் நோக்கியது தடாதகைப் பிராட்டி, கயல்விழித் தேவி, மீனாட்சி என்னும் அங்கயற்கண்ணியைத்தான்.

சென்னிறப் பட்டாடை அணிந்து, மஞ்சள் நிறப் பொன்னணிகள், வெண்ணிற முத்து வடங்கள், பன்னிற மின்மினிகள், அவள் கருநிற மேனி முழுவதும் செய்முறையான் அணிவித்து அழகு செய்திருந்தனர். இவற்றிற்கெல்லாம் சிறப்பாகப் பன்னாட்டிலும் கிடைத்தற்கரியதாய்க் கிடைத்த செவ்வொளியைச் சிதறும் மாணிக்கத்தால் ஆன மூக்குத்தி அணிந்திருந்தாள். அதைக் கண்ணுற்றவர் வேறெதையும் பார்க்கும் எண்ணத்தையே மறந்தனர்.

அன்று வந்திருந்த அனைவருமே ஆற்றல் மிக்கவர்கள்; ஆளுமைத் திறம் பெற்றவர்கள்; வீரக்குடியினர்; உழுது உண்பிக்கும் வேளாளர்; இசைக்கு ஏங்கும் இனியவர்கள் ஆவர்.

நிமிர்ந்து வீர நடை போட்டுக் கொலு மண்டப நடுவிடத்தே அரியணை நோக்கிச் சென்றனர் அரச குடும்பத்தினர். கயல்விழி ஆடை அணிகளால் அலங்கரிக்கப்பட்டு விண்ணிலிருந்து இழிந்த தேவதைபோல் விளங்கினாள். பார்த்தோர் அனைவரும் மகிழ்ச்சியால் கண் பனித்தனர். நடுநாயகமாக அவள் நடக்க, இருபக்கமும் தந்தையும் தமையனும் சார்ந்தனர். மற்றவர்கள் பின் தொடர்ந்தனர்.

பன்னிரண்டு படிகள் கொண்டதாய் இருந்தது அரியணை. தண்பொழில் நாட்டு எண்ணிக்கையை வைத்துப் பன்னிரண்டு படிகள் அமைத்திருந்தார்கள். கலை நுணுக்கத்தோடு பொன்னும் மணியும் இழைத்துச் செய்யப்பட்டிருந்தது சிம்மாசனம். படிகளில் ஏறித் திரும்பி மக்களைப் பார்த்தார்கள். மக்களின் மகிழ்ச்சி இவர்களையும் தொற்றிக்கொள்ளப் புன்னகையுடன் கையசைத்து வாழ்த்துக்களை ஏற்றார்கள்.

தந்தையும் தமையனும் அவளுடைய இருகரம்பற்றி இருக்கையில் அமர்த்தினர். முதலமைச்சர் பட்டாடையால் மூடிய தங்கத் தாம்பாளத்தில் இருந்த மின்னும் மணிமுடியைத் தென்னவன் பெருங்கோ வழுதியிடம் தந்தார். அத்தனை இசைக் கருவிகளும் முழங்க மக்களின் வாழ்த்தொலி அதனோடு கலந்தது.

தென்னவன் அங்கயற்கண்ணியின் சென்னியில் மணிமுடியைச் சூட்டினார்.

“ஞாலமாதேவி அங்கயற்கண்ணி வாழ்க! வாழ்க!”

வாழ்த்தொலியால் விண்ணதிர்ந்தது. வருங்காலக் கொழுநன் இமய வேந்தன் சோமனாதித்தன் அருகே இருந்து இவற்றையெல்லாம் கண்டு கழி பேருவகை கொண்டான்.

முதலமைச்சர் கையமர்த்தி மக்களின் ஆரவாரத்தை அமர்த்தி அமைதி ஏற்படுத்திவிட்டுச் சொன்னார்.

"பெருமைசால் மன்னர்களே! அறிவுசால் சான்றோர்களே! தென்னவன் மாட்சிமை ஓங்கிட உறுதுணையாய் விளங்கும் குடிமக்களே! நம் மாமன்னர் இந்த அவையிலே ஒரு மகிழ்ச்சிதரும் நற்செய்தியைச் சொல்ல விழைகிறார், நீங்கள் பொறுமை காத்துக் கேட்டிட வேண்டும்."

அனைவரின் முகத்திலும் ஆவல் ததும்பியது. மன்னரே நற்செய்தி அறிவிக்கப் போகிறாரா? ஆயினும் அமைதி காத்தனர்.

"ஞாலமாதேவி! இன்று உலகையே ஆளும் தலைவி ஆயினும் எமது மகளல்லவா? மன்னர்கள் நிறைந்த இம்மண்டபத்தில் அனைவரின் நல்வாழ்த்துக்களுடன் முடிசூடிக் கொண்டார். இதே மண்டபத்தில் இன்று மாலையே உங்கள் முன்னிலையில் அவருக்குத் திருமணம் முடித்திட எண்ணுகிறோம். ஆம். எம் மகள் கயல்விழியும் இமய மன்னர் சோமனாதித்தரும் இருமனமொன்றிக் காதலால் கட்டுண்டு காத்திருப்பதை அறிந்தோம்."

வேல்விழியைப் பார்க்கிறார். அவள் புன்னகைக்கிறாள்.

"சோமனாதித்தரே! வாருங்கள்."

தென்னவன் பெருங்கோ வழுதி கைகளை உயர்த்தி அழைக்கச் சோமனாதித்தன் மேலேறி அரியணை அருகில் வந்து மக்களை நோக்கிக் கரம் குவிக்கிறான்.

மக்கள், "வாழ்க இமய வேந்தர்." என வாழ்த்தொலி எழுப்பினர்.

"அனைவரும் இருந்து மணமுடித்து இவர்களை மீண்டும் வாழ்த்திட வேண்டுகிறோம்."

மக்கள் மனம் மகிழ்ச்சியால் குளிர்ந்தது. முகமெல்லாம் மலர்ந்தது.

# மீனாட்சி திருமணம்

மாலை வந்தது. காலம் குறுகியதாக இருப்பினும் ஏற்பாடுகள் ஏதும் புதிதாகச் செய்ய வேண்டுவதில்லை என்ற நிலையில் வந்திருந்த பன்னாட்டு விருந்தினர்கள் அவர்களுடைய நாட்டுக்குத் திரும்பாதிருந்த நிலையில் திருமண நிகழ்ச்சிகள் செவ்வனே சிறந்த மேற்பார்வையில் நடந்து கொண்டிருந்தன.

அங்கயற்கண்ணி அந்நாட்டுப் பேரரசிதான், ஆனாலும் திருமணம் என்றதும் ஒரு மாதரசிக்குரிய, மணமகளுக்குரிய அணிகலன்களைக் கவின் பெறப் புனைந்து கொண்டாள். அக்கன்னிக்குச் சென்னியிலிருந்து பாதம் வரை அணிகள் பூட்டி அழகுக்கு அழகு செய்தனர்.

சோமனாதித்தனும் மணமகனுக்குரிய சிறப்பு அலங்காரங்கள் செய்து கொண்டு காண்போரை வேறுபக்கம் திரும்ப முடியாத அழகுடன் திகழ்ந்தான்.

மணமகளை வேல்விழி அழைத்துவர, மணமகனைத் திருமாறன் மணமேடைக்கு அழைத்து வர, பல்லாயிரம் கண்கள் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தன.

தென்னவன் பனிமலர் மாலைகளை இருவருக்கும் தந்து மாலைகளை மாற்றிச் சூடிக்கொள்ளச் செய்தான். பல்லியங்கள் முழங்க வாழ்த்தொலி விண்ணை நிறைத்தது.

"எங்கள் குலச் செல்வி அங்கயற்கண்ணி தேவி வாழ்க!"

"எங்கள் செல்வியின் துணைவர் இமய வேந்தர் வாழ்க!"

பனித்த கண்களுடனும் இனித்த இதயத்துடனும் தென்னவனும் திருமாறனும் தாள் பணிந்த மணமக்களை நெஞ்சுருக வாழ்த்தினர்.

# பன்முகத்தேவி மகாசக்தி

அங்கயற்கண்ணியின் வரலாறு, பிற்காலத்தில் புராணத்தோடு கலந்துவிட்ட பிறகு அவள் பற்பல பெயர்களால் அழைக்கப் பட்டாலும், அவை யாவும் ஒரே பெண் சக்தியைத்தான் குறிப்பிட்டன.

தென்னவன் - தக்ஷன் ஆனான்; அவன் மகள் தாக்ஷாயினி ஆனாள்.

பாண்டியன் மகள் ஆனதால் - பாண்டியாயினி (அ) பாண்டேயா ஆனாள்.

இந்தியத் துணைக் கண்டம் முழுமைக்கும் ஒரே பெண் தெய்வமாக - ஆனால் பல்வேறு பெயர்களில் - அவளை வழிபட்டு வருகின்றனர்.

மதுரை - மீனாட்சி - அங்கயற்கண்ணி.

காஞ்சி - காமாட்சி - காமக்கண்ணி.

காசி - விசாலாட்சி - அருட்கண்ணி.

கேரளம் - பகவதியம்மன் (ஊர் மீன் குலத்தி).

மும்பை - மும்பாதேவி.

வங்கம் - காளி - துர்க்கா.

பஞ்சாப் - ஜ்வாலமுகி.

மைசூர் - சாமுண்டீஸ்வரி - மகிஷாசுர மர்த்தினி.

பீகார் - ம(ா)கதநாடு, பாடலிபுத்திரம் - பாடலீஸ்வரி - பாடலீஸ்வர்.

குஜராத் - உக்கிர காளியாகக் காட்சி அளிக்கிறார்.

இன்னும் பல தனிக் கோயில்கள், சக்தி பீடங்களாக நாடெங்கிலும் நிறுவப்பட்டிருக்கின்றன.

கூடல் நகர் நிறுவப்பட்டது. சதுர வடிவான தெருக்கள் கொண்ட பெரிய நகரம் உருவாகி, அதிலிருந்து ஆட்சி புரிந்தாள்.

மாபெரும் அரசியாகத் திகழ்ந்த அவள் பெயர் மென்மையாக ஒலிப்பதை மாற்றி வீரமும் அழகும், ஆட்சித்திறமையும், ஒருங்கே அமையும்படி '**அங்கயற்கண்ணி**' எனவழைத்துப் பெருமைப்படுத்தித் தெய்வமாக வணங்கினர். அதுவே '**மீனாட்சி**' எனவும் வழங்கப்பட்டது. மீனைப் போலக் கண் உடையவள் என்றும், மீனைப் போல மக்களைக் காத்து ஆட்சி செய்பவள் என்றும் பொருள்பட்டது.

மீன் தன் மக்களை (குஞ்சுகளை) எதிரிகளிடமிருந்து காக்க அவற்றை அப்படியே விழுங்கி எதிரியை விரட்டிவிட்டுப் பின்னர்த் தன் பிள்ளைகளை வெளியே விட்டுவிடுமாறுபோல் தன் குடிமக்களுக்கு எவ்வித ஊறும் நேராவண்ணம் பகைவரிடமிருந்து காத்தாள். அதனால், அவள் தெய்வமாக வழிபடுதலில் வியப்பேதுமில்லை.

**சிறந்த ஆட்சி தந்த முதல் பெண்ணரசி அவளே.**

விந்திய மலைக்கு வடக்கேயுள்ள வடவிந்திய நாடுகளையும், அதற்குத் தென் பகுதியிலேயுள்ள தென்

விந்திய நாடுகளையும் தன் ஒரு குடை கீழ்ச் சீர்மையுடன் ஆட்சி செய்து வந்தாள் அங்கயற்கண்ணி. அவள் வீரம் காட்டிய பல ஊர்களில் பல பட்டப் பெயர்களுடன் அழைக்கப்பட்டாள். அவற்றை 51 சக்தி (பீடங்களாக) அமைவிடங்களாகப் போற்றினர். 365 நாடுகளை வென்ற அவள் ஒவ்வொரு நாடும் தென்மதுரைப் பாண்டியர்க்குக் கப்பமாகப் பாண்டிய நாட்டின் ஒரு நாள் செலவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற விதி ஏற்படுத்தினாள்.

அங்கயற்கண்ணி எப்படி மூலச் சக்தியாக விளங்கிப் பல இடங்களில் பல பெயர்களைப் பெற்றாளோ, அதே வண்ணம் அவளுடைய கணவன் சோமனாதித்தனும் (சோமசுந்தரனும்) அந்தந்த இடங்களில் பல் வேறு பெயர்களால் அழைக்கப்பட்டான்.

பிற்காலங்களில் சக்தியின் கணவன் முக்கியத்துவம் பெற்றுக் கோயில்களில் மூலவராக ஆகிவிட்டபோது சுந்ததருக்கே முதல் மரியாதை செய்யப்பட்டது. ஆனால் மதுரை மாநகரில் மட்டும் மீனாட்சிக்கே முதல் மரியாதை வழங்கப்பட்டு வருகிறது.

இல்லறத்தில் அவர்களுக்கு முதலில் ஓர் ஆண்குழந்தை அன்னையின் அழகுடன் கருநிற வடிவுடன் பிறந்தது. கரிய மேனியன் ஆயினும் அவன் முகப் பொலிவு குறித்துக் '**கரிமுகன்**' எனப் பெயரிடப்பட்டுக் கரிமுக வழுதியானான்.

இரண்டாண்டுக்குப் பின்னர் மீண்டும் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. இம்முறை தந்தையின் எழில் முகத்துடனும், சிவந்த மேனியும் கொண்டு அழகின் வடிவமான அவனை, '**முருகன்**' என்று அழைத்தார்கள். ஆயினும், அரசுக்குரிய பெயராக, '**வெற்றிவேல் செழியன்**' எனப் பெயர்ச் சூட்டப்பட்டான்.

தன் இரு பிள்ளைகளையும் சீராக வளர்த்தாள் அன்னை. ஆழ்ந்த அறிவோடு, வீரத்தையும் அவர்களுக்கு

ஊட்டினாள். கலைகள் யாவையும் கற்பித்தாள். சிறப்பாகத் தமிழில் ஆழ்ந்த அறிவு பெறச் செய்து செந்தமிழ்ப் புலவர்களோடு நெருங்கிப் பழகி மொழியின் நுட்பங்களை அறியச் செய்தாள்.

தன் தனித் தன்மையான போர்முறைகளை அவர்களுக்குச் சிறந்த பயிற்சி மூலம் கற்றுத் தந்தாள்.

முன்னர்த் தன் சுற்றுப் பயணத்தின் போது சிறுபடைகளை விட்டு வந்த வாதாபிக்கு வடமேற்கு எல்லையில் கரிமுக வழுதியும், வடகிழக்குப் பகுதியான வேங்கடத்திற்கு வெற்றிவேல் செழியனையும் எல்லை காக்கும் தளபதிகளாக நியமித்தாள்.

பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கும் போது, தம் தாய் நாட்டைச் சுற்றிப் பார்க்கப் பயணம் மேற்கொள்ளும் போதெல்லம் அவர்களும் கூடவே செல்வார்கள்.

அவர்களுடைய அறிவையும், ஆழ்ந்த சிந்தனையையும் ஆற்றலையும் போர்முறை பற்றியும், வியூகத்தையும் படைகளை நடத்தும் முறையையும் படைகளை நிறுத்தும் திறம் பற்றியும் எதிரிகளை வெல்லும் சிறந்த யுக்திகளையும் சாதாரண உரையாடல்கள் மூலம் அறிவித்துப் பிற்காலத்தில் மாபெரும் வீரத்திலகங்களாய்த் தரணியே போற்றும்படி திகழ்வார்கள் என்று மகிழ்ந்து உறுதியாய் நம்பினார்கள்.

கதிர்காமம் சென்ற போது அவ்விடத்தின் இயற்கை அமைப்பை நோக்கி, அங்கு ஒரு நிலையான படையை நிறுத்திடலாம் என்று முருகன் கூற, வியந்தாள் அன்னை.

"ஏன் மகனே? இவர்கள் நம் நண்பர்கள் தாமே? இங்கு எதற்கு நம் பாதுகாப்புப் படை?"

"அம்மா! இன்றிருப்பவர்கள் நண்பர்கள்; நாளை வருபவர்கள்? நம் உதவியினால் தானே பாண்டியர்

உயர்ந்தார்கள் என்ற எண்ணம் வந்துவிட்டால் . . . அவர்கள் நம்மை அடக்க முயல்வார்கள். அவர்கள் தலையெடுக்க விடக்கூடாதல்லவா? ஏன்? நம் தமிழ் மன்னர்களின் செயல் தங்களுக்கு மறந்துவிட்டதா தாயே?”

“நன்று மகனே; நன்று!” வியந்தாள் தாய்.

திரிகோணமலை (ஈழம்) சென்றபோது மக்கள் குவிந்து அன்புடனும் ஆரவாரத்துடனும் வரவேற்றனர். தங்களைப் போல் கறுத்த உருவமுடைய கரிமுகன் மேல் அவர்களுக்கு அன்பு மேலிட்டது. “கறுத்தபிள்ளை“ என்று பாராட்டி மகிழ்ந்து அந்நகரில் “**கறுத்த பிள்ளையாருக்கு**” ஒரு மண்டபம் கட்டிச் சிறப்பிக்கப் போவதாய்ச் சொன்னார்கள்; அப்படியே செய்தார்கள்.

இன்று அகத்தியர் பூஜித்த விநாயகர் விக்கிரகமும் இவ்வாலய உள் வீதியின் திருதி மூலையில் உள்ளது. ‘கறுத்த பிள்ளையார்’ என்றழைக்கப்படுகிறார் இவர். இங்குள்ள முருகன், வில்லூன்றிய வேலவன் ஆகக் காட்சியளிக்கிறார்.

அன்னை அங்கயற்கண்ணி தமிழ்நாட்டை விட்டுத் தன் கணவனுடன் தவம் இயற்ற சென்றபிறகு, தன் அம்மான் திருமாறனின் வாழ்த்துக்களோடு தளபதிகளாக நியமிக்கப்பட்டுக் கரிமுகன் மேற்குக் கடற்கரைப் பகுதிக்கும், வெற்றிவேலன் கீழைக் கடலோரப் பகுதிக்கும் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றார்கள்.

முருகன் விந்திய மலைக்குத் தெற்கே கீழ்ப்பக்கம் வேங்கடமலையிலும், தணிகை மலையிலும் படைவீடுகளை நிறுவினான். தெற்கே செந்தூரில் ஒரு படைவீடு, பாண்டிய நாட்டு எல்லைக்குள் தண்பரங்குன்றம், பழமுதிர்ச்சோலை, ஆவிநன்குடி ஆகிய மூன்று படைவீடுகளை நிறுவினான். சோழ நாட்டில்

ஏரகத்திலும் வயலூரிலும் இரு படைவீடுகள், தொண்டை நாட்டில் மைலம் - கண்டீர நாட்டில் - கந்தக் கோட்டம். இந்த ஊரின் பெயராலேயே அவன் கந்தன் என வழங்கப்பட்டான்.

எருமை நாட்டுக்கருகில் புத்தூருக்கு அருகில் ஒரு படைவீடு. இப்போது அதை சுப்ரமணியர் கோயில் என்கின்றனர்.

இதுபோல் வடபுலத்தில் முருகன் கோயில் எல்லாம் பொதுவாகச் சுப்ரமணியர் கோயில் என்றே அழைக்கப்படுகிறது. கூர்க்கர் நாட்டில் பரதவர் நாட்டில் (பரோடா) கார்த்திக் என்றப் பெயரில் அழைக்கப்படுகிறான். தமிழ்நாட்டில் உள்ளது போலவே முருகனுக்கு உரிய எல்லா விழாக்களும் இன்றும் எடுக்கிறார்கள்.

அங்கயற்கண்ணி தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது மக்கள் மழையின்றித் தவித்தனர். காவிரி சற்று வறண்டதால் சோழ மண்டலமே சோக மண்டலமாகத் திகழ்ந்தது. அன்னை மீனாட்சி அடியெடுத்து வைத்ததும் வானம் பொத்துக் கொண்டால்போல் மழை பெய்து பயிர்களையும் மற்ற உயிர்களையும் காப்பாற்றியது.

மாரி பொய்த்தால் என்னாகும்? அவளை மழை கொடுத்த "மாரி அம்மை" எனப் போற்றினர். கருமாரியென்றும் அவளுக்குக் கோயில் எடுத்தனர். தாயின் முகத்தைப் பார்த்தவர்கள் வேறெங்கும் திரும்பாமல் ஏற இறங்கப் பார்த்து அவள் முழுவடிவையும் கண்டார்கள் இல்லை. முகத்தை மட்டும் வடிவமைத்து வணங்கினர்.

கொங்கு நாடு பொதுவாகவே பாலைத்திணை வகைத்தது. எங்கும் பொட்டல் காடுகள் தாம். மலைகள் சுற்றியிருந்தாலும் அங்கு எங்கும் வரண்ட பூமியே இருந்தது. அங்குப் பாண்டிமாதேவி சென்ற போது மண்குளிர மழை பெய்தது. மக்கள் மகிழ்ந்தனர். அவள் கால்பட்ட இடமெல்லாம் “முத்துமாரி”யாக உருவமைத்துத் தொழுதனர். ஆடி மாதந்தோறும் வேறு பகுதியில் இல்லாத அளவு மாரியம்மனை அவர்கள் இன்றும் தொழுது வருகிறார்கள்.

அவளின் முழு உருவ வடிவங்கள் நவரசங்களையும் வெளிப்படுத்தும் சக்தித் தேவியாக வடிவமைத்து வணங்கினார்கள். எங்கும் சக்தி வழிபாடே ஓங்கியிருந்தது.

மூத்தவன் கரிமுகன் மிக்க திறமைசாலி. மூன்று இடங்களில் தன் படைவீடுகளை அமைத்தான். ஒன்று கடற்கரையோரம் சாம்பு நகரில் கடற்படை. எப்போதும் கடலில் செல்லும் நாவாய்களைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கும். சந்தேகம் எழும்படியாக எந்த நாவாய் சென்றாலும் அஃது அடியோடு அழிக்கப்படும்.

இரண்டாவது வாதாபி. இது தரைப்படை. வடமேற்கிலிருந்து விந்தியமலையைத் தாண்டி எந்த எதிரியும் நுழையாமல் தடுக்கும்.

மூன்றாவது கூர்க்கம். இது மலைப்பகுதி. இதைப் பயிற்சிப் படைவீடு என்றே சொல்லலாம். மலைப் பகுதியானதால் யாரும் அறியாத வண்ணம் சிறந்த பயிற்சி பெறுவார்கள். இதில் இன்னும் சிறப்பு என்னவெனில், அவர்கள் தரைப் போருக்கும், கடற்போருக்கும் சிறந்த பயிற்சி பெற்றவர்கள். கடற்படைக்கு உதவி வேண்டுமானால் சாம்புநகர் நோக்கி விரையும்; அதேபோல் தரைப்படைக்கு உதவி வேண்டுமானால் வாதாபி நோக்கி விரையும்.

இந்த முப்படை வீடுகளில் உள்ளவர்கள் சுழற்சி முறையில் கூர்க்கத்தில் பயிற்சி பெறுவர். மூன்று இடத்திற்கும் சுழற்சி முறையில் மாற்றமும் செய்யப்படுவர். கடலோரத்திலேயே இருப்பதும், மலைப்பகுதியிலேயே இருப்பதும் சற்று மனத் தொய்வை ஏற்படுத்தும் என்பதனால் பட்டணப் பகுதியிலும் சிலகாலம் அவர்கள் பணிபுரிவர்.

படைகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் கணங்கள் - படைத்தொகுப்பு - என அழைக்கப்பட்டன. அதற்கு தலைவனான கரிமுகன் "**கணபதி**" எனப் போற்றி அழைக்கப்பட்டான். அந்தக் கணங்கள் - படைவீரர்கள் - பிற்காலத்தில் முழுமையாக அங்கேயே தங்கி விட்டனர். கரிமுகன் காலத்திற்குப் பிறகு அவர்கள் அந்தப் பகுதி மக்களோடு கலந்து விட்டார்கள்.

பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு அங்குச் சென்ற தமிழர்கள் அல்லது - அங்கேயே இருந்து தமிழ்க் கற்றவர்கள், கரிமுகன் என்ற சொல்லுக்கு 'யானை முகன்' என்றும் "வேழ முகன்" என்றும் பொருள் கொள்ள, அவனுக்கு யானை முகத்தைப் பொருத்திச் சில புராணக் கதைகளையும் இணைத்து விட்டார்கள்.

மனித முகம் கொண்ட கரிமுகன் இன்னும் சில இடங்களில் இருக்கத்தான் இருக்கிறான். கரிமுகனாகச் சென்ற தமிழர் கணத் தளபதி, கணபதியாக வேழ முகத்தோடு பல நூற்றாண்டுகளுக்குப் பிறகுதான் தமிழகத்தில் கடவுளாக மாறி நுழைந்தான். ஆனால் கணபதிக்கு யானைமுகம் இல்லை என்பதை யார் அறிவார்?

விநாயகர் துதி சங்க இலக்கியங்களில் இல்லை. பிள்ளையார் சுழியும் கிடையாது. தேவாரம் பாடிய மூவரும் வேழமுகத்தோனை முதலில் பாடித் துதிக்கவில்லை. தும்பிக்கையில்லாத ஆதி விநாயகர்

சிலை திருச்சியிலுள்ள கிழக்கு பொலிவர்டு சாலையில் தேவதானம் என்ற ஊரில் நன்றுடையான் விநாயகர் கோயிலில் உள்ளது. 7-ம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தர் இந்த விநாயகரை ஒரு பாடலில் குறிப்பிட்டிருக்கிறார். இதிலிருந்து திருச்சியிலுள்ள மிகப் பழமை வாய்ந்த கோயிலாகக் கருதப்படுகிறது. இங்குக் கணேசனுக்கு மனிதத் தலையே அமைக்கப்பட்டிருக்கிறது.

தேவாரப் பாடல்களிலும் யானை முகத்தான் என்ற பெயர் இல்லை. சேக்கிழாரும் விநாயகர் துதி பாடவில்லை. ஆதிவிநாயகர்-தும்பிக்கையில்லா விநாயகர் கும்பகோணம் அருகில் திலதர்ப்பணபுரி என்ற ஊரில் அமர்ந்திருக்கிறார். மயிலாடு துறையிலிருந்து 27 கி.மீ. தொலைவில் உள்ளது.

திருக்கொள்ளிக்காடு-விநாயகருக்குத் தலை போன கதையே இங்கு வேறாக இருக்கிறது. திருவாரூர்-திருத்துறைப்பூண்டி நெடுஞ்சாலையில் மேற்கே 8 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. கொள்ளிக்காடர், பஞ்சின் மெல்லடியாள், கரிமுகன், முருகன் (இங்கு வில்லோடு காட்சி தருகிறார்.) ஆகியோர் சிலைகள் உள்ளன.

மாநகர் மதுரையிலிருந்து மாமலை இமயம் வரையிலான மாநிலத்தை ஆண்ட ஞாலமாதேவி அங்கயற்கண்ணியின் ஆட்சியில் நாடும் நாட்டு மக்களும் சீரும் சிறப்புமாக வாழ்ந்தனர். ஆட்சியாளருக்கு மீனாட்சியாய், அருளாளர், சான்றோர்க்குக் காமாட்சியாய், எளியோருக்கு அருளும் விசாலாட்சியாய், பகைவரைத் தெறும் கொற்றவையாய், வீரகாளியாய், போரில் தடாதகையாய், சூலியாய், வாடியோருக்கு மாரியன்னையாய், எல்லா நிலையிலும் உயர்ந்து வாழ்ந்து காட்டியதால் எல்லோராலும் தெய்வமாகப் போற்றப்பட்டாள்.

இந்து சமயத்தில் ஆரியப் பெண் தெய்வத்திற்கு கொடுக்கப்பட்ட உயர்வைவிடத் திராவிட சமயத்தில் பெண் தெய்வத்திற்குத்தான் ஏற்றம் மிகுதியாகக் கொடுக்கப் பட்டிருந்தது; இன்றும் இருந்து வருகிறது. மதுரை மீனாட்சி இதற்கு விளக்கமாக இருந்து வருகிறாள். முதலில் ஆரியர்கள், ஆண் தெய்வங்களை வணங்கி வந்தார்கள்; அவர்களுக்குத்தாம் ஏற்றம் கொடுத்து வந்தார்கள். ஆரிய திராவிடப் பண்பாட்டுக் கலப்பால் . . . பெண் தெய்வ வழிபாட்டை ஏற்றுக் கொண்டனர். ஆண் தெய்வத்திற்குத் துணையாக்கிக் கொண்டனர்.

ஒரு காலகட்டத்தில் தமிழகம் முழுவதும் பரவியிருந்த மாரியம்மன் வழிபாடு, வட மாவட்டங்களில் - குறிப்பாகத் தென்னார்க்காடு, வடார்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் திரௌபதியம்மன் வழிபாடாக மாற்றம் கொண்டது. இஃது எப்படி நிகழ்ந்தது? திரௌபதிக்கும் தமிழகத்திற்கும் என்ன தொடர்பு? . . . . . பாரதக் கதைகளைப் படிக்கும்போதுதான் திரௌபதியம்மன் கோயில்கள் ஏற்பட்டன. மாரியம்மன் கோயில்கள் திரௌபதியம்மன் கோயில்களாக மாற்றப்பட்டன.

இல்லறத்திலும் சிறந்த தலைவியாய், பெற்றோருக்கு வெல்லும் தவச் செல்வியாய், அண்ணனுக்குப் பாசமுள்ள தங்கையாய், சுற்றத்தை ஆதரிக்கும் அன்புப் பெண்ணாய், பிள்ளைகளுக்கு வீரத்தாயாய், கணவனுக்குப் பெண்ணின் பெருந்தக்க யாவுள எண்ணுமாறு விளங்கி, பெண் குலத்துக்கே உரிய எல்லாப் பண்பிலும் இவளே முதன்மையானவளாகவும் வரலாற்றில் நிலை பெற்றாள்.

இல்லற வாழ்வின் இயல்புக்கும் இலக்கணத்திற்கும் மாறோ, ஊறோ நேர்ந்துவிடலாகாது என்ற முடிவுக்கு வந்தவள், தன் கணவனோடு அவன் உறையும் இமயம் சென்றிட முடிவெடுத்தாள். பிள்ளைகள் தகுந்த அகவையினர்; அவர்களால் அவர்கள் கருத்துக்கேற்ப

வாழ்ந்திட முடியும் என்ற நிலையினை அடைந்து விட்டனர். ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுக்காலம் பேரரசியாக ஒளிர்ந்து விட்டாள். எந்தவிதமான இடர்ப்பாடுமின்றி நல்லாட்சி தந்துவிட்டாள். போதும், இனி மன அமைதி ஒன்றுமட்டுமே போதும், என்று தன் கணவனோடு இமயம் சென்று நற்றவமியற்றி அங்கேயே வாழ்நாள் முழுவதம் கழித்துவிட முடிவெடுத்தாள். அதை அவள் தன் கணவன் சோமனாதித்தனிடம் சொன்னபோது, அதை அவன் எதிர்பாராததால் சற்றே அதிர்ந்தாலும், உடனே தெளிந்து மிக்க மகிழ்வெய்தினான்.

அத்தாணி மண்டபத்தில், அங்கயற்கண்ணி தனது பதினைந்து ஆண்டு ஆட்சிக்காலத்தை முடித்துக் கொண்டு இம்முடிவை அறிவித்தபோது, உற்றார், உறவினர், உடன்பிறந்தோர், நாட்டு மக்கள் அனைவரும் அதிர்ந்தனர். அவளுடைய இந்த முடிவை மாற்றிக் கொள்ள வேண்டி மன்றாடினர். ஆனால், அவள் தன் முடிவில் காட்டிய உறுதியினை அனைவரும் ஒப்புக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லாமற் போயிற்று.

அதன் தொடர்ச்சியாகத் தன் தமையன் திருமாறனுக்கு முடிசூட்டி "**முடத்திருமாறன்**" என்ற பெயரில் மற்ற அனைத்துப் பகுதிகளுக்கும் மாமன்னன் ஆக்கினாள்.

'என் இரு மகன்களும் அவருக்குச் சேனாதிபதிகளாக மட்டும் இருந்து நாட்டைக் காக்கும் பொறுப்பை ஏற்பார்கள். ஆனால், மன்னனாகும் பிறங்கடை (வாரிசு) உரிமையைக் கோரமாட்டார்கள் என்னும் வாக்குறுதி பெற்றுக் கொண்டுள்ளேன். அவர்கள் நாட்டைக் காக்கும் தளபதிகள் மட்டுமே. ஆம். பாண்டிய நாட்டுக்கு மன்னன் ஒருவன்தான்; அவன் பிள்ளைகள்தாம் பிறங்கடை (வாரிசு) உரிமையினால் அரசுப் பட்டம் எய்துவர், மற்ற குடும்ப உறுப்பினர்கள்

எல்லாம் அமைச்சர்களாகவும் தளபதிகளாகவும் துணையிருப்பார்கள். இதுவே பாண்டியர்களின் ஆட்சி முறை அமைப்பாக இருக்கும்.'

மதுரையிலிருந்து புறப்பட எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன. அரண்மனையைவிட்டு வெளியே வந்த அங்கயற்கண்ணி அங்கே நிறுத்தப்பட்டிருந்த கோட்டாற் செய்த கொடுஞ்சி நெடுந்தேரைப் பார்த்தாள்.

"அண்ணா! இது மன்னர்க்கே உரிய தேர். இஃது இங்கேயே இருக்கட்டும். நான் வரும்போது பயணித்த பொற்றேர் நல்லபடி பழுதுகள் நீக்கப்பட்டுப் புதியனபோல் மாற்றியிருக்கிறேன். அதிலேயே புறப்படுகிறேன்."

"தங்காய்! உன் எண்ணம் அதுவானால், நீ அவ்வாறே செய். ஆனால், மக்கள் வடம்பிடித்து உன்னை ஊர்வலமாக இழுத்த தேரில் ஏறிச் செல்ல இனி எவருக்கும் தகுதி கிடையாது. ஆயினும் ஆண்டுதோறும் நீ வெற்றித் திருமகளாக மதுரையில் நுழைந்த நாளில் உன் உருவம் அத்தேரில் வலம் வரும். மக்கள் வடம்பிடித்து இழுப்பார்கள். இஃது என் முடிவு."

"வாழ்க! பொற்கைப் பாண்டியர் வாழ்க!" மக்களின் ஆமோதிப்பின் பேரொலி.

அண்ணனின் தாள் பணிந்து விடை பெற்றாள்.

குமுறிப் பொங்கும் உள்ளத்தோடு அருகில் வேல்விழி.

"கயல்விழி, உன்னோடு நானும் வந்துவிடுகிறேன். உன்னைப் பிரிந்து ஆற்றேன்."

வேல்விழிகளிலிருந்து நீர் வழிந்தோடியது. பொங்கிவரும் கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் கயல்விழி. தோழிக்காகக் கண்ணீர் விட்டால் தான் எடுத்த முடிவுக்குத் தானே வருந்துவது போலாகாதா?

"வேல்விழி! நான் என் கணவனோடு இருக்க இமயம் செல்கிறேன். அஃதே போன்று நீயும் உன் கொழுநனோடுதானே இருக்க வேண்டும்? கண்ணீரைத் துடைத்திடு; எனக்கு விடைகொடுத்திடு."

"ஞால மாதேவியாக உலகளவில் புகழ் உச்சியில் இருந்தாய். இனி, உலகின் மாமலையாம் இமயத்தின் உச்சியிலிருப்பாய். எந்நாளும் உலகநாயகியாக உச்சியிலே இருந்து இல்லற நாயகியாகவும் இருந்து வழி காட்டு."

"ஆ! இதுதான் என் தோழி. அம்ம வாழி என் தோழி."

"அம்ம, வாழிஇ என் தோழீஇ!"

இருவரும் தழுவிக் கொள்கின்றனர்.

பாதை நெடுகிலும் இரு மருங்கும் ஆரவாரத்தோடும் மகிழ்ச்சியோடும் அன்று கூடி வரவேற்ற அதே மக்கள், இன்று விழிகளில் நீர் வழிய வழியனுப்ப, பிரியா விடை கொடுக்கக் கூடி, அவள் செல்வதைத் தேர் அவர்களுடைய பார்வையை விட்டு மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, விழி நீரைத் துடைத்தபடி இல்லம் திரும்பினர்.

குத்திட்ட பார்வையோடு அமர்ந்திருந்த கயல்விழியிடம் சோமசுந்தரன் கேட்டான்.

"கலங்குகிறாயா தேவி?"

"உலகையே ஆண்டாலும் பிறந்த மண்ணின் மேலுள்ள பற்று நீங்காதென்பர். ஆனால், நான் பிறந்து வளர்ந்த மண் இன்று கடலுக்குள். நான் வென்றவிடமெல்லாம் இன்று என்னுடையது. ஆண்டது மதுரையில் இருந்து என்றாலும் நான் இறுதிவரை இருக்க வேண்டியது உங்கள் பனிமலையின் மடியில்தான். இதில் குழப்பம் ஏதுமின்றித் தெளிவாகவே இருக்கிறேன். ஆனால், இந்தப் பதினைந்து ஆண்டுகளில் நீங்கள் உங்கள் மண்ணையும் மக்களையும் பிரிந்ததாக உணர்கிறீர்களா பெருமானே?"

"தேவி, நான் உன்னளவு பக்குவப்பட்டவன் அல்லன். ஆயினும், உன் உறவு என்னை உன்னோடு இணைத்துவிட்டது. நான் பிறந்த பயனைப் பெற்றவனாய் உணர்கின்றேன்."

அவள் அவன் தோளில் சாய்ந்து கண் அயர, அவன் அவளை மெல்ல அணைத்துத் தலையைக் கோதிவிட்டான். இப்படிப்பட்ட தனிமையும் இனிமையும் பெற்றதால் உள்ளம் மயங்கினர். தேர் போய்க் கொண்டேயிருந்தது.